

என்னை
யாரென்று
எண்ணி...
ரமணிசந்திரன்

# என்னை யாரென்று எண்ணி...

## 1

**கை**களை உயர்த்தி, மேலே கோர்த்துச் சோம்பல் முறித்தான், சத்யசீலன்.

அலுவலக வேலை முடிந்தது. இனி, அத்தையைப் போய்ப் பார்க்க வேண்டும். போனால் எதற்காகவாவது, நை, நை என்பார்கள். குறைந்தது ஒரு மணி நேரம் அறுப்பார்கள். இன்று அதைச் சகித்துத்தான் ஆக வேண்டும். ஏனென்றால், இந்த சந்திப்பை, ஏற்கனவே, அவன், ஒருவாரம் தள்ளிப் போட்டுவிட்டான். அதுவும், 'உடனே வா' காமேசுவரி - அத்தை தான், உத்தரவிட்ட பிறகும்!

காத்துக்கொண்டிருந்தாற்போல, சத்யசீலன், 'பஸ்ஸ'ரை அழுத்திய மறுகணமே, ஆஃபீஸ் பையன் ரத்தினம் கதவைத் திறந்துகொண்டு உள்ளே தலையை நீட்டினான்.

முதலாளியின் கண் குறிப்பை ஏற்று, மேஜை மீதிருந்த சிறு கைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு போய்க் காரில் வைத்தான்.

சலாம் அடித்துவிட்டு, அவன் கிளம்ப, 'செக்யூரிட்டி' ஆட்களிடம் ஒரு தலையசைப்புடன், சத்யசீலன் காரை எடுத்தான்.

காமேசுவரியின் வீட்டு போர்டிகோவில் காரை நிறுத்திவிட்டு, இறங்கி, வீட்டினுள் செல்லும்போது அவன் முகத்தில் ஓர் ஏளனப் புன்னகை அரும்பியது;

எப்போதுமே, இங்கு வரும்போதெல்லாமே, அவனுக்கு இதே உணர்வுதான் உண்டாகும்.

ஏளனமும் கூடவே ஓர் இரக்கமும்.

பித்தளைப் பூண்களும் பிடிகளுமாக எட்டடி உயரவெளிக் கதவுகளும், காரோடும் பாதையில் நூற்றுக்கணக்கான விலைஉயர்ந்த செடிகளுடன்கூடிய தொட்டிகள், தொட்டிகளும் விலை உயர்ந்தவையே, தரையில் பாவப்பட்டிருந்த அறுகோண வடிவச் செங்கல்கள், கொத்து விளக்குகள், இவை தாண்டி, உள்ளே சென்றால், சலவைக்கல் தரையும், காஷ்மீர்க் கம்பளமும், பெரியபெரிய சரவிளக்குகளும், பளபளக்கும் உலோகச்சிலைகளும்...எதற்கு இந்தப் படாடோபம்?

அத்தை பணக்காரிதான். இல்லையென்று சொல்ல முடியாதுதான்! ஆனால், இந்த அளவுக்குப் பெரும் பணக்காரி அல்லவே! கோடீசுவரியே, ஆனால், பெரும் கோடீசுவரி அல்ல.

இந்தப் பெரும் கோடீசுவரித் தோற்றத்தைக் காப்பாற்று-வதற்காக காமேசுவரி அத்தை, செய்யவேண்டிய - செய்து கொண்டிருக்கும் செலவை நினைக்கையில், சத்யனுக்கு உள்ளூர ஆத்திரம் வரும். கூடவே, என்ன அசட்டுத்தனம் என்று பரிதாபமாகவும் இருக்கும்.

அநாவசியம். இந்தப்பகட்டு இல்லையென்றால், இவளை யாரும் மதிக்கமாட்டார்களாமா?

அல்லது, இந்த ஆடம்பரத்தில் மட்டுமே மயங்கி எந்தப் பெரிய பணக்காரனாவது, சுந்தருக்குத் தன் பெண்ணைக் கொடுத்து விடுவான் என்கிற எண்ணமா?

அத்தையின் முக்கிய காரணம், இரண்டாவதுதான் என்பது, சத்யசீலனின் ஊகம்.

அது, சரியே என்றது, அவன் அத்தையோடு அன்று, அவன் நடத்திய பேச்சு. அவனைக் கண்டதும், ஓடிவந்து நின்ற



பணியாளரிடம் சொல்லியனுப்பிவிட்டு, அத்தையின் வரவுக்காக, ஹாலில் காத்திருக்க - அதுதான், அந்த வீட்டு வழக்கம் என்றாலும், அப்படிக் காத்திருக்க அவனுக்கு மனமில்லை.

ஹாலில் அமர்ந்துகொண்டு, வேலையாளிடம் சொல்லியனுப்பினால், சந்தோஷம் போல, உடனேயோ, அன்றி, சற்றுத் தாமதமாகவோ காமேசுவரி, அங்கு வந்து தரிசனம் தருவாள்.

பொதுவாக, அத்தையின் விருப்பப்படி, இந்த மாதிரியான அவள் வீட்டுச் சம்பிரதாயங்களுக்கு, சத்யனும் மதிப்புக் கொடுப்பது உண்டுதான்.

ஆனால் இன்று, காமேசுவரியின் வருகையை எதிர்பார்த்து, உட்கார்ந்திருக்க, அவனுக்கு விருப்பமில்லை. முக்கியமாக, அப்படிக் காத்திருக்கும் பொறுமை இன்று அவனுக்கு இல்லை எனலாம்.

கடந்த ஒரு வாரமாக, அவனுக்கு வேலை மிக அதிகம். முழு மூச்சாக வேலைசெய்து, ஒரு 'லோடு' சரக்கை ஏற்றுமதிக்காக அன்றுதான் தயார்பண்ணி முடித்திருந்தான்.

நியாயத்துக்கு, அவன், நேரே வீட்டுக்குப்போய், விழுந்து படுத்து, ஓய்வெடுத்திருக்க வேண்டும்.

ஆனால், பாவம், அத்தை, ஒரு வாரமாய்த் தினமும் கூப்பிடுகிறாளே, என்றுதான், அவன் இங்கே வந்தது இதற்கு மேல், காத்திருப்பதாவது, இன்னொன்றாவது?

வேலையாளிடம், காமேசுவரி இருக்குமிடத்தைக் கேட்டு அறிந்து கொண்டு, சத்யன், பணியாளுக்கு முன்பாக, நேராக அவளிடம் சென்றான்.

அங்கே மாடியறை ஒன்றில், சோஃபா கால்மீது முதுகைச்

சாய்த்து, இருகால்களையும் நன்றாக நீட்டியவாறு அமர்ந்து, பழையகாலத்து முறம் ஒன்றில் இருந்த கடலைகளை உடைத்துத் தின்றுகொண்டிருந்தாள் அத்தையம்மாள்.

விரித்த கூந்தல் வேறு!

எப்போதும், சீமாட்டி போஸ் கொடுக்கும் அத்தையின் இந்தத் தோற்றத்தைக் கண்டதும், சத்யசீலனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. வெகு சிரமப்பட்டு, அந்தச் சிரிப்பு முகத்தில் தெரிந்துவிடாமல் சமாளித்தான் அவன்.

இந்த நிலையில், அண்ணன்மகன், தன்னைப் பார்த்தது - அதை விடவும், ரொம்பவும் சாதாரணமான நிலையில் உள்ளவர்களைப்போல அவள் உட்கார்ந்திருந்ததை, அண்ணன் மகன், பார்த்து விட்டதுதான், காமேசுவரிக்கு மிகவும் அவமானமாகி விட்டது.

அவசர அவசரமாக, கடலை இருந்த முறத்தை சோஃபாவுக்கு அடியில் தள்ளிவிட்டு, எழுந்து, சேலையை உதறிவிட்டுக்கொண்டு, தலை முடியை இருகரங்களாலும் கோதிச் சரிப்படுத்தியபடி, சோஃபாவில் கால் மேல் கால்போட்டு அமர்ந்தபிறகேதான் அண்ணன் மகனை, அவள், தலைநிமிர்ந்து பார்த்தாள்.

"என்னடா, இப்போதுதான் இந்த வீட்டுக்கு வரும் வழி தெரிந்ததா?" என்று கோபமாகக் கேட்டாள்.

தாமதமாக வந்ததற்காக மட்டுமே, அத்தை தன்மீது, ஆத்திரப்படவில்லை. ஒரு சாமானியப் பெண்போல, அவள் தரையில், தளர்ந்து, அமர்ந்திருந்ததைப் பார்த்துவிட்டதற்காகவும் தான் என்பதை நன்றாகவே உணர்ந்திருந்த சத்யன், "சாரி அத்தை!" என்று பணிவாகவே பேசினான்.



"கொஞ்சநாளாக ஒரே வேலை, அத்தை. இன்றுதான், கொஞ்சம் மூச்சுவிட முடிந்தது. உடனே ஓடிவந்தேன்" என்று விளக்கமும் கொடுத்தான்.

"ஆமாம், கேட்டால் ஆயிரம் சொல்வாயே! அங்கே, உனக்குக் கீழே தலைமை நிர்வாகி, அலுவலக நிர்வாகி, தொழிற்சாலை நிர்வாகி, அவர்களுக்குக் கீழே பலபேர் என்று, எத்தனை ஆட்கள் இல்லை? அவர்களில், ஒருத்தரிடம், பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, உன்னால், ஓர் அரைமணி நேரம் இந்த அத்தைக்காக ஒதுக்கி, இங்கே, வந்துபோக முடியாதாக்கும்? சும்...ம்மா, என்னடா, கதை?" காமேசுவரி சமாதானப்பட மறுத்தாள்.

பெருமூச்சை உள்ளடக்கி, அத்தையம்மாளைச் சமநிலைக்குக் கொண்டுவர, சத்யன், சற்றுநேரம் செலவு செய்தான். கடைசியாக, "ஆமாமடா, பொறுப்பை எல்லாம், உன் தலையில் கட்டிவிட்டு அண்ணனும், அண்ணியும், ஜாலியாகப் பாரீசில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். இங்கே நீ உழைத்து உழைத்து ஓடாகிக் கொண்டிருக்கிறாய்!" என்று உருகத் தொடங்கினாள், காமேசுவரி.

அத்தை, ஏதோ பெரிதாக அடி போடப் போகிறாள் என்று, சத்யனுக்குத் தோன்றியது. எனவே, இந்த உச்சந்தலை ஐசை ஒத்துக் கொள்ளாமல், அத்தோடு, நியாயமாகவும் பேச விரும்பி, "அப்பாவும் அம்மாவும், பாரீசுக்குச் சும்மா போகவில்லையே, அத்தை! தொழிலைப் பார்க்கத்தானே போயிருக்கிறார்கள்?" என்றான்.

"அதெல்லாம் சும்மாடா! ஏன்? தொழிலைப் பார்க்க உன்னை அனுப்பக்கூடாதா? இந்த வயதில் உன் அம்மாவுக்கு வெளிநாட்டு வாசத்துக்கு ஆசை! அதிலும், பா...ரீஸ்! நைட்கிளப்

அது இது என்று அங்கே அத்....த்தனை இருக்கிறதல்லவா?" என்றாள். அத்தையம்மாள், நாத்தனாராக.

சிரிப்பை அடக்கிக்கொண்டு, "அப்படியெல்லாம் இல்லை, அத்தை. அம்மா, அப்பா, இரண்டு பேருக்குமே, அங்குள்ள தட்பவெப்பம் ஒத்துப்போகிறது. போய்ப் பார்த்துக் கொள்ளலாம் அத்தோடு, பா...ரீ...ஸ்! நைட் கிளப். அதுஇது அங்கே இருக்கும் அத்....த்தனையில், சின்னப்பையன், நான், கெட்டுப் போய்விடக் கூடாதல்லவா? அதனால்தான், அம்மா, அப்பா அங்கேயும், நான் இங்கேயும் இருப்பது என்று, நாங்கள் சேர்ந்து பேசி முடிவுசெய்தோம்" என்று தன் பெற்றோரின் நிலையைச் சத்யன் நியாயப்படுத்தினான்.

"என்ன செய்தாலும், உன் அம்மாவை விட்டுக் கொடுக்க மாட்டாயே! அத்தோடு, நீயாவது...கெட்..ட்..டுப் போவதாவது? அப்புறம், சூரியன்! மேற்கே, உதித்து விடாதா? ஊ...ம், எனக்கும், ஒன்று வந்து பிறந்திருக்கிறது, பார்!" என்று ஒருவழியாக, காமேசுவரி, விஷயத்துக்கு வந்தாள்.

காமேசுவரியுடைய ஒரே மகன், சுந்தர். இரண்டு, மூன்று தங்காமல் போய்விட்ட பிறகு, உண்டாகிப் பிறந்ததால், கண்ணின் கருமணி. அவனுக்கு அப்புறமும் பிள்ளைகள் பிறவாததால், மகா செல்லம்! தன் அருமைப்பிள்ளைக்கு இந்த உலகத்தையே அள்ளிக் கொடுத்துவிடத்தான், காமேசுவரிக்கு ஆசை! ஆனால், இந்த உலகம் அவளுக்குச் சொந்தமானது இல்லையே!

எனவே, இயன்றமட்டும், மகனுக்குத் தேவை என்று அவள் கருதியவற்றையெல்லாம், அவனுக்கு வாங்கிக் கொடுத்தாள். மகன் விரும்பியவற்றையும் கூட.

அங்கேதான் இப்போது சிக்கல் தலைகாட்டியிருந்தது.

பிள்ளை ஆசைப்பட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்தே



பழகியிருந்த அம்மாவுக்கு, இப்போது, மகன், கேட்டதைத் தரக் கொஞ்சமும் மனமில்லை.

ஏனெனில், மகன் கேட்டதும் அப்படி, மகன் விஷயத்தில், தாயின் திட்டங்களும் அப்படி!

காமேசுவரிக்கு, மகன், பென்சிலும், டயோட்டாவிலும் சுற்ற வேண்டும். கன்கார்டில் பறக்கவேண்டும். அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் என்று ஒவ்வொரு நாட்டுப் பெரிய நகரங்களிலும், சொந்தமாய் மாளிகைகள் வைத்திருக்க வேண்டும், ஆங்காங்கே, ஹெலிகாப்டர்கள், விமானங்கள்... ஆசைக்கு அளவேது?

ஆனால், குறைந்தபட்சமாய், இந்தியாவின் பெரிய நகரங்கள் அனைத்திலுமேனும் 'சென்ட்ரல் ஏசி' யுடன் கூடிய மாளிகைகள் இருக்க வேண்டாமா?

இருக்கிறது, சென்னையிலும், ஊட்டியிலும், சொந்த ஊரிலும் இன்னும் அவர்கள் குடும்பத்தொழில் நன்றாக நடக்கும் கோவையிலும் கூட, காமேசுவரி வீட்டாருக்குச் சொந்த வீடுகள் உண்டுதான்.

ஆனால், காமேசுவரியின் ஆசை, உள்ளதைவிடப் பத்து மடங்கு அதிகம் ஆயிற்றே!

இதையெல்லாம் எப்படி சாதிப்பது?

ரொம்பவும் எளிது! சுந்தருடைய தாயார் அதற்கு நல்லதாய், ஒரு திட்டம் வைத்திருந்தாள். அந்த மாதிரிப் பெரும் பணக்காரர் ஒருவருடைய ஒரே மகளை, மகனுக்குக் கட்டி வைத்து விடுவது! எவ்வளவு சுலபம்!

அப்படி ஒரு பணக்காரன், சுந்தருக்குத் தன் பெண்ணைக் கொடுப்பானா என்றால்.....ஊகூம், அந்த மாதிரிச் சந்தேகமெல்லாம், காமேசுவரிக்குக் கிடையவே கிடையாது.

அவளுடைய அபிப்பிராயத்தில், அவளுடைய அருமை மகனுக்கு ஈடான ஆண்மகன், இந்த உலகத்தில் ஒருவருமே கிடையாது. ஆகவே, அவனை மருமகனாக்கிக் கொள்வதற்காகப் பெரிய பெரிய கோடீசுவரர்களெல்லாம், ஒற்றைக்காலில், க்யூவில் நின்று கெஞ்சப் போகிறார்களே!

சின்ன மீனைப் போட்டால்தானே, பெரிய மீனைப் பிடிக்க முடியும்?

இப்படி மீன்பிடிக்கிற ஆசையில்தான், காமேசுவரி, மகனை, அவனுடைய பாட்டி வீட்டுக்கு அனுப்பி வைத்ததும்கூட.

பாட்டி என்றால், பார்வதி அம்மாள் சத்யசீலனுக்கும் பாட்டிதான். சத்யனுக்குத் தந்தையைப் பெற்ற பாட்டி, சுந்தருக்குத் தாய் வழி.

பார்வதியம்மாளுக்குச் சொத்துக்கள் நிறைய உண்டு. விருப்பம் போல, மனைவி, தன் கையிலிருந்து சுதந்திரமாகச் செலவுசெய்து வாழ்வதற்கு வசதியாக, அவர் கணவர், அவருக்கு நிறைய வருமானத்துக்கு வகை செய்து வைத்திருந்தார்.

தன் மனைவியின் குணம் அறிந்து, அவர் செய்தது, அது.

பெற்ற பிள்ளைகளே ஆயினும், மகனையோ, மகளையோ, சார்ந்து வாழ மனமின்றி, பார்வதி, மதுரையில் தனியாகத்தான் வாழ்ந்து வந்தார். சொல்லப்போனால், தங்களோடு சேர்ந்து சென்னையில் அவர், வசிக்கப் போவது இல்லை என்று வெகு நிச்சயமாகத் தெரிந்தபிறகுதான், குணசீலன் தம்பதியர் சத்யனுடைய பெற்றோர், பாரீசுக்குக் குடிபெயர்ந்ததே.

தாயும், மகளுமே என்றாலும், பார்வதிக்கும், காமேசுவரிக்கும் ஒரு நாளுமே, அவ்வளவாக ஒத்துப்போனது கிடையாது.



பார்வதி, எப்போதுமே நேர்வழி செல்லுகிறவர். மகளின் வளைசல், குழைசல், குறுக்குவழி...இதெல்லாம் அவருக்கு அடியோடு பிடிப்பதில்லை. தாய் என்கிற முறையில், மகளைத் திருத்த முயற்சிப்பார், கடுமையாகப் பேசியும்கூட.

கண்ணில் பட்டாலே, இது சரியில்லை, அது தப்பு, என்று, காமேசுவரிக்குத் திட்டுதான் விழும்.

இதனாலேயே, தாயார் வீட்டுப்பக்கம், அவள் தலைகாட்டுவது கூடக் கிடையாது!

ஆனால், தலைகாட்டாமல் ஒதுங்கிப் போவது, அவள் மட்டும் தான். மகன் சுந்தரரை மட்டும் 'பாட்டியைப் போய்ப் பார்த்துவிட்டு வாடா' என்று அம்மா வீட்டுக்கு அனுப்பி வைப்பாள்.

பெற்ற மக்களைத்தான் திட்ட முடியும். பேரப்பிள்ளைகளிடம், பாசம்தானே காட்ட முடியும்?

சத்யனும், பேரன்தான். ஆனால், அடிக்கடி பாட்டியிடம் போய் நிற்கமுடியாத அளவுக்கு அவனுக்கு வேலைப்பளு அதிகம். பார்வதியும் பேரன் வேலையைப் போட்டுவிட்டுத் தன் அருகிலேயே இருக்க வேண்டுமென்று, விரும்புகிறவர் அல்ல.

அதிலும், சிறுவயதிலேயே, சத்யசீலன், முழுப்பொறுப்பேற்று, தொழிலை, வெற்றிகரமாக நடத்துகிறான் என்று, பெருமை வேறு. அவரும், சோம்பியிருந்து ஓய்வெடுக்கிறவர் அல்ல, என்பதால், 'போய் வேலையைப் பார்' என்று அவனை அனுப்பி விடுவார்.

கால் மூட்டுகள் தேய்ந்து போய், நடமாட முடியாமல் போய் விட்டபிறகும் சக்கர நாற்காலியில் அமர்ந்து, இந்தத் தர்ம காரியம், அந்தக் கோயிலில் வைபவம் என்று இங்குமங்கும்

சுற்றிக்கொண்டிருப்பவர். நேரத்தின் மதிப்புத் தெரிந்தவர், அதற்கு, மதிப்புத் தருபவரும்கூட.

சுந்தரையும் கூட, அங்கே சும்மா அனுப்பி வைத்தால், "இங்கே என்ன வெட்டிப்பொழுது போக்குகிறாய்? வீட்டிற்கு போய் ஏதாவது கோர்ஸ் எடுத்துப் படி. அல்லது, உன் அப்பாவோடு சேர்ந்து தொழிலில் ஈடுபடு" என்று விரட்டி விடக்கூடியவர்தான்.

அதனாலேயே, மதுரையில், மகனை, ஒரு 'கோர்ஸ்' எடுத்துப் படிக்கச் செய்திருந்தாள். 'பைனான்ஸ்' தொழில் நடத்தும் அவன் தந்தைக்கு உதவியான படிப்பு, 'ஐபிஎஸ் ஃப்ரேம் ஏஎஸ்400 வில், ப்ராஜெக்ட்டோடு ஓராண்டுப் பயிற்சிதான்' என்று சாதித்து, சுந்தரை அதில் சேர்த்திருந்தாள்.

'மதுரையில், படிக்கும் பேரன், பாட்டி வீடு அங்கிருக்கும் போது வெளியே தங்கி படிக்கலாமா?'

"என்னம்மா, பாட்டி வீட்டில் படுபோரடிக்கும்" என்று முதலில் சிணுங்கிய சுந்தரைப் பலவாறு வற்புறுத்தி, அங்கேயே தங்கச் செய்தாள்.

ஏதோ நல்ல காலமாக தொடக்கத்தில் விருப்பமற்றுச் சென்ற சுந்தரும், பின்னர் சந்தோஷமாகவே பாட்டி வீடு போகத் தொடங்கி விட்டான்.

முதலில் எல்லாம் சனி, ஞாயிறு லீவு நாட்களுக்கு வீடு வரும் சுந்தரை, மீண்டும் கிளப்ப, காமேசுவரி, படாத பாடுபட வேண்டியிருக்கும்.

என்னவோ, கூடப்படிக்க ஒரு சிநேகிதன் கிடைத்திருக் கிறான் அவன் சகோதரி, வேலைபார்த்து அவனைப் படிக்க வைக்கிறாள். இப்படி ஏதேதோ சொல்லுவான்.



மண்டைக்குள், பல்வேறு திட்டங்களை உருட்டிப் புரட்டிக் கொண்டிருக்கும் காமேசுவரி, இதைக் காதில் வாங்கியதே இல்லை.

வாங்கியிருந்தால், இவ்வளவு தூரம், வந்திராதோ?

திருமண மார்க்கெட்டில் மகனுக்கு முக்கியத்துவம் கூட்டக்கூடிய பெற்றவளின் சொத்துக்களைப் பற்றியும், பேரன் மீதுள்ள அன்பு மிகுதியாகி, எப்போது அம்மா, அந்தச் சொத்துக்களை, அவன் மீது எழுதி வைக்கப் போகிறாள் என்றும் கணக்கிட்டுக் கொண்டிருந்த காமேசுவரிக்கு, மகனின் பேச்சு, மனதில் பட்டதே இல்லை.

இப்போது, முதலுக்கே மோசமாகி விடுமோ என்று கவலைப்படுகிற நிலைமை!

விலாவாரியாகத் தன் பேராசையையும், பணக்கணக்கு களையும், திட்டங்களையும் காமேசுவரி, மருமகனிடம் விளக்காவிட்டாலும், சத்யனால் விஷயத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது.

சுந்தர், பாட்டி வீட்டில் தங்கமட்டும் என்று காமேசுவரி தொடங்கியபோதே, அவன் ஊகித்ததுதான்.

அவன் மட்டுமல்ல, பார்வதியும்கூட. "உன் அத்தை பேராசை பிடித்தவள்தான் என்றாலும், சுந்தர் நல்ல பையனடா. அவன் அம்மாவை விட்டுப்பிரிந்து, அவன், கொஞ்ச காலம் இங்கே இருப்பதும் நல்லதுதான். இருக்கட்டும்" என்று மகன் பிள்ளையிடம், சொல்லி விட்டுத்தான் அடுத்த பேரன், தன்னோடு தங்க அனுமதி கொடுத்தார்.

பாட்டியின் கண்களைத் தற்செயலாகக் கவனித்த சத்யனுக்கு, பாட்டியின் மனதில் வேறு திட்டங்களும், ஏதேனும் இருக்கக்கூடுமோ என்றோர் ஐயமும் ஏற்பட்டிருந்தது.

அதுபற்றி, அவன் கேட்டதற்கு, "அதெல்லாம் ஒன்றுமில்லையடா" என்று சிரித்து மழுப்பிவிட்டார், பெரியவர். "சுந்தருக்கு அதற்கான முதிர்ச்சியே இன்னும் ஆகவில்லையே" என்றார், பூடகமாக.

இப்போது, அவசரமாகக் கூப்பிட்டு, காமேசுவரி, மகனைப் பற்றிச் சலிப்பாகவும் பேசவே, சத்யனுக்கு ஆச்சரியமாக இருந்தது. சுமார் ஐந்து மாதங்களுக்கு முன், 'ஆகாத முதிர்ச்சி' இப்போது, ஆகியிருக்க முடியாது வேறென்ன?

இருந்தது.

அதையும், காமேசுவரி அவளது பாணியில் சொன்னாள். சத்யனால்தான் எல்லாம் வந்தது, என்றாள்.

சத்யன், வியப்புடன் நோக்கவும், "பின்னே என்னவாம்?" என்று கண்ணில் சிரிப்புடன், சத்யனிடம் வினவினாள்.

"இல்லையா? முழு...சாக, இரண்டு...சரீ...ஓர் ஆண்டும், ஒரு மாதமும் தான் வைத்துக்கொள்ளேன். அப்படியே' இருக்கட்டுமே. பெரியவன் என்று வழிகாட்டலுக்கு, அவன் எதிர்பார்ப்பது உன்னைத்தானே?"

"தாராளமாக என்னைப் பார்த்துப் படிக்கட்டும். கூடாது என்று நான் ஒன்றும் சொல்லவில்லையே, அத்தை?"

"ஆ...மாம், சர்க்கரையாய்ப் பேசு. உன்னைப் பார்த்துப் படிப்பதற்கு, முதலில், சுந்தர், உன்னைப் பார்க்க வேண்டுமல்லவா? அவனை, நீ, சந்தித்து, எத்தனை மாதங்கள் ஆகின்றன? தம்பியாய் அவனை, நீ, நினைத்திருந்தால், இடையிடையே, அவனைப் போய்ப் பார்த்திருப்பாயல்லவா? நீ சும்மா அவனை அடியோடு மறந்து, பணம் பண்ணுகிற வேலையில் ஈடுபட்டு, இங்கேயே இருந்துவிட்டாய்! அங்கே



அவன், கழுதையாய்க் குட்டிச்சுவரில் போய் முட்டிக்கொண்டு நிற்கிறான்" என்று முடித்த காமேசுவரி சட்டெனத் தன்னை மீறி அழுதுவிட்டாள்.

பாறை மனம் படைத்தவள் என்று, இதுவரை நினைத்திருந்த, அத்தை அழவும், சத்யனும், சற்றுப் பதறித்தான் போனான். இந்த சுந்தர் மடையன், அப்படி என்ன செய்து தொலைத்திருப்பான்?

மெல்ல காமேசுவரியைச் சமாதானப்படுத்தி, விஷயம் என்ன வென்று, சத்யன் விசாரித்தான்.

மீண்டும் உதடு துடிக்க, "அதுதான் சொன்னேனே, சீலா, கழுதையாய்க் குட்டிச்சுவரில் போய் முட்டிக்கொண்டு நிற்கிறான், என்று" என்று அழுகையும், ஆத்திரமுமாகக் கூறினாள், அத்தையம்மாள்.

"குட்டிச்...ஓ! காதலா? சுந்தரா? ஆச்சரியமாய் இருக்கிறதே, அத்தை? பெண் என்றாலே ஓட்டம் பிடிக்கிறவன்! கூச்சத்தில் பேசவே வர மாட்டேன் என்கிறது என்பவன்...நம்பவே, முடியவில்லையே, அத்தை!" என்று திகைப்பும், வியப்புமாகக் கேட்டான், சத்யசீலன்.

"என்னாலே மட்டும் நம்ப முடிகிறதா, என்ன?" என்று ஆத்திரத்துடன் கேட்டுவிட்டு, "ச்சு. எனக்கு இருக்கிற வயிற்றெரிச்சலில், உன்னைப் போய்க் கோபித்துக் கொள்கிறேன், பார்" என்று வருத்தமாக உரைத்தாள், பெரியவள்.

"அதை விடுங்கள், அத்தை. நீங்கள் கோபித்து, எனக்கு என்ன ஆகிவிடும்? இப்போது விஷயத்துக்கு வாருங்கள். சுந்தர் என்னதான் சொல்லுகிறான்? அந்தப் பெண்ணைத்தான், மணந்து கொள்வானாமா?" என்று, சத்யன் விசாரித்தான்.

"ஆமாம். இந்தக் கழுதைக்கு அந்தக் குட்டிச்சுவர்தான் கனபொருத்தமாம்!" என்றாள், காமேசுவரி, வெறுப்புடன். "பெரிய பொருத்தம்! உழைத்துக் கூலி வாங்குகிற கும்பல்!"

"ம்......ம்ம்" என்று, யோசித்துவிட்டு, "திருமணத்துக்கு அனுமதி கேட்க வந்தானா?" என்று, சத்யன் மேலும் விவரம் கேட்டான்.

"அடுத்த வயிற்றெரிச்சல்!" என்று மிகுந்த எரிச்சலுடன், காமேசுவரி கூறினாள்.

"ஏன், அத்தை, கல்யாணத்தை, நிச்சயமே செய்து விட்டானா?"

"அட, நீ வேறு கேவலப்படுத்தாதேயப்பா. நம்ம பையனுக்கு அவ்வளவு துணிச்சலெல்லாம் வந்துவிடுமா, என்ன? அப்படி ஒன்றும் இல்லை."

"பின்னே?"

"அந்தப் பெண்ணிடம், நேரில் இதுபற்றிப் பேச, அவனுக்கு வெட்....கமாக இருக்கிறதாம்...அதனால் அவளிடம், நான்தான், தூது செல்ல வேண்டுமாம்! அந்தக் கழுதையிடம் போய், இவன் காதலை எடுத்துச் சொல்லி, திருமணத்துக்குச் சம்மதிக்க வைக்க வேண்டுமாம்! எப்படி இருக்கிறது பார், கதை!" என்று, காமேசுவரி கொதித்தாள்.

ஆனால், "இவ்வளவுதானா, அத்தை விஷயம்? இதில் கவலைப்பட என்ன இருக்கிறது? இன்னும், சுந்தர், அந்தப் பெண்ணிடம், காதல் கீதல் என்று, மூச்சுக்கூட விடவில்லை. நீங்கள், சுந்தரைக் கூப்பிட்டு 'நம் நிலைக்கு இவள் சரிப்பட மாட்டாள் வேண்டாம்' என்று கண்டித்து சொல்லி விட்டால், அதை அவன் மீறமாட்டான். தீர்ந்தது பிரச்சினை. அவ்வளவு தானே" என்று எளிதாக முடித்தான், மருமகன்.



ஆத்திரத்துடன், அண்ணன் மகனை உறுத்து நோக்கினாள் காமேசுவரி. " பிரச்சினை...அவ்வளவுதானா? என்னவோ, பெரிதாக தொழில் நடத்துகிறாய், புத்திசாலி, என்று உன்னிடம் சொல்ல வந்தேன், பார். நான்தான் வடிகட்டின முட்டாள்!" என்று சீறினாள், கோபமாக.

சத்யசீலன், சிறு முறுவலுடன் பார்த்துக் கொண்டிருக்க, அவள் தொடர்ந்தாள். "இதுதான் பிரச்சினை என்றால், இதைத் தீர்க்க, உன்னை எதற்குக் கூப்பிடுகிறேனாம்?"

எதிர் சோபாவில், சற்று வசதியாகச் சாய்ந்து அமர்ந்து கொண்டான்,சீலன். "ஆக, பிரச்சினை என்னவென்றே, இன்னமும், நீங்கள் சொல்லவில்லை. ம்ம்...? அத்தை, முதலில் அந்தக் கடலையைக் கொஞ்சம், இந்தப் பக்கம் தள்ளுங்கள். ஆமாம், என்னைக் கண்டதும், சோபாவுக்கு அடியில் வைத்தீர்களே, அதே கடலையைத்தான். வேலை முடிந்ததும் நேராக இங்கே வந்துவிட்டேனா? பசி வயிற்றைக் கிள்ளுகிறது. நான் கடலையைச் சாப்பிட்டுக் கொண்டே கேட்கிறேன். நீங்கள் உண்மையான பிரச்சினையை விவரமாகச் சொல்லுங்கள்" என்றவன், அவனே கையை நீட்டி, முறத்தைத் தன்புறம் இழுத்தான்.

அத்தைக்காரிக்கு மனம் உருகிவிட்டது. "ஐயோ, நீ வெறும் வயிற்றோடேயாம்மா இருக்கிறாய்? பாவி, ஒரு வாய்க் காபி கூடத்தராமல், என் கஷ்டத்தையே சொல்லிக் கொண்டிருக் கிறேன், பார்" என்று வருத்தத்துடன் இயம்பியவள், உடனே, வேலையாளை அழைத்து, அண்ணன் மகனுக்கு, அன்றையப் பலகாரத்தையும், கூடவே பழச்சாறும் எடுத்து வரச் சொன்னாள்.

அத்தை, மெய்யாகவே, கலங்கியிருப்பதை, சத்யசீலன், உணர்ந்து கொண்டான்.

காமேசுவரியின் வீட்டுக்கு, யார் வந்தாலும், அவர்களுக்கு உண்ணவோ, பருகவோ...குறைந்தபட்சமாய்ப் பருகவேனும், ஏதாவது கொண்டுவரச் சொல்லிவிடுவாள். அது, பழச்சாறோ, பச்சைத்தண்ணீரோ, அதது, வந்தவரின் தகுதிக்கு ஏற்ப இருக்கும் என்றாலும், வந்த விருந்தினருக்கு ஒன்றுமே கொடுக்காமல், அவள் இருக்கவே மாட்டாள்.

பணியாள் கொணர்ந்த இனிப்பு காரத்தை ருசித்தபடி, அவளது பேச்சைக் கவனத்துடன் கேட்டான், சத்யசீலன்.

நடந்த விவரங்கள் என்று பார்த்தால், அவை எல்லாமே, காமேசுவரி சொன்னவற்றுள் அடங்கி விடுபவைதான்.

ஓரிரு மாதங்களாக, பாடம் அதிகம் என்று, வாரக் கடைசிக்குக்கூட, சுந்தர், வீட்டுக்கு வரவே இல்லை.

அப்படி இருந்தவன், திடுமென, அந்த சனிக்கிழமை வீடு வந்த போதே, காமேசுவரி, யோசித்திருக்க வேண்டும். அதைவிட்டு, ஐம்பது நாட்களுக்கும் மேலாகப் பிரிந்திருந்த மகனைக் கண்டதும், பெற்றவளுக்குத் தலைகால் புரியவில்லை. பாதாம் அல்வாவும் பலூடாவும் செய்து கொடுத்து, மகனை உபசரித்தாள்.

அன்போடு, தாய் அள்ளி அள்ளிப்போட, ஆசையாய் உண்டுவிட்டு, அதே ஆசையுடனேயே, அன்னையின் கைகளைப் பிடித்துக் கொண்டு, அவனுக்குப் பிடித்ததை யெல்லாம் செய்து தரும் தாயார், அவனுக்கு மிகமிகப் பிடித்தமான இன்னொன்றையும், அவனுக்குச் சொந்தமாக்கித் தர வேண்டுமென்று, கெஞ்சலும், கொஞ்சலுமாகக் கேட்டான்.

பிரிய மகன், அப்படிக் கேட்டபிறகு, பெற்றவளால் மறுக்க முடியுமா?



'உனக்கில்லாததா' என்று வாக்குக் கொடுத்துவிட்டாள்.

பிறகுதான் தெரிந்தது, பிள்ளை கேட்பது, ஒரு பெண்ணை என்று, மகனிடம், மறுத்துப் பேசி, அவன் மனதைக் கன்ற விட மனமின்றி, "இது, மிக, முக்கியமான படிப்பு, இப்போது போய்க் காதல் கத்திரிக்காய் என்று மனதை அலைய விடலாமா? முதலில், படிப்பை நல்லபடியாகப் படித்து முடித்துவிடு, பிறகு, அதைப் பார்க்கலாம்" என்று ஒருவாறு சமாளித்து வைத்தாள்.

எப்போதும், அன்னையின் சொல்லுக்கு மறுவார்த்தை பேசாத சுந்தர், இப்போது படிப்பு முடிந்ததும், கட்டாயமாக மதுரைக்கு வந்து, அந்தப் பெண்ணைப் பார்த்துப் பேசுவதாகத் தாயார் உறுதி அளிக்கும் வரை விடவில்லை.

புன்முறுவலோடு, "அப்படியானால், இன்னும் மூன்று மாதங்களில், சுந்தருக்கு அவளைப் பேசி முடிக்கப் போகிறீர்கள் என்று சொல்லுங்கள் மாமியார்!" என்று சத்யசீலன் இயம்ப, காமேசுவரி, கையை ஓங்கிக் காட்டி மிரட்டினாள்.

உடனேயே, வருத்தத்துடன், "நான் படும் பாடு, உனக்கு வேடிக்கையாக இருக்கிறதாடா?" என்று சோகக்குரலில் வினவினாள்.

"அப்படி வேடிக்கை பார்க்கிறவனாக இருந்தால், அலுவலில், இவ்வளவு நெருக்கடி இருக்கிற இந்த நேரத்தில்கூட, நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு வருவேனா, அத்தை?" என்று அவளைத் தேற்றிவிட்டு, எழுந்து போய்க் கையைக் கழுவிக்கொண்டு வந்தான்.

மீண்டும் அமர்ந்து, "சொல்லுங்கள், அத்தை, இப்போது, நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

"அவளைத் தொலைத்துக் கட்டவேண்டும்" என்றாள் காமேசுவரி சுருக்கமாக.

"அத்தை! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"ஏன்டா அலறுகிறாய்? நான் என்ன..ஓ, தொலைத்துக்கட்ட என்றதைக் கொலை செய்யச் சொல்வதாக, எண்ணிவிட்டாயா? போடா நான் என்ன அந்த மாதிரி ஆளா? ஆனால் ஒன்று சீலா, இந்த மாதிரி பெரிய இடத்துப் பையன்களை வளைப்பதற்காக வே அலைகிறார்களே அந்தப் பெண்களை நடுத்தெருவில் வைத்துச் சுட்டுக் கொன்றால்கூட அதில் தப்பே இல்லை, தெரியுமா?" என்றாள், கோபத்தில் குரல் நடுங்க.

கைகளை உயர்த்தி, "ஓம், சாந்தி, சாந்தி" என்றான், சத்யசீலன். "அத்தை, நீங்கள் ஒரு கட்சி தொடங்கி, அதன் தலைவியாகி, மக்களும் அந்தக் கட்சிக்கு ஓட்டுப்போட்டு, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு அந்தக் கட்சி ஜயித்து, நீங்கள் இந்த நாட்டின் பிரதம மந்திரி ஆகிறபோது, அப்படி ஒரு சட்டமே போட்டுவிடலாம், சரிதானா?" என்று, ரொம்ப சீரியசாகக் கேட்டான்.

திகைப்புடன், அண்ணன் மகனை நோக்கிய காமேசுவரியின் முகத்தில், அவளை மீறி, ஒரு புன்னகை மலர்ந்தது. "ச்சு, போடா, கழுதை!" என்று மருமகனைச் செல்லமாக வைதாள்.

"ஐயையோ, கழுதையா? அப்புறம், நானும், அந்தக் குட்டிச் சுவரை...அதுதான் அத்தை, 'அந்தக் குட்டிச்சுவ'ரைத் தேடிப் போய் விடப்போகிறேன்!" என்று பயந்த மாதிரி, பாவனை செய்தான்.

காமேசுவரி சிரிக்கவும், திருப்தியுற்று, "இதுசரி.. இப்படித்தான் இருக்க வேண்டும். இப்போது, நல்லபடியாக யோசித்து, முடிவு பண்ணலாம். கோபத்தில் சொல்லும் வார்த்தைகள் ஒன்றும் சரியாக இருப்பதில்லை, அத்தை. அதற்காகத்தான்...சரி இப்போது சொல்லுங்கள் என்ன செய்யலாம்?" என்று கேட்டான்.



காமேசுவரி சற்றுத் தயங்கவும், "சொல்லுங்கள், அத்தை நான், இப்போது என்ன செய்ய வேண்டும்?" என்று மேலும் தெளிவுபடுத்திக் கேட்டான்.

கொஞ்சம் அமைதியுற்று, "அந்தப் பெண்ணைப் பார்த்துப் பேச வேண்டுமடா... நல்லவிதமாகவோ, மிரட்டியோ இந்தக்காரியம், நீ சாதிக்க வேண்டும். அவளிடம், எந்தக் காரணம் கொண்டும் என் பெயரை, நீ பயன்படுத்தவே கூடாது... இதில், நான் சம்பந்தப்பட்டதாகவே இருக்கக் கூடாது. எல்லாம் நீயே பார்த்து நீயாகச் செய்வதுபோல் இருக்க வேண்டும்" என்று ஒருவாறு கூறி முடித்தாள், அத்தையம்மாள்.

லேசாக முறு வலித்து, "அதாவது, 'சுந்தரின் கோபம், சாபம், எல்லாவற்றையும் நீயே வாங்கிக்கொள்' என்கிறீர்கள். நீங்கள் மட்டும், மகனுக்கு மிக நல்ல அம்மாவாகவே, இருந்துவிடப் போகிறீர்களாக்கும்? அதுதானே, அத்தை?" என்று மருமகன் நேரடியாகக் கேட்கவும், காமேசுவரியின் தலை தாழ்ந்துவிட்டது.

தரையைப் பார்த்தபடி, "வேறே நான் என்னடா அப்பா, பண்ணட்டும்? நாம் கேட்டால், அம்மா செய்வாள் என்ற நம்பிக்கையோடு வந்து கேட்கிறான். சாக்லேட் கேட்கிற குழந்தை மாதிரிதான். தின்றுவிட்டு, பல்லைத் துலக்கி விட்டால், சாக்லேட் இனிப்பின் கெடுதல் போய்விடும். அப்படி எண்ணி வாங்கிக் கொடுத்து விடுவதுதான். ஆனால், இது, அதுபோல், இல்லையே. காலம் பூராவும் தலையில் சுமந்தாக வேண்டுமே. நான் மறுக்கக்கூடுமோ என்று லேசான சந்தேகம் கூட இல்லாமல், பச்சைப்பிள்ளை மாதிரி, அவ்வளவு நம்பிக்கையோடு, என் முகத்தைப் பார்க்கிறான். அந்த முகம் கோபமும், வெறுப்புமாக என்னைப் பார்த்தால் அதை நான் எப்படித் தொடங்குவேன்?" என்று பாதி அழுகுரலில் கேட்டாள் அந்தத்தாய்.

சற்று யோசித்துவிட்டு, "எதற்கும், அவளை ஒருதரம் பார்த்துவிட்டு முடிவு பண்ணுங்களேன், அத்தை, ஒருவேளை அவள் நல்லவளாகக் கூட இருக்கக்கூடுமே" என்றான், சத்யசீலன்.

"நிச்சயமாக இருக்கமாட்டாள்" என்றாள் அத்தை, அழுத்தம் திருத்தமாக. "அப்படியே இருந்தாலும், அவள், வேறே யார் வீட்டிலாவது சவுக்கியமாய் வாழட்டும். என் வீட்டுக்கு வேண்டாம்.

"இந்த வீட்டுக்குள் ஒரு பணக்காரப் பெண்தான் மருமகளாக வர முடியும். இவள் எப்பேர்ப்பட்ட உத்தமி ரத்தினமாக இருந்தாலும், என் மகனுக்கு, வேண்டாம், வேண்டவே வேண்டாம்" என்றாள், பழைய காமேசுவரியாகி.

சத்யன் பேசாதிருக்கவும், "சீலா, நீயே யோசித்துப் பார். இவள், அம்மாவுக்கு, எல்லா வேலையும் எல்...லா வேலையும் செய்கிறவள். இவளுக்குப் பணவசதி எப்படி இருக்கும்? பணக்காரன், எவன் கிடைப்பான் என்று அலைந்து கொண்டுதானே இருந்திருப்பாள்? நீயே சொல்லு" என்றாள். புதிலாக, உதட்டோரம் ஓர் ஏளன வளைவுடன், "நீங்கள் சொல்வதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். அத்தை, ஓரளவு நல்ல வசதி இருக்கிற நீங்களே, இன்னும் பெரும் பணம் தேடுகிறபோது, ஒன்றுமே இல்லாதவளுக்கு அப்படி ஓர் எண்ணம் இருக்கத்தானே செய்யும்? என்று கேட்டான் அவன்.

ஒரு கணம் காமேசுவரியின் பேச்சு நின்று போயிற்று. தலையும் தாழ்ந்தது. ஆனால், உடனேயே நிமிர்ந்து, "ஆமாமடா. நான் பெரும் பணம் தேடுகிறவள்தான். இல்லையென்று சொல்லவில்லையே. ஆனால் ஒன்று யோசித்தாயா? இவ்வளவு வசதியோடு இருக்கும் நானே, இன்னும் தேடுகிறபோது, ஒன்றுமே இல்லாதவள், எப்படித் தேடாமல் இருப்பாள்? நீதான் சொல்லேன்" என்று கேட்டாள்.



"சொல்லுவேன், ஆனால், அதை நீங்கள்தான், ஒத்துக்கொள்ளமாட்டீர்கள். யாருக்குமே, வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் ஆசை இல்லாதிருப்பது, அபூர்வம் தான், அத்தை. முற்றும் துறந்த துறவிகள் தவிர மற்றவர்கள், அப்படி இருப்பது தப்புங்கூட. ஆனாலும், பணத்தை அநியாயமான வழிகளில் பெருக்கிக் கொள்வதை அநேகம் பேர் விரும்புவது இல்லை...சரி...அதை விடுங்கள், அத்தை. இந்த விவாதத்தை, நாம் இப்போது தொடங்க வேண்டாம். முதலில், அந்தப் பெண்ணைப் பற்றி பேசி முடிப்போம். சுந்தருக்கு அந்தப்பெண்...என்ன அத்தை, அந்தப் பெண், அந்தப்பெண், என்று கொண்டு, அவளுக்கு, ஒரு பெயர் இருக்கும் தானே? என்ன அது?" என்று வினவினான்.

"அது இல்லாமல் போகுமா? விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சலம் போல், திவ்யமாய் ஒரு பெயர் இருக்கத்தான் செய்கிறது. சுமனாவாம். இந்தமாதிரி ஒரு வெட்கம் கெட்டவளுக்கு, எப்படிப்பட்ட பெயரைப் போய் வைத்திருக்கிறார்கள், பார்! உம், பெயர் வைத்தவர்களை நொந்து என்ன பிரயோஜனம்? அவர்கள் எவ்வளவோ ஆசையாய், மகள் நல்ல பெண்ணாய் வளரவேண்டும் என்றுதான், இப்படிப் பெயர் வைத்திருப்பார்கள். இது, ஆள்மயக்கிக் கழுதையாக வளரப்போகிறது என்று அவர்களுக்கு என்ன தெரியும், பாவம்!" என்று புலம்பினாள் காமேசுவரி.

"அத்தை, நீங்கள் அனாவசியமாய் அந்தப்...அ....அந்த சுமனாவை திட்டுகிறீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. அவளையும் வைது அவசியமற்று நீங்களும் கலங்குகிறீர்கள், பாருங்கள், அந்த சுமனாவிடம் இன்னும் சுந்தர் தன் காதலைத்

தெரிவிக்கக்கூட இல்லை. இவன், காதலிப்பது, அவளுக்குத் தெரியாமலே கூட, இருக்கலாம்..."

"நீ, சுந்தரை விடப் பச்சைப் பிள்ளையாக இருப்பாய் போலத் தெரிகிறதே. நான் நிச்சயாய்ச் சொல்லுகிறேன், கேள். அவள் தூண்டி விடாமல், சுந்தருக்குக் காதல் கீதல் என்ற எண்ணமே வந்திராது.

"இப்போதுகூட, இந்தமாதிரிச் சொல்லச் சொல்லி, அவள்தான், சுந்தருக்குச் சொல்லி கொடுத்து அனுப்பி இருப்பாள். அப்போதுதானே, அவளைப் பற்றி நல்லவிதமாய் நினைக்கத் தோன்றும்? இப்போது, நீயே ஏமாந்து விடவில்லையா? நீ, வேண்டுமானால் நேரில் போய்ப்பார். அங்கே எல்லா விதக் கூத்தும் நடந்து கொண்டுதான் இருக்கும். சத்தியம், சீலா. அவள், தன் முழு ஜாலத்தையும் காட்டி என் மகனை முழுசாக வளைத்துப் போட்டிருப்பாள். அய்யோ, அந்த ராட்சசியிடமிருந்து, எப்படித்தான் என் பிள்ளையை மீட்கப் போகிறேனோ, தெரியவில்லையே!" என்று கலங்கினாள், அத்தையம்மாள்.

உதட்டைக் கடித்துக்கொண்டு சற்று நேரம் யோசித்துவிட்டு, "இப்போது, சுந்தர் முடிவாக என்னதான் சொல்லுகிறான், அத்தை?" என்று, சீலன் வினவினான்.

"அவள் இல்லாமல், உயிரை விட்டுவிடுவானாம்" என்றபோது, காமேசுவரியின் கண்களில் கண்ணீர் பளபளத்தது.

"சே, என்ன அத்தை? நீங்கள்? இதற்கெல்லாம் அழுதுகொண்டு? அப்படி எல்லாம் ஒன்றும் நடக்காது. நடக்க விடவும் மாட்டோம். கவலைப்படாதீர்கள்" என்று அவளைத் தேற்றினான், சீலன்.



"அதில்லையடா அவனை எப்படிப் பார்த்துப் பார்த்து வளர்த்திருப்பேன்? அவனை ஒரு கொசு கடித்தால் என் மனம் தாங்காதே. என்னிடமே வந்து, எவளோ ஒருத்தி கிடைக்கா விட்டால், செத்து விடுவேன் என்கிறானே, என் மனம் எப்படித் துடிக்கும்? இப்படி, எவளுக்காகவோ அல்பாயுசில் சாகக் கொடுக்கவா நான், அவனை உயிரைக் கொடுத்து, அப்படி வளர்த்தேன்?" என்று காமேசுவரி கண்ணீர் வடிக்கவும், அவளுடைய் அண்ணன் மகன், சட்டென்று எழுந்து வந்து, அவளருகில் அமர்ந்தான்.

அத்தையின் கையைப் பற்றித் தடவிக் கொடுத்து, "நான் ஒருத்தன் இருக்கும்போது, அப்படியெல்லாம் நடக்க விட்டுவிடுவேனா அத்தை?" என்று கேட்டு அவள் கண்ணைத் துடைத்தான். "இப்போ, உங்களுக்கு, என்ன செய்ய வேண்டும், அத்தை? அந்த சுமனாப் பிசாசை, சுந்தரிடமிருந்து விரட்ட வேண்டும். அவ்வளவுதானே? செய்துவிடுவோம். கவலைப் படாதீர்கள்" என்று, அவளுக்குத் தென்பூட்ட முயன்றான்.

"எப்படி?" என்று விசும்பினாள், அவள்.

"அடிப்பேன், உதைப்பேன், என்று மிரட்டுவோம். படிந்து வர வில்லையானால், அவள் விரும்பியதையே கொடுத்து விரட்டுவோம் ...என்ன அத்தை அப்படிப் பார்க்கிறீர்கள்? அந்த சுமனா பணத்துக்காகத் தானே சுந்தரைப் பிடிக்கிறாள்? அதையே தருவதாகச் சொல்லுவோம்."

"அதையே செய்வோமடா" என்றாள் அத்தை, முகம் தெளிந்து.

"எதை? பணம் கொடுப்பதையா? எதற்கும் முதலில் மிரட்டலை முயற்சித்துவிட்டு."

"வேண்டாமடா. மிரட்டினால், சுந்தரிடம் எதையாவது சொல்லி, அவனுக்கு என் மேல் வெறுப்பேற்றி விடுவாள். அதை என்னால் தாங்க முடியாது. அதனால், பணத்தையே கொடுத்து முடி" என்றாள் காமேசுவரி.

"எவ்வளவு, அத்தை? வாய்ப்புக் கிடைத்தது என்று, அவள், அதிகம் கேட்டால்?"

"பேரம் பேசு. அவளுக்கு அதிகமாகத் தோன்றும்படி. ஆனால், சுந்தரின் மீட்சிக்குப் பரவாயில்லை என்கிற அளவு கொடுத்துவிடலாம்."

"அதுதான், எவ்வளவு என்று சொல்லுங்கள், அத்தை. பண விஷயம் உங்கள் அனுமதி இல்லாமல் நானாகப் பேசமுடியாது" என்றான் சீலன், தொழிலதிபனாகி.

அதைத் தவறாகக் கருதாமல், ஏற்று, "ஒரு...ஓர்... ஐந்து..பத்துவரை கூட போகலாம், சீலா" என்று முடித்தாள், காமேசுவரி "ஆனால், வேலை அதுஇது என்று நாள் கடத்திக் காரியத்தைக் கெடுத்து விடாதேப்பா" என்றாள் கெஞ்சுதலாக.

லேசாக முறுவலித்து, "செய்கிறேன்" என்று ஒப்புக் கொண்டபிறகு நான், அதைச் செய்யாமல் விட்டிருக்கிறேனா, அத்தை?" என்று கேட்டபடி, சீலன் எழுந்தான். "இந்த வாரக் கடைசியில், நான் பாட்டியைப் பார்க்க, மதுரைக்குக் கிளம்புகிறேன் அத்தை" என்றுரைத்து, காமேசுவரியின் முகம் தெளிவுறக் கண்டபின், விடைபெற்றுச் சென்றான்.

தந்தையுடன் பிறந்தவளுக்கு வாக்களித்தது போலவே, அந்த சனிக்கிழமையன்று, மதுரைக்குக் கிளம்பிச் சென்றான், சத்யசீலன்.

அங்கே, மதுரையில் அவன் கண்ட காட்சி, அவனுடைய அத்தையின் கருத்துக்கு ஏற்பவே இருக்கவும், இந்த சுமனாவை,



எப்படியும் சுந்தரிடமிருந்து, பிரித்து, விரட்டியே, ஆக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

வாரக்கடைசியில் வீட்டுக்கு வருவதாகப் பாட்டிக்குத் தகவல் அனுப்பிய சத்யசீலன், வரும் நேரம் குறித்து, ஒன்றுமே சொன்னானில்லை. ஏனெனில், மதுரை செல்லும் வழியில், விழுப்புரத்தில், திருச்சியில் என்று ஆங்காங்கே சிலபல அலுவல்களையும் வைத்துக்கொண்டு தான், அவன் கிளம்பியிருந்தான்.

விடிந்து, கொஞ்ச நேரத்திலேயே, அவன் புறப்பட்டு விட்டபோதும், அந்த வெளிவேலைகளை முடித்துக்கொண்டு, ஒருவாறு பார்வதி அம்மாளின் வீட்டை, அவன், சென்றடைய, பின்னிரவாகி விட்டது.

நடுச்சாமம் நெருங்கிக் கொண்டிருந்த, அந்த வேளையில், அந்த அம்மாளின் தூக்கத்தைக் கலைப்பது, அந்த வீட்டில், யாரும் செய்து அறியாதது. மாத்திரை போட்டுக்கொண்டு, தூங்குகிறவர்களின் உறக்கத்தைக் கலைப்பது, தப்புத்தானே? அதுவும், குடும்பத்திலேயே மூத்தவர்.

ஏற்கனவே, தாமதம் பற்றிக் கூறியபோது, பேரனைக் காலையில் சந்திப்பதாகக் கூறியிருந்தார்.

எனவே, தன்னை வரவேற்க யாரும் காத்திருக்கக்கூடும் என்று சத்யசீலன், யாரையும், எதிர்பார்க்கவில்லை.

ஆனால், சுந்தர், அவனுக்காகக் காத்திருந்தான். கார் வந்து நின்றதுமே, ஓடோடி வந்து, கார்க் கதவைத் திறந்துவிட்டான். "வா, அண்ணா வா" என்று வாய் நிறைய வரவேற்றான். பின்சீட்டில் இருந்த பெட்டி, பையை எடுத்து, வெளியே வைத்தான். இரண்டையும், கைகளில் தூக்கிக்கொண்டு, "இவ்வளவுதானா, அண்ணா" என்று கேட்டான்.

"அடடா!" என்று வருத்தப்பட்டான் பெரியவன். "விழுப்புரத்திலும், திருச்சியிலும், கொள்முதல் செய்ததை லாரியில் அனுப்ப ஏற்பாடு செய்யாமல், கையோடு கொண்டு வந்திருக்கலாம்போல இருக்கிறதே! தம்பியாண்டவரின் வரவேற்பு, இ..ப்படி, இருக்கும் என்று தெரியாமல் போயிற்றே" என்று, பெரிதாக, உச்சுக் கொட்டினான், பெரியவன்.

"போண்ணா" என்று, ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு, "உள்ளே வாண்ணா" என்று திரும்பி, கைச்சுமையுடன், முன்னே, அவன் நடக்க, மற்றவன் பின்தொடர்ந்தான். "ஏய், ஒன்றைக் கொண்டா" என்று கைநீட்டி ஒன்றை வாங்கிக் கொண்டு மாடிப்படி ஏறி முடிக்கும்வரை, முடிந்தவரை, ஓசையின்றிச் சென்றவன், மாடி அறைகளை அடைந்ததும், கண்கள் பளபளக்க, "அண்ணா, நீ சுமனாவைப் பார்க்கத்தானே வந்தாய்?" என்று ஆர்வத்தோடு, வினவினான்.

அவனது கேள்வியைக் கவனியாதது போல, "சுந்தர், பழைய அறைதானே இப்போதும்?" என்றபடி, மாடி அறைகளுள் முதலாம் அறைக்குள் சென்று, கையிலிருந்த பையைக் கட்டிலின் மீது வீசினான், சத்யசீலன்.

கூடவே, உள்ளே வந்த சுந்தர், ஏதும் பேசுமுன், "நீ ஏதோ கேட்டாயில்லையா?" என்று கேட்டவாறு கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்தான். "தனியாக, இவ்வளவு தூரம் காரை ஓட்டிக்கொண்டு வருவது பெரும் போர்...சாரிடா, நீ என்ன சொன்னாய்?" என்று மீண்டும் கேட்டான். சுமனா பேச்சைத் தவிர்ப்பதாக அத்தைமகன் எண்ணி விடக் கூடாதில்லையா?

அத்தோடு, மீண்டும், சுமனாவைப் பற்றிக் கேட்கும் தைரியம், சுந்தருக்கு இருக்கிறதா என்றும் ஒரு சிறு சோதனை!

சுந்தருக்கு தைரியம் இருந்தது. குரலில் கொஞ்சம் சுதி இறங்கி விட்டபோதும், "சுமனாவைப் பார்க்க வந்தாயா...



வந்தாயோ..." என்று கேட்டேன்" என்று மறுபடியும் வினவினான்.

சரியாகத் தெரியவில்லையே, பழைய நத்தைச் சுருட்டலை காணோமே என்றெண்ணியபடி, "சுமனாவா? பெண் பெயராகத் தெரிகிறதே, யார் இந்த சுமனா?" என்று ஒன்றும் அறியாதவன் போல, சீலன் விசாரித்தான்.

முகத்தின் ஒளி குன்றிவிட, "உனக்கு ஒன்றுமே தெரியாதா, சீலாண்ணா? அம்மா, உன்னிடம், எதையுமே, சொல்லவில்லையா? நீ, திடுமென இங்கே வரவும், அம்மாதான், சுமனா பற்றி அறிந்துவருமாறு, உன்னை இங்கே, அனுப்பியிருப்பார்கள் என்று, நினைத்துவிட்டேன்" என்றான், ஏமாற்றத்துடன்.

பரவாயில்லை, சரியாகவே ஊகித்திருக்கிறான்!

எண்ணியதை வெளியே காட்டாமல், "அதற்கென்ன சுந்தர்? இப்போது நீதான் சொல்லேன். அத்தை சொன்னாலும், நீ சொன்னாலும், செய்தி ஒன்றுதானே? சொல்லு. அது யார் அந்த சுமனா? பெயர் பரவாயில்லாமல் இருக்கிறது?" என்று, அசுவாரசியமாகக் கூறியவன், மீண்டும் நெட்டி முறித்தான். சொல்வதைக் கொஞ்சம் சீக்கிரம் சொல்லு. எப்போது படுக்கையில் விழுவோம் என்கிறமாதிரி ஒரே அலுப்பாக இருக்கிறது."

இது, அதிகப் பேச்சை ஊக்குவிப்பது அல்ல. சாதாரணப் பேச்சையும் கூட, சொல்லித்தான் தீர வேண்டும் என்கிற உந்துதல் மிகுதியாக இருந்தாலொழிய, நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று போய்விடத் தான் தோன்றும்.

ஆனால், உந்துதல் மிகுதியாக இருந்ததனாலோ, என்னவோ, கொஞ்சம் மென்று விழுங்குகிற குணம் உடையவன் என்றாலும் சுந்தர் விடாமல், சுமனாவைப் பற்றிச் சொன்னான்.

எல்லாம், சீலனுக்குத் தெரிந்த விவரங்கள்தான். ஆனால், தீட்டப்பட்ட வர்ணங்கள்தான் வேறு. அத்தைக்கு, ராட்சசியாய்த் தோன்றியவள், சுந்தருக்குத் தேவதையாகத் தெரிந்தாள்.

அந்தப்பெண் சுமனாவைப் பற்றி, வானளாவ வர்ணித்து விட்டு, "சீலாண்ணா, அம்மாவிடம், நான் ஏற்கனவே, சுமனா பற்றிச் சொல்லி இருக்கிறேன். ஆனால், என்னைவிட, அம்மாவுக்கு, உன்னிடம்தான் அதிக மதிப்பு. நீதான் கெட்டிக்காரன் என்று–அது, உண்மையும் கூடத்தானே அதனால், நீ, சொன்னால், அம்மா, அதை, அப்படியே ஒத்துக் கொள்ளுவார்கள். அம்மாவிடம் சொல்லி, சுமனாவுக்கும், எனக்கும், திருமணத்தை நீதான் அண்ணா, நடத்தி வைக்க வேண்டும்" என்று முடித்தான்.

மீண்டும் எதிர்எதிர்தான்.

எப்பாடு பட்டாகிலும், திருமணத்தை, நிறுத்திவிடு, என்று பெற்றவள் சொன்னால், அதை எப்படியாவது, நடத்தி வை, என்று பிள்ளை கேட்கிறான்.

அத்தை சொன்ன இன்னொன்று நினைவுவர, "அந்த...வந்து, உன் சுமனா, என்னடா சொல்லுகிறாள்? அவளுக்கும், திருமணத்துக்கு அவசரம்தானா?" என்று விசாரித்தான், பெரியவன்.

"அது–அ–து, வந்து, அதையும் நீதான் அண்ணா கேட்டுச் சொல்ல வேண்டும். அண்ணா, ப்ளீஸ், சுமனாவிடமும், நீதான், எனக்காகப் பேச வேண்டும் அண்ணா" அவள் மனதை அறிந்து வந்து எனக்குச் சொல்ல வேண்டும் அண்ணா என்று, ஏகப்பட்ட அண்ணா போட்டு, சுந்தர் அவனிடம், மிகவும் கெஞ்சிக் கேட்டான்.



ஆக, அந்தப்பெண்தான், சுந்தரைத் தூண்டி விட்டிருக்கிறாள் என்று, அத்தை சொன்னது, தவறு!

பையன்தான், சும்மா, தன்னையும், மற்றவர்களையும் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறான், முக்கியமாக, அத்தையை! இப்போதைக்கு முதலில், இவனைத்தான் குணப்படுத்த வேண்டும். அதற்கு, அந்த சுமனாவின் உதவியும் கிடைத்தால் நன்றாக இருக்கும். செய்வாளா? அல்லது...

கை மறைவில், ஒரு கொட்டாவியை வெளியேற்றிவிட்டு, "எல்லாம், நாளை பார்க்கலாம், தம்பி. இப்போது என்னைக் கொஞ்சம் தூங்கவிடு" என்று அப்போதைக்குப் பேச்சை முடித்து வைத்தான்.

சுந்தர், மனமற்று, எழுந்து, அவனது அறைக்குச் சென்றபின், பேஸ்ட், பிரஷ், சோப்பு, துணிமணி சகிதம் குளியலறைக்குள் புகுந்தான். பயண அலுப்பு தீர, நன்றாகக் குளித்துவிட்டு வந்து, அப்பாடா என்று படுக்கையில் அவன் விழப்போன சமயம், அறையின் வாயிற்புறம், ஏதோ, மெல்லிய அரவம் கேட்கவும், ஓசையற்று, வாயிலுக்குச் சென்று, வெளியே நடப்பதைக் கவனித்தான்.

வெளியே நடந்தது, அவனுக்குப் பெரும் அதிர்ச்சிதான். காமேசுவரி அத்தை மட்டும், அதைப் பார்க்க நேர்ந்திருந்தால், ஹிஸ்டீரியா நோயாளியாக ஆகியிருப்பாள். ஏனெனில் வெளியே சுந்தர் அடிமேல் அடி எடுத்து வைத்து, திருட்டுத்தனமாகச் சென்ற இடம், பார்வதி அம்மாளின் அறைக்கு அடுத்த அறை, அதாவது பாட்டியின் அனைத்து வேலைகளையும் செய்யும் அந்த சுமனாவுடைய அறை! இரவு, பதினொரு மணிக்கு மேலாக, ஓர் இளம்பெண்ணின் அறையினுள் இவ்வளவு சர்வ சாதாரணமாக, சுந்தர், செல்வது

என்றால்? அதற்குமேல், கதவையும் சாத்திக் கொள்வது என்றால்–மேலே ஊகத்துக்கு என்ன இருக்கிறது?

ஆனால், சுந்தரா இவ்வளவு மோசமாக நடந்து கொள்கிறான்?

வயதான பாட்டியையும் ஏமாற்றிக்கொண்டு, சை! இப்படிப் பழகிக் கொண்டு, அவள் மனதை அறிந்து சொல்லும்படி சுந்தர் கூறியதும், அதைத் தான் நம்பியதும்...சேச்சே! அவளை நல்லவள் என்றுகூட எண்ணிவிட்டதை நினைக்கும்போது அவனுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

அவ்வளவும் அந்தப் பெண்ணின் ஏற்பாடாகத்தான் இருக்கவேண்டும்! ஏனெனில், சுந்தருக்கு, இந்தத் திரிசமன் எல்லாம் தெரியாது. கருவியாய் இருந்து செய்கிறான். அதாவது, அவள் ஆட்டுவிக்கிறபடி, ஆடுகிறான்! சற்றுக் கவலைக்குரிய விஷயம்தான். ஆனாலும், அவனால், சமாளிக்க முடியாதது அல்ல. அப்படி, முடியாமல் போனால், இந்த இரு ஆண்டுகளாக, தன்னந்தனியே தொழிலை நடத்தி முன்னேற்றமும் காண்பதற்கு, அர்த்தமே இல்லை.

பாவம், அந்தப்பெண்! யார், என்று தெரியாமல் மோதுகிறார்கள் தெரிய வைக்கிறேன்!

ஆனால் அந்தப் பெண்ணும் அப்படி ஒன்றும் லேசுப் பட்டவள் அல்ல என்பதை அவன், பிறகுதான் தெரிந்துகொள்ள நேர்ந்தது!

## 2

**பொது**வாகக் காலை வேளைகளில், எட்டு எட்டரை மணிக்கு முன்பாகப் பார்வதி அம்மாள், யாரையும் பார்க்க விரும்புவது இல்லை. அதாவது, தன்னை யாரும் பார்ப்பதை அவர் விரும்புவது இல்லை.



தூங்கி விழித்த முகம் அழுது வடிந்து கொண்டிருக்கும். குழந்தையிலிருந்து, வாலிப வயது, அழுகிற முகம்கூட அழகாகவே இருக்கும். ஆனால், மத்திய வயது தாண்டி விட்டால், குளித்துக் கிளித்துக் கொஞ்சம் பார்க்கச் சகிக்கிற மாதிரி ஆகிற வரை, அடுத்தவர் கண்ணில் பட்டு, அவர்களைப் பயமுறுத்தக் கூடாது, என்பார்.

தானும், அதையே கடைப்பிடித்து வந்தார்.

கால்கள் சரியாக நடக்கமுடியாமல் போகிறவரை, காலை உணவுக்காகச் சாப்பாட்டு அறைக்கு வரும் வரை அவரை யாருமே பார்த்தது கிடையாது, எனலாம். ஆனால், கால்கள் பெருமளவும், மற்ற அவயவங்கள் ஓரளவும் செயலிழந்த பிறகு, அவருக்கு, அது முடியாமல் போயிற்று.

காலையில், பல் துலக்குவது போன்ற சாதரண வேல்லைகள் கூட, முதலில் சிரமமாகி, பிறகு இயலாததாகவும் ஆகிவிடவே, பலத்த யோசனைக்குப் பின், இதுபோன்ற வேலைகளில் உதவுவதற்காக ஓர் ஆள் வைத்தார். கூடவே தங்கும்படியான ஒரு செவிலி.

சொந்தத்தில் சிலர், ரொம்ப காலமாகக் கூடவே இருக்கும் வேலைக்காரி தங்கம் என்றும் பலர், இதைச் செய்யத் தயாராகத்தான் இருந்தார்கள்.

ஆனால், இதற்காகப் பயின்று, பயிற்சி எடுத்தவர்கள் என்றால், அருவருப்பின்றிச் செய்வார்கள் என்று, பார்வதி கருதினார் அப்படியே ஆளும் வைத்தார்.

அப்படிச் செய்தவர்கள் மீதும் சிலசமயங்களில் திருப்தி யற்றுப் போய்விட, அவர்களை மாற்றினார் அந்த வரிசையில் கடைசியாக வந்தவள்தான், சுமனா.

சுமனா, செவிலிகளுக்குரிய பயிற்சி எடுத்தவள் அல்ல. ஆனால், இவள் எத்தனை நாளோ, என்று எண்ணியவர்களின் எதிர்பார்ப்பை மீறி, அங்கே அவள், நிலைத்திருந்தாள்.

நாலைந்து மாதங்கள்தான் என்றாலும், பார்வதி வாயிலிருந்து, ஒரு குறை வராமல், இவ்வளவு நாள் ஒருவர் இருப்பதே, பெரிய விஷயம்தான்.

ஒருவேளை, சுந்தரை மயக்கியது போலப் பாட்டியையும், ஏதோ ஒரு வகையில், ஏமாற்றி வைத்திருக்கிறாளோ, என்னவோ, என்று எண்ணியபடியே, பார்வதி அம்மாளைச் சந்திப்பதற்காகச் சாப்பாட்டு அறையை நோக்கிச் சென்றான், சத்யசீலன்.

அங்கேதான், அவன் முதல்முதலாக, சுமனாவைச் சந்தித்தான்!

அங்கிருந்த புதிய முகம், அவள்தான், பாட்டி வர்க்கப் பிரிவினை பார்க்கிறவர் அல்ல என்றபோதும், அன்றைய காலை உணவின்போதும் சுமனாவைப் பார்க்க நேர்ந்தது, சத்யசீலனுக்கு, உள்ளூர, ஓர் அதிர்ச்சியாகவே இருந்தது.

புதியவன், ஒருவனைப் பார்த்ததும், பாட்டியின் அருகில் இருந்த அவள், எழுந்து வந்து, பாட்டிக்கு மறுபுறம் இருந்த தட்டை, நிமிர்த்தி வைத்தாள்.

நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், பாரதியாரின் புதுமைப்பெண் சட்டென நினைவுவர, சீலன் திகைத்தான்.

முந்தைய இரவும், பாரதியாரின் புதுமைப்பெண்ணும் எப்படிப் பொருந்த முடியும்?

பின்னே, இந்த நிமிர்வு, இவளுக்கு எப்படி வந்தது?



ஒருவேளை, 'நெறி' என்பதற்கு, இவளது இலக்கணமே, வேறோ? அதற்குத்தக நடப்பதால், நிமிர்ந்து நிற்கவும் முடிகிறதோ?

தட்டில் இரண்டு இட்டிலிகளை வைத்துவிட்டு, அவள், மீண்டும், தன் இடத்திற்குச் சென்று அமர்ந்து கொண்டு, "இளங்கோ, சட்டினி, சாம்பார், மிளகாய்ப்பொடி எதெல்லாம் எவ்வளவு வேண்டும் என்று கேட்டுப் பரிமாறு" என்று பரிமாறுகிற பையனைப் பணித்தாள்.

சீலனின் வரவுபற்றி, இவள், ஏற்கனவே அறிந்திருக்க வேண்டும், அது, அதிசயமும் அல்ல, சுந்தரும், இவளும் அதை அலசி ஆராய்ந்திருப்பார்கள், பாட்டியும் சொல்லியிருப்பார்கள்.

ஆனால், வீட்டுப்பெண் போல, வேலையாளை ஏவுகிற உரிமை எப்படி வந்தது? இவளும், பணிபுரிந்து, அதற்குக் கூலியாகச் சம்பளம் வாங்குகிறவள்தானே? சுந்தரை மயக்கிவிட்ட திமிரா?

இங்கேயும், ஒன்று இடித்தது.

பார்வதி அம்மாள் திமிரைப் பொறுத்துப் போகிறவர் அல்ல. வாலை ஒட்ட நறுக்கி விடக் கூடியவர்தான். அவர் அனுமதியின்றி, இது நடவாது.

எப்படியோ, நடமாட்டம் குறைந்துவிட்ட முதியவரின் கண்களில் மண்ணைத்தூவி அவரையும் ஏமாற்றிக்கொண்டு இருக்கிறாள் போலும்.

சத்யசீலனின் வேகமான எண்ண ஓட்டத்தைப் பார்வதி அம்மாளின் குரல் இடைமறித்தது. " என்னடா, பாட்டி இருக்கிறாளா, இல்லையா என்று பார்க்க வந்தாயா? அல்லது, வாய்க்கரிசியே, போட்டு விட்டுப் போகலாம் என்று வந்தாயா?"

என்று. உதட்டோரம் ஒருவிதமான சிரிப்புடன். வினவினார். அவர்.

நேராக நோக்கி. "பாட்டி!" என்று. ஒரு விரல் தூக்கிப் பத்திரம் காட்டி. எச்சரித்தான் பேரன். "மாதா மாதம் வந்தபோது. தொழிலைப் போட்டு விட்டு இங்கே என்னடா வேலை. என்று விரட்டியதும் நீங்கள் தான். நினைவிருக்கட்டும்" அவன் ஞாபகப்படுத்தவும். பெரியவருக்குச் சிரிப்பு வந்தது.

சிரித்து முடித்தபிறகு. "ஐயோ பாவம். சின்னப்பையன். தொழிலில் முழிபிதுங்குகிறானே என்று ஓர் 'இதுக்கு'ச சொன்னேன். நீயும். இதுதான் சாக்கு என்று. உடும்பு மாதிரி. அதையே பிடித்துக் கொண்டு ஓடி விடுவாயென்று நான். கண்டேனா?" என்று அவர் கேட்கவும். எல்லோருக்குமே. முகத்தில் நகை மலர்ந்தது.

சுந்தர். அவுட்டுச்சிரிப்பே சிரித்தான்.

நளினி என்று. பார்வதியுடைய அண்ணன் வழியில். ஒரு பெண் - அந்த வகையில் மிச்சமிருப்பது. அவள் ஒருத்தி மட்டும்தான். அதனால். அவளிடம். பார்வதிக்கு மிகுந்த பாசம். பெற்றோரை இழந்து. அனாதையாக நின்றவளை அழைத்து வந்து. தன்னுடனேயே வைத்து வளர்த்து வருகிறார். அவளுக்கு ஒரு நல்ல வாழ்வை அமைத்துக் கொடுப்பதையும். தன் பொறுப்பாய் ஏற்றிருப்பவர். வீட்டுத்தலைவியின் அன்பு இருக்கையில். அந்தப்பெண். எவ்வளவோ ஆட்டம் போடலாம். ஆனால். மகா சாது. அவள் பெற்றோரை இழந்த அதிர்ச்சி காரணமாகவோ. உரிமை என்று தனக்கு இந்த வீட்டில் எதுவும் இல்லை என்கிற எண்ணமோ. நளினி சத்தமாகப் பேசி. யாரும் கேட்டதில்லை. இன்று. அவளது நகையொலி கூட லேசாகக் கேட்டது.



ஆனால் பாட்டியும். பேரனும். ஒருவரை ஒருவர். கிண்டலடிக்கிறார்கள் என்பது தெரிகிறது என்பதற்கு மேலாக. சுமனாவின் முகத்தில் எதுவும் இல்லை.

அத்தோடு. "அம்மா. இன்றைக்குப் பூரி. சப்பாத்தி இரண்டுமே செய்திருக்கிறது. அடுத்து. அதைக் கொண்டு வரச் சொல்லட்டுமா?" என்று வேறு வினவினாள்.

'அம்மையாருக்கு. என்னைப் பற்றிய பேச்சு பிடிக்க வில்லையாக்கும்? கொஞ்சம் பொறு. தாயே. உனக்கு என்னைக் கண்டாலே பிடிக்காமல் செய்துவிடுகிறேன்' என்று. சீலன் உள்ளூரக் கருவினான்.

அடுத்து நடந்தது. அவனுக்கு இன்னமும் ஆத்திர மூட்டியது.

சுமனாவின் கேள்விக்குப் பார்வதி அம்மாள் சம்மதமாய்த் தலையாட்ட. இரண்டே கட்டு தள்ளி இருந்த சமையலறைக்கு. எழுந்து சென்று. சொல்லாமல். மேஜைமேல் இருந்த 'பஸ்ஸரை' அழுத்தி. அங்கிருந்து ஆளை வரச்செய்து. ஆணை பிறப்பித்துக் கொண்டிருந்தாள். அம்மணி.

நளினி. இந்தமாதிரி நடந்து கொண்டிருந்தால்கூட. அது சீலனுக்கு நியாயமாய்ப் பட்டிருக்கும்.

ஏனெனில் அவள் இந்த வீட்டினருக்கு உறவுக்காரி. ஆனால். இவள்?

சக வேலையாளுக்கு. இவள் என்ன. வீட்டுக்காரி மாதிரி. உத்திர விடுவது?

வாழைப்பழத்தில் ஊசி இறக்குகிற மாதிரி. நைசாக உரிமைக்காரி ஆகிக் கொண்டிருக்கிறாள். கண்டுபிடித்து விரட்டுவதற்கு ஆள் இல்லை என்கிற தைரியம்! இருக்கட்டும்.

பார்வதியிடம் திரும்பி, "பாட்டி, எங்களை ஆயிரம் சொல்வீர்களே, நம் வீட்டுக்கு வந்திருக்கும் புது உறவுக்காரப் பெண்ணை எனக்கு, நீங்கள், அறிமுகப்படுத்தவே இல்லையே!" என்று கேட்டான்.

சுமனா, சட்டினியிலும், சாம்பாரிலும் தோய்த்து வைத்திருந்த இட்டிலித் துண்டங்களை, மாறிமாறி எடுத்து உண்டு கொண்டிருந்த பார்வதி, ஒருதரம் தலைநிமிர்ந்து பார்த்ததோடு, சரி.

சுந்தர்தான் அவசரமாக, "யார் அண்ணா, அது? யாரோ புது உறவுக்காரப்பெண் என்றீர்களே, எங்கே, இருக்கிறார்கள்?" என்று விசாரித்தான்.

பூரியை ஒதுக்கி, சப்பாத்தியைச் சின்னத் துண்டுகளாக விண்டு, பார்வதியின் முன் வைத்துக் கொண்டிருந்த சுமனா, விழிகளை மட்டும் உயர்த்தி, சுந்தரைப் பார்த்தாள். "உங்கள் மாமா மகன் என்னைத்தான் சொல்லுகிறார்" என்றாள், ரொம்பவும் சாதாரணமான குரலில்.

"உன்னையா?" என்றான் அவன் ஆச்சரியமாக. மூத்தவன் பக்கம் திரும்பி, "இது சுமனா, சீலாண்ணா தெரியாது?" என்று வியப்புடன் வினவினான்.

"ஓகோ! சுமனாவா? தெரியாதே. எப்படித் தெரியும் சொல்லு. நீங்கள் யாராவது எனக்கு அறிமுகப்படுத்தினீர்களா? சொல்லு?"

சற்று அசடுவழிந்துவிட்டு, "அ அதில்லை, அண்ணா, நீ வந்ததும் பாட்டி ஏதோ சொன்னார்களா இது, மறந்து போய்விட்டது..." என்று விளக்கம் சொன்னான், சின்னவன்.

"இன்னொன்றையும் மறந்து விட்டீர்களே, சுந்தர்!" என்று இடைப்புகுந்தது, சுமனாவின் குரல்.



"எ...என்னது? ஓ, உறவுக்காரப்பெண் என்று...ஏன், அண்ணா?"

ஓர் ஏளனப்புன்னகையுடன், சத்யசீலன் தொடங்குமுன், "காரணம் நான் சொல்லுகிறேன், சுந்தர், நான் இந்த வீட்டில், ஓர் உறவுக்காரி போல, அதிக உரிமை எடுத்துக் கொள்ளுகிறேனாம். மற்ற...மற்றவர்களை, ஏவுகிறேனாம்..." என்று விளக்கினாள், அந்த சுமனா.

இப்போது, சுந்தர், விழுந்தடித்துக் கொண்டு, பதில் சொன்னான்.

"அதற்கும், ஒருவர் வேண்டுமில்லையா? சீலாண்ணா, அன்றைக்குப் பாட்டி மறந்துபோய், மாத்திரையை, இரண்டுதரம் போட்டுவிட்டார்களா? ஒருமாதிரி மயக்கம் வந்துவிட்டது. எல்லோரும் பயந்து விழிக்கிறோம். சுமனாதான், டாக்டருக்குப் ஃபோன் போட்டு, மாற்றுமருந்து கொடுத்து, வீட்டு நிர்வாகத்தைக் கவனித்து...எல்லாம் செய்தாள். பிறகு, பாட்டியே, எல்லாப் பொறுப்பையும், சுமனாவிடம் கொடுத்து விட்டார்கள். சம்பளத்தையே, எல்லோரும் அவளிடம்தான் வாங்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான், அவள் வார்த்தைக்கு உரிய மதிப்பு இருக்கும் என்பது, பாட்டியின் கருத்து. இரண்டு மாதங்களாக அப்படித்தான் வீடு நடக்கிறது" என்று, சுந்தர் அவசரமாக விளக்கம் கொடுத்து முடித்தான்.

பார்வதி லேசாக முறுவலித்து, ஆம் என்று சொல்லாமல் சொல்ல, சீலனின் முகம் லேசாகக் கன்றியது.

நினைத்தது, நேர்மாறாக மாறி, அவள், அவனையல்லவா, மட்டம் தட்டிவிட்டாள்!

அவள், அதிக உரிமை எடுத்துக் கொள்கிறாள் என்று எடுத்துக் காட்டப்போய், இப்போது, அவன் அல்லவா, அனாவசியமாக மூக்கை நீட்டியது போல ஆகிவிட்டது!

இவள் கொஞ்சம் புத்திசாலி பொல்லாதவள் ஆக இருப்பாள் போலத் தெரிகிறதே. இல்லாவிட்டால், ஆள் பார்த்து, அந்தஸ்து பார்த்து வளைத்துப் போட்டிருப்பாளா? இவளிடம், கொஞ்சம் கவனமாகவே நடந்து கொள்ள வேண்டும்!

சுமனாவை நேராக நோக்கி, "தப்பாக நினைக்க வேண்டாம். பாட்டியின் வயதையும், தனிமையையும் பயன்படுத்திக் கொள்ள, முன்பும் பலர் முயன்றதுண்டு" என்றான், வெளிப்படையாகப் பேசுவது போல.

முதலாளி வீட்டாரிடம், வைக்க வேண்டிய ஐஸ், சோப், எதுவும் இல்லாமல், ஒரு பரவாயில்லை கூடக் கூறாமல் 'புரிகிறது' என்று சுருக்கமாக உரைத்துவிட்டு, அவள், தன் வேலையில் பார்வதியின் உணவுத் தேவைகளைக் கவனித்தவாறே, தானும் சாப்பிட்டாள்.

எச்சில் கையால் செய்யாமல், அருகில் ஒரு கிண்ணத்தில் இருந்த நீரில், அவ்வப்போது கையைக் கழுவிவிட்டே, முதியவளுக்கு, ஸ்பூனால் எடுத்துச் சாப்பிட வசதியாக, வியஞ்சனம் கலந்து, இட்டிலி சப்பாத்தித் துண்டங்களை அவள் எடுத்து வைத்தபோதும், ஏன், இந்த அம்மா பாட்டி சாப்பிட்டபிறகு சாப்பிட்டால் என்ன? பசி தாங்காதாக்கும்! என்று சற்று ஏளனமாக எண்ணியபோதும், சீலன் அதை வாய்விட்டுச் சொன்னானில்லை.

பிறகு, இந்தம்மாவுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு, நீட்டி முழக்கி, சுந்தர், இன்னொரு கதை சொல்ல, அதை வேறு கேட்டுச் சகிக்க வேண்டும். எதற்கு வீண் தொல்லை?

மெய்யாகவே, இதற்கும் ஒரு சிறு விளக்கம் இருந்தது. பார்வதி உணவருந்தி முடித்தபிறகு, தான் சாப்பிட்டுக் கொள்வதாக, சுமனா, முதலிலேயே சொல்லத்தான் செய்தாள்.



ஆனால், பார்வதிதான், ஒருவரைப் பார்க்க வைத்துக்கொண்டு தான் சாப்பிட முடியாது என்றும், இதுபோலத் தனக்கு எடுத்து வைத்துக்கொண்டே சுமனாவும் சாப்பிட்டால், தான் மெதுவாக உண்ணுவதற்கும், சுமனாவின் வேகத்துக்கும், இருவரும் ஒன்றாகவே உணவருந்தி முடிக்கலாம் என்றும் சொல்லி விட்டார்.

இதை அறியாமல், அறிந்துகொள்ளும் விருப்பமும் இல்லாமல், சீலன், தன் தூரத்து உறவான நளினியிடம் முயன்று பேசத் தொடங்கினான்.

'முயன்று' தான், ஏனெனில், பேசினால், வாய் முத்து உதிர்ந்து விடுமோ என்று அஞ்சுவது போலக் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்வதே, அவளுக்குப் பெரிய காரியம்.

சுமனாவிடம் தனியாகப் பேச வழி தேடிக்கொண்டு இருந்த சீலனுக்கு, அதற்கொரு வாய்ப்பு, வெகு விரைவிலேயே கிடைத்தது.

காலை உணவு முடிந்ததும், பார்வதி சுமனாவுக்கு ஒரு வேலை கொடுத்தார்.

திருப்பரங்குன்றத்துக் கோவிலில், அன்று முருகனுக்கு அபிஷேகத்துக்குக் கொடுத்திருப்பதால், அங்கே சென்று, பிரசாதத்தை வாங்கி வருமாறு பணித்தார்.

மறுபேச்சின்றி எழுந்து, "நான் திரும்பி வரும்வரை, அம்மாவோடு இருந்து பார்த்துக் கொள்வீர்கள்தானே, சுந்தர்?' சுந்தரிடம் கேட்டவள், அவன் பதிலுக்காகக் காத்திராமலே, "ரசீது எங்கே வைத்திருக்கிறீர்கள், அம்மா?" என்று, பார்வதியிடம் வினவினாள்.

பார்த்துக்கொண்டே இருந்த சீலனுக்கு உள்ளம் கொதித்தது. இதற்கு என்ன அர்த்தம்? இந்தப்பெண் என்ன உத்திர

விட்டாலும், சுந்தர் அதைத் தாசானுதாசனாகச் செய்து முடிப்பான் என்பதுதானே?

இதை வளரவிடுவது...இந்த நிலையை நீடிக்க விடுவதே பெரும்பிழையாக முடியக்கூடும்.

சட்டென முடிவெடுத்து, "பாட்டி, திருப்பரங்குன்றம் அருகே, எனக்கு ஒரு வேலை இருக்கிறது. சுமனாவைக் கோயிலில் விட்டுவிட்டுச் சென்று, என் வேலையை முடித்துக்கொண்டு, திரும்பி வரும்போது அவளையும்கூட்டி வந்துவிடுகிறேன்" என்றான்.

சட்டெனப் பாய்ந்து மீண்ட பார்வை தவிரத் தனக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை போல, எங்கோ பார்த்தபடி, சுமனா பேசாமல் நின்றாள்.

"செய்யேன்" என்று கூறிய பார்வதியிடம், "இன்றைக்கு என்ன பாட்டி, விசேஷம்? முருகனுக்கு அபிஷேகம் எல்லாம் தடபுடல் படுகிறது?" என்று சிறு கேலிக்குரலில், சீலன் விசாரித்தான்.

பேரனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, பார்வதி உச்சுக் கொட்டினார். "உங்களுக்கெல்லாம் ஒன்றும் இல்லையப்பா" என்றார் சற்றுக் குறையோடு.

"நீங்கள் சொல்கிற விதத்தைப் பார்த்தால், ஏதோ இருக்கும் போல் தெரிகிறதே! என்னது? சுந்தர், உனக்கு ஏதாவது நினைவு வருகிறதா? ஊகூமா? ம்ம்...உங்கள் பிறந்த தினம் கிடையாது. கல்யாண நாளும் இல்லை. பிறகு?"

"நான்தான் சொன்னேனேடா, இது உங்களுக்கு முக்கியமில்லாதது என்று" என்றார் பெரியவர் குரலில் கொஞ்சமாய் ஏளனம் கலந்து.



"உங்களோடு சேர்ந்தது, எங்களுக்கு எப்படி முக்கியமில்லாததாக இருக்க முடியும்? ஏனோ, எப்படியோ மறந்துவிட்டது. பாட்டி, ப்ளீஸ் பாட்டி. ஒரு சின்னக் குறிப்புக் கொடுங்களேன். ப்ளீஸ் பாட்டி" என ஒரு சிறுவனைப் போலக் கெஞ்சினான் பெரிய பேரன்.

இந்தக் கெஞ்சலில் இளகி, "சரியாகச் சொல்லப்போனால், இப்போது, உனக்கு, முக்கியம் இல்லைதாம்மா. எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக, இந்த நாளில் நிகழ்ந்தது, எனக்குப் பெரிய விஷயம் தான். மற்றவர்களுக்கு அப்படி அல்ல" என்று முடித்தார்.

"அடேயப்பா! அவ்வளவு பழைய, புராதன காலத்து சமாசாரமா? அதுதான் எனக்குத் தெரியவில்லை" என்று சுந்தர் தன்னை நியாயப் படுத்திக் கொண்டான்.

ஆனால், "உங்களுக்கு வயது அறுபத்தெட்டு, இது, தாத்தாவின் பிறந்தநாள். அப்படித்தானே பாட்டி? மறந்ததற்கு, சாரி, பாட்டி" என்று பணிவுடன், மன்னிப்புக் கேட்டான், சீலன்.

சிறு புன்னகையால், அதை, ஒத்துக்கொண்டுவிட்டு, சுமனாவிடம், திரும்பி, நாம் போய் ரசீதை எடுத்து வரலாம். பிறகு, நீயும், சீலனும் கோயிலுக்குப் போய்வாருங்கள்" என்று சொல்லவும், அவள், எஜமானியின் சக்கர நாற்காலியைத் தள்ளிச் செல்ல, இருவரும் பார்வதியின் அறைக்குள் சென்று மறைந்தனர்.

திகைத்த பார்வையுடன், நின்றுகொண்டிருந்த சுந்தர், தலையை உலுக்கிக் கொண்டு, "உன் வேலை எப்போது முடியுமோ, என்னவோ அதுவரை, சுமனா தனியே காத்துக் கிடப்பதா? அங்கே கோயில் கூட்டத்தில் வேறு, நிற்கவேண்டும்.

அதைவிட, நான் வேண்டுமானால், சுமனாவைக் கோயிலுக்குக் கூட்டிப்போய் வருகிறனே?'' என்று கேட்டான்.

தோளைக் குலுக்கி, "எனக்கு அதில், ஆட்சேபணை ஏதும் கிடையாது. ஆனால், பாட்டிக்குத் துணை இருப்பதாகத் தலையாட்டினாயே இப்போது...?'' என்று முடிக்காமலேயே நிறுத்தினான்,சீலன்.

மீண்டும் திகைத்து விழித்துவிட்டு "பாட்டியை நளினி கவனித்துக் கொள்வாள். என்ன நளினி?'' என்று சுந்தர் கேட்க, "ஆமாம்...ஆமாம்'' என்று தலையாட்டினாள் அந்தப்பெண்.

பரவாயில்லையே, கேள்வி கேட்டுப் பத்து எண்ணுமுன் பதில் சொல்லிவிட்டாளே, என்று எண்ணியபடி, "நளினியால் முடியுமென்றால் சரி'' என்று சற்று விட்டேற்றியாகப் பதிலுறுத்தான், சீலன்.

எதிர்பார்த்தபடியே, அத்தை மகன் முகத்தில் சந்தேகமும், அந்தப் பெண் முகத்தில் பயமும் தோன்றவும், "சும்மா என்றால், ஒன்றும் பயமில்லை, அன்றுமாதிரி ஏதாவது நேர்ந்தால்...?'' என்று மீண்டும் வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்திவிட்டுக் கேள்வியாய் இருவரையும் நோக்கினான்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து விழிக்கவும், "நீயும் துணையிருந்தால், நெருக்கடி நேர்ந்தாலும் இருவருமாகச் சமாளித்து விடலாம்'' என்று தொடர்ந்து சொன்னான்.

விசை தட்டின மாதிரி அந்தப் பெண்ணின் முகம் பிரகாசமடைய, அப்படியா விஷயம் என்று உள்ளூர ஆச்சரியப்பட்டபடி, "சுந்தர், கொஞ்சம் என்னோடு வருகிறாயா? வரும்போது, கொள்முதல் செய்கிற இடத்தில், உனக்கு ஒரு சட்டை வாங்கினேன்...அதைப்பாரேன்...'' என்று கூறியவாறு, சுந்தரை இழுத்துக்கொண்டு கிளம்பினான்.



மாடிப்படி ஏறுகையில், தலையைத் திருப்பி, "மன்னித்துக்கொள், அம்மா. இதோ, சட்டையைக் கொடுத்து, இவனை, உன்னிடமே திருப்பி அனுப்பி விடுகிறேன்'' என்றுரைத்து, எதிர்பார்த்தபடியே அவள் முகம் சிவப்பதை ஓரக்கண்ணால் கவனித்துவிட்டுச் சென்றான்.

இவளானால் பரவாயில்லை, ஏற்கனவே, கொஞ்சம் சொத்து உண்டு. அத்தோடு, பாட்டியும், இவளுக்கு, ஏதாவது கொடுப்பார்கள். அண்ணன் பாசத்தில், கொஞ்சம் நன்றாகவே, செய்வார்கள். எல்லாமாக ஓரளவு கணிசமான அளவு சேர்ந்துவிடும்.

அத்தை எதிர்பார்க்கிற அளவு வராது என்றாலும், சுமனா மாதிரி ஒன்றுமில்லாமல் போகாது, எப்படியும், அத்தையின் ஆசை, மலையை நூலால் கட்டி இழுப்பது. அது, ஒரு போதும் நடக்கப் போவது இல்லை எவனாவது, ஒரு முழு முட்டாள் தகப்பன் எவனாவது ஒரே ஒரு சொத்தை, சொள்ளையைப் பெற்று வைத்திருந்தால் ஒழிய, அது, வெறும் பகல் கனவு.

ஆனால், நளினி விஷயம் அப்படியல்ல. கொஞ்சம் ஏறக்குறைய இருந்தாலும், சுந்தர் வீட்டுச் செல்வ நிலைக்கு, ஏதோ பரவாயில்லை என்கிற அளவுக்குச் சொல்லலாம்.

குணம் என்று பார்த்தாலும், அத்தையின், அதிகாரப் போக்குக்கு, இவளது அடங்கிப் போகிற தன்மைதான் சரியாக இருக்கும்.

அந்தப்பெண் சுமனா, அத்தையுடைய மருமகளானால், அப்புறம், அந்த வீட்டில் எப்போதும், குடுமி பிடிச் சண்டைதான் நடக்கும்.

அப்படி யாரையாவது காதலித்துத்தான் ஆக வேண்டும் என்றால், இந்த மடையன், சுந்தர், இந்தப் பெண், நளினியை நேசித்திருக்கலாமே!

யோசித்தபடியே சென்றுகொண்டிருந்த சீலனுக்குப் பாட்டி மனதில் இருந்ததாக, அவன் சந்தேகித்த திட்டம், இதுதானோ என்று தோன்றியது.

இருக்கலாம். ஆனால் பாட்டியாகச் சொல்லாமல் அவர் மனதில் இருப்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியாது...

மேலே யோசிக்க முடியாமல், அறை வந்துவிட, "எங்கே அண்ணா, என்ன சட்டை வாங்கி வந்தாய்?" என்று, 'உம்' மென்ற முகத்துடனேயே, சுந்தர் கேட்டான்.

"சட்டையா? என்ன சட்டை?" என்று, மாமன் மகன், இலகுவாகக் கேட்கவும், முன்னவனுக்குக் கோபம் வந்து விட்டது.

"என்ன சட்டையா? கொள்முதலுக்குப் போனபோது வாங்கி வந்ததாக, இப்போதுதானே, சொன்னாய்?" என்று ஆத்திரத்துடன் வினவினான்.

தன் பாணியை மாற்றிக் கொள்ளாமலே, "தம்பீ, நாங்கள் என்றைக்குச் சட்டை ஏற்றுமதி செய்தோம்? மேஜை விரிப்புகளும், படுக்கை விரிப்புகளும்தானே? இவைகளைக் கொள்முதல் செய்கிற இடத்தில், சட்டை எப்படிக் கிடைக்கும்?" என்று கேட்டான் சீலன்.

குழம்பிப்போய், "பின்னே ஏன் அண்ணா, சட்டை வாங்கி வந்ததாகச் சொன்னாய்?" என்று புரியாத மலைப்புடன், இறங்கிவிட்ட குரலில் சுந்தர், விசாரித்தான்.

"பின்னே என்னப்பா? உன் ஆருயிர்க் காதலியிடம், தூது போகச் சொன்னாயே, அவளிடம், தனித்துப் பேச ஒரு வாய்ப்பை உண்டாக்க முயன்றால், அதைக் கெடுக்கத் தலைகீழாக நிற்கிறாயே என்று அந்த நளினி முன்பாகவே கேட்க முடியுமா,



சொல்லு?" என மூத்தவன் கேட்க, அடுத்தவன் முகத்தில் அசடு வழிந்தது.

"சா...ரி அண்ணா" என்று குழைந்தான், "நீ ஒன்றும் கோபித்துக் கொள்ளவில்லையே? தயவுபண்ணி, என்னை மன்னித்து விடு, அண்ணா" என்று காலில் விழாத குறையாகக் கெஞ்சினான்.

"சரிசரி, விடு" என்று அவனைச் சமாதானப்படுத்தி விட்டு, ஒருவழியாக, சத்யசீலன், சுமனாவை மட்டும் அழைத்துக் கொண்டு காரில் கிளம்பினான்.

இவளிடம் எப்படிப் பேசினால் நம் எண்ணம் நிறைவேறும் என்று யோசித்தபடி.

சுமனா காரில் அமர்ந்திருந்த விதம் சீலனுக்கு வியப்பூட்டியது, மனமில்லாவிட்டாலும், கொஞ்சம் மதிப்பையும் கூட.

அவன், முதலாளியம்மாவுடைய பேரன் என்பதற்காக, அவள் தனி மரியாதை கொடுத்து, ஓரத்தில் ஒட்டில் உட்காரவும் இல்லை, ஓர் ஆணுடன், குறிப்பாக, இளைஞனுடன் தனியே செல்கிறோமே என்று, வளைந்து நெளிந்து, குழையவும் இல்லை. அதற்காக, ஒரேயடியாக விறைத்துக்கொண்டு, அமரவுமில்லை. சாதாரணமாக, அதேசமயம் இலகுவாக உட்கார்ந்திருந்தாள்.

சுமனாவாகப் பேச்சைத் தொடங்குவதாக இல்லை என்பது நன்றாகத் தெரிந்தது.

அது மதுரை வீதிகளின் போக்குவரத்து நெரிசலைச் சமாளித்து சீலன்,காரோட்டும்போது, இடைஞ்சல் செய்வது கூடாது என்று அவள் பேசாமல் இருந்திருக்கலாம், ஒரு பெண் அனாவசியமாக, ஆணோடு பேசுவது தவறு என்ற

போதனையோடு அவள் வளர்க்கப்பட்டிருக்கலாம். எல்லா வற்றுக்கும் மேலாக அன்று காலை உணவின்போது. அவன் மறைமுகமாகக் குற்றம்சாட்டியதின் காரணமாகவும் இருக்கலாம்.

ஆனால். அதற்காக, சீலனும், சும்மா இருந்துவிட முடியாதே. அங்கே சென்னை திரும்பியதும், அத்தை காமேசுவரிக்குப் பதில் சொல்ல வேண்டும்.

அதனால், சத்யசீலன் தானாகவே, சுமனாவிடம் பேசத் தொடங்கினான்.

இயல்பான பேச்சு. புதிதாகச் சந்தித்தவர்கள் பேசக் கூடிய பேச்சு. தந்தை, தாய், உடன்பிறந்தோர் பற்றி விசாரித்தான்.

தன்னைப் பற்றிய பேச்சை, சுமனா விரும்பவில்லை என்பது போலத் தோன்றினாலும், சீலனின் கேள்விகளுக்குப் பதில் கூற அவள் மறுக்கவில்லை.

சுமனாவுடைய பெற்றோர் உயிருடன் இருக்கிறார்கள். அருகில் திருமங்கலத்தில்தான் வசிக்கிறார்கள் என்ற சேதி. சீலனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

இவ்வளவு பக்கத்தில் இருந்துமா மகளை முழுக்க முழுக்க இன்னொரு வீட்டில், தங்க விட்டிருக்கிறார்கள்! எப்படி? பாட்டி கொடுக்கும் சம்பளத்தின் அளவு நினைவு வரவும் அவனது வியப்பு மறைந்தது.

பணம் பத்தும் செய்யுமே.

முதியவர் ஒருவருக்கு முழு நேர உதவியாளாய் இருப்பதிலோ, அதற்குச் சம்பளம் பெறுவதிலோ, குற்றம் கூற ஒன்றும் இல்லை. ஆனால் யார்யார் என்னென்ன வேலை செய்வது என்றும் ஒன்று இருக்கிறதல்லவா? இவளது தோற்றத்துக்கு...



ஒன்று தோன்ற, சுமனாவுடைய தந்தையின் கல்வித்தகுதி, வேலை பற்றி, சீலன் விசாரித்தான்.

கார்த்தீசன் - சுமனாவுடைய தகப்பனார், பொறிஇயலில் 'டிப்ளமா' வாங்கியவர். தனியார் நிறுவனம் ஒன்றில் வேலைசெய்து கொண்டிருந்தார். லீவு எடுத்துத் திருமணம் ஒன்றிற்குப் போய்விட்டுத் திரும்பும்போது. விபத்தில் மாட்டிக் கொண்டார். குணமாகி வரும்போது ஸ்ட்ரோக் வந்து. அப்புறம், அவரது நடமாட்டம். ரொம்பவும் குறைந்து போயிற்று. வெளியே போய் வேலை செய்ய முடியாமல் வீட்டோடு அடைந்து கிடக்கும்படி ஆகிவிட்டது.

அப்பாவைப் பார்த்துக் கொள்ள, அம்மா.

தம்பி படிக்கிறான்.

காமேசுவரி கூறியது, நினைவுவர, "தம்பியை நீதான் படிக்க வைக்கிறாய் போல" என்றான் அவன்.

லேசாக முறுவல் செய்து, "கண்ணன் ரொம்பக் கெட்டிக்காரன். படிப்புச் செலவு முழுவதும் உபகாரச் சம்பளம்தான். உன...ச்சு, மற்றதெல்லாம்...எப்படியோ பார்த்துக் கொள்கிறான்" என்று முடித்தாள் அவள்.

"அவன், கெட்டிக்காரன். சரிதான். ஆனால். கண்ண-னுடைய அக்கா படிப்பில் எப்படியோ?"

ஓரக்கண்ணால் ஒரு பார்வையைச் செலுத்தி அவன் கேட்ட தினுசில், சுமனாவின் முகத்தில் தோன்றிய முறுவல், உடனே வாடி மறைந்தது. முகத்தை வெளிப்புறமாய்த் திருப்பி எதையோ பார்த்தவாறு, "அவளும் பரவாயில்லாமல் படிக்கக்கூடியவள் தான்" என்றாள், மெல்லிய குரலில்.

"பின்னே, இப்போது படிக்கக் காணோமே. ஒருவேளை,

உபகாரச் சம்பளம் கிடைக்கிற அளவு கெட்டிக்காரத்தனம் இல்லையோ?" என்று. சுமனாவின் முந்தைய முறுவலை எண்ணி, கேலிக்குரலிலேயே கேட்டான் சீலன்.

இந்தப்பெண்ணுக்கு நகைச்சுவை உணர்வு இருக்கிறது. அதைக் கொண்டே இவளது மனப்பூட்டைத் திறக்கலாம் என்று எண்ணித்தான் சீலன் அந்த மாதிரிப் பேசியது. அதற்குப் பலனும் இருந்தது.

"இருந்ததே" என்று வேகத்துடன் தொடங்கியவளின் பேச்சு உடனே நின்றது. ஒரு சிறு மவுனத்தின் பின் சற்று மரத்த குரலில், "ஆனால், அதைவிடவும், சம்பாதிக்க வேண்டிய தேவை அதிகமாகிப் போயிற்று" என்று முடித்தாள்.

இந்தமாதிரி வேலையெல்லாம் செய்தா? சீலனால் நம்ப முடியவில்லை.

பார்வதிக்கு, சுமனா செய்யும் பணிகள் என்னென்ன என்று, அவனுக்குத் தெரியும். ஒரு படித்த கெட்டிக்காரப் பெண் இந்த வேலைகளைச் செய்வது என்றால், அதற்கு, பாட்டி கொடுக்கும் அதிகப்படிப்பணத்தின் மீதுள்ள ஆசைதான், காரணமாக இருக்கும் என்பதே சீலனின் முடிவு.

மற்றபடி, படிப்புக்கு ஓரளவேனும் ஏற்ப, சம்பாதிப்பதும், பகுதி நேரத்தில் படிப்பதும், இந்தக்காலத்தில் அடியோடு முடியாத காரியம் அல்ல.

அப்படி முடியாது என்பது, வெறும் காது குத்துகிற வேலை!

"ஆனால், தம்பியால் படிக்க முடிகிறதே!"

"ஆமாம்" என்றதற்கு மேலாக எதையும் விவரிக்க, இப்போது அவள் தயாராயில்லை.



ஆனால், இத்தோடு விட்டுவிட, அவனால் முடியவில்லை. அப்புறம் அவன் எண்ணி வந்த காரியம என்ன ஆவது?

எனவே, "அப்பா வேலை செய்த இடத்தில் வைப்புநிதி, காப்புநிதி எல்லாம் ஒழுங்காகத் தந்தார்களா? சாரி, வெறும் வம்பு பேசுவதற்காகவோ, பொழுதுபோவதற்காகவோ கேட்கவில்லை. இந்தப் பக்கம் எங்களுக்குக் கொஞ்சம் செல்வாக்கு உண்டு. தேவைப்பட்டால் உதவலாமே என்றுதான் கேட்டேன்" என்றான் அவன்.

சிறுதயக்கத்தின் பின், மீண்டும் அதே மரத்த குரலில்தான் சுமனா பேசினாள். "அப்பா வேலை செய்தது, தனியார் நிறுவனத்தில் 'அலவன்ஸ்' அது இது என்று மொத்தமாய் நிறையக் கொடுத்தார்களே தவிர, அடிப்படைச் சம்பளம், மிகவும் குறைவு. அதனால், இந்த நிதிகள் வகையில் அதிகமாக ஒன்றும், கிடைக்கவில்லை. அப்பாவின் வைத்தியத்துக்கே, அந்தப்பணம், பெரும்பாலும் செலவாகி விட்டது.

லீவு எடுத்திருந்தபோது, விபத்து நடந்ததால், வைத்தியச் செலவுக்கும் உதவி செய்ய முடியாது என்று விட்டார்கள். சட்டப்படி, நிறுவனத்திடம், எதைக் கேட்கவும் வழியில்லை என்று விசாரித்துத் தெரிந்து கொண்டேன்" என்று முடித்தாள்.

கேட்கக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஒருவராய்ச் சம்பாதிக்கும் குடும்பத்தலைவருக்கு விபத்து என்பதே, துன்பம்தான். அவரது உடல் நிலை குறித்த மன உளைச்சல், அலைச்சல், பெரும் செலவு, வருமானம் குறைந்து போவது எல்லாமே பெருத்த வேதனைதான்.

சுமார், இருபது, இருபத்திரண்டு வயதில், இந்தப்பெண், மருத்துவமனைக்கும், தந்தையின் அலுவலகத்துக்கும்,

வீட்டுக்குமாக என்ன அலைச்சல் அலைந்திருப்பாள்? 'சட்டப்படி' என்றாளல்லவா? அப்படியானால், வக்கீலிடமும் ஓடியிருக்கிறாள்.

எல்லா இடங்களிலும், எதிர்மறைப் பதில்களையே கேட்டுக்கேட்டு எவ்வளவு சோர்ந்து போயிருப்பாள், என்றெல்லாம் எண்ணுகையில், சீலனுக்குப் பரிதாபமாகக்கூட இருந்தது.

பணம்பணம் என்று பணவெறியே பிடித்திருக்கலாம். தப்பில்லை.

ஆனால், அதற்காகக் கிடைத்தது ஒரு புளியங்கொம்பு என்று இவள், சுந்தரின் குடுமியைப் பிடித்துக் கொள்வது எந்தவிதத்தில் நியாயம் ? வேண்டுமானால், இவள், இவளுடைய தந்தை வேலைசெய்த நிறுவனத்துடைய வாரிசைப் போய் பற்றிக்கொள்ளட்டுமே. அந்த நிலையில், இவளுக்கு உதவிகூடச் செய்யலாம். அதைவிட்டு...

ஊகூம். சுந்தரை மீட்டே ஆகவேண்டும்!

எப்படி என்பதுதான் இப்போது கேள்வி.

அதட்டல், மிரட்டல்களுக்கு இவள் பணியக்கூடியவள் அல்ல, அடுத்த வழியில்தான் முயற்சிக்க வேண்டும்.

சத்யசீலன் சிந்தனையில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு, "அம்மா உங்கள் பாட்டி கூட, இந்த நிறுவனத்திடம் கொஞ்சம் பணம் வாங்கித்தர, எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார்கள். ஆனால், ஒன்றும் பலன் தரவில்லை" என்றாள் சுமனா.

சீலன், அவளுக்காக யோசித்துக்கொண்டு இருப்பதாக எண்ணிப் பேசுகிறாள்.



## 3

சுற்ற உணர்வு லேசாக உறுத்த, "பாட்டி எதையும் அரைகுறையாக விடுகிறவர்கள் அல்ல. ஆனாலும் விவரங்கள் எல்லாம் பாட்டியிடம் இருக்குமல்லவா? நானும், ஒருதரம் பார்க்கிறேனே" என்றான் அவன்.

நல்லவேளையாக, அதற்குள் கோயில் ஓரளவு அருகில் வந்து விடவும், "என்னை இங்கேயே இறக்கிவிட்டு விடுங்கள். கோயில் முன்னே திருப்புவது சிரமம்" என்று காரை நிறுத்தச் சொல்லி, சுமனா இறங்கிக் கொண்டாள்.

சுமனா, கண்ணுக்கு மறையும் வரை, தன்னையறியாமல், சீலன் பார்த்துக்கொண்டு நின்றான்.

இந்த நடையும், இவளது நடவடிக்கையும்! எவ்வளவு முரண்பாடு! நடை, உடை, பாவனை எல்லாமே பயின்று வைத்திருப்பாள் போல.

சுமனா, பார்வையிலிருந்து அகன்றதும் அருகில் இருந்த கடையில், அபிஷேகம் எப்போது முடியும் என்று விசாரித்து அறிந்துகொண்டு காரில் ஏறினான்.

அங்கே இங்கே சுற்றிவிட்டுச் சரியாக அந்த நேரத்துக்குத் திரும்பவும், அங்கே வந்து நின்றான்.

சில நிமிடங்களில், சுமனாவும் வந்துவிட, வீடு நோக்கிப் பயணம் தொடங்கியது.

சீலன், இப்போது, காரைச் சற்று மெதுவாகவே ஓட்டினான். வீட்டை அடையுமுன் அவளிடம் சொல்ல வேண்டியதை; அவன் சொல்லி முடிக்க வேண்டுமல்லவா?

சிறு அமைதியின்பின், சுமனாவே பேச்சைத் தொடங்கினாள். "ஒன்று கேட்கலாமா? உங்கள் பெயர் சத்யசீலன் என்றார்கள். ஆனால் சீலன் என்று அழைக்கிறார்களே, ஏன்? பொதுவாக, சத்யன் என்று பெயரின் முன்பாதியைச் சொல்லி, அழைப்பதுதானே வழமை?" என்று விசாரித்தாள்.

கோயிலுக்கு வந்தபோது, அவன் முன்வந்து பேச்சுக் கொடுத்ததின் மகிமை! சகஜமாகப் பேசுகிறாள். அவனுக்குத் தேவையும் அதுதானே?

இலகுவாகப் பதில் சொன்னான். "என் அப்பா பெயர் சத்யமூர்த்தி. என் பெயரிலும், சத்யம் இருக்க வேண்டுமென்று அம்மா ஒரே பிடிவாதமாம். இரண்டு சத்யன் சரிப்பட்டு வராதில்லையா? அதனால், நான், 'சீலன்' ஆகிவிட்டேன்!" என்று சிரித்தான்.

சுமனாவின் முகத்திலும் மென்னகை மலர்ந்தது.

சற்று தூரம் சென்றதும், "அனாவசியமாய்ச் சுற்றி வளைக்க வேண்டாமே, சுமனா நான் எதற்கு இங்கே வந்திருக்கிறேன் என்று, உனக்குத் தெரியும்..." என்று நயந்த, ஆனால், உறுதியான குரலில் அவன் கூறினான்.

சடக்கென்று அவள், அவனைத் திரும்பிப் பார்த்ததை சீலனால், உணர முடிந்தது; அவளது உடல் சற்று விறைப்புற்று நிமிர்வதையும் கூட.

பணம் கைக்கு வரப்போகிறது என்கிற பரபரப்பா?

பேயாய் அலறிக்கொண்டு வந்து முந்த முயன்ற லாரியில் மோதி விடாமல், காரை ஒதுக்கி, லாரி சென்ற பின், மீண்டும் காரைச் சாலைக்குக் கொணர்ந்து ஓட்டத்தொடங்கியபின், ஓரக்கண்ணால் சீலன், சுமனாவை நோக்கினான்.



அவள் முகம் அமைதியாகவே இருந்தது. சாலையோரத்தில் தந்திக் கம்பங்களின் மீது இணைகளாக, அமர்ந்திருந்த பறவைகளை, அவளது பார்வை ஆர்வமாய் நோக்கிக் கொண்டிருந்தது.

நடிப்பு, என்றது சீலனின் மூளை.

"க்கும்" என்று தொண்டையைக் கனைத்துக் கொண்டான். சுமனா தொடர்ந்து வெளியையே பார்த்துக் கொண்டேயிருந்தால் என்ன செய்வது, என்று அவன் யோசிக்கையிலேயே, அவள், கண்களில் கேள்வியுடன் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"எனக்குப் பதில் சொல்லவில்லையே!"

வியந்து நோக்கி, "நீங்கள் என்னிடம் ஒரு கேள்வியும் கேட்கவில்லையே!" என்றாள் சுமனா. பற்களை நரநரவென்று கடிக்கும் உந்து தலை அடக்கியபடி, "இப்போதுதானே - சரியாக, அந்த லாரி வருவதற்கு ஒரு வினாடி முன்பாகக் கேட்டேனே" என்று பொறுமையாகப் பேசினான் அவன்.

"அது, கேள்வி இல்லையே! உங்களுடைய, ஒரு கருத்தைச் சொன்னீர்கள், அவ்வளவுதானே?"

"அதை நீ ஒத்துக்கொள்ளவும் இல்லையே?"

"இது, சுதந்திர நாடு, மிஸ்டர் சத்யசீலன். உங்கள் கருத்தை நாங்கள் ஒத்துக்கொண்டாக வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை, நான் ஒத்துக்கொள்ளக்கூடிய கருத்தைத்தான், நீங்கள் சொல்லியாக வேண்டும் என்கிற நிர்ப்பந்தமும் இல்லை" என்றாள் அவள், சற்று விட்டேற்றியாக.

"ஓகோ! ஏதோ கிறுக்கன் உளறிக்கொண்டு இருக்கிறான் என்று இருந்தாய் போல" என்றான், அவன் பொறுமையிழந்து.

ஆனால் அவள், "இதுவும் உங்கள் கருத்துதான். நான் சொல்லவில்லை" என்று அவள் திருப்பவும் தன்னைமீறி, அவனுக்குச் சிரிப்பு வந்தது. அதை வெளிக்காட்டாமல் மறைத்து, "அப்படியானால், என் பக்கத்தில் ஒரு கழுதை உட்கார்ந்திருக்கிறது என்று நான் சொன்னால், அப்போதும், அதையும், என் கருத்துதானே என்று சும்மாதான் கேட்டுக் கொண்டு இருப்பாய் அப்படித்தானே?" என்று பதில் கொடுத்தான்.

"நிச்சயமாக" என்றாள் அவள் சற்றும் தயங்காமல். "ஆனால் தொடர்ந்து என் கருத்துக்களை நானும் சுதந்திரமாகச் சொல்லுவேன் அவ்வளவுதான்" என்றான் தொடர்ந்து.

சிரிப்பை அடக்க, சீலன் பெரும்பாடு பட்டான் கூடவே திகைப்பையும் சட்சட்டென்று இப்படிப் பதில் கொடுக்கிறானே. இவளது மூளை எவ்வளவு சுறுசுறுப்பாகவும், கூர்மையாகவும் வேலைசெய்ய வேண்டும்? அவ்வளவாக யோசிக்கத் தெரியாத அதைவிட யோசிக்க நினைக்காத சுந்தரை மடக்குவது இவளுக்கு எவ்வளவு எளிதான காரியம்?

பயமேதும் இல்லாமல், இவள் பேசுவதைப் பார்த்தால், சுந்தர் கைநழுவி விடுவானோ என்கிற அச்சமே இல்லை போலல்லவா தோன்றுகிறது?

இப்படி வார்த்தை ஜாலங்களில், நேரத்தை வீணாக்குவது தவறு. வீடு சேருமுன் பேரத்தைப் பேசி முடிக்க வேண்டும்.

"இதுபோன்ற வீண்பேச்சு வேண்டாம் என்றுதான் நான் முதலிலேயே சொன்னேன்" என்றான் அவள் உள்ளூரச் சற்று வருத்தத்துடனேயே. ஏனெனில், சுமனாவுடன், வார்த்தைக்கு வார்த்தை பதில் கொடுத்துப் பேச்சுப் போர் புரிவது சீலனுக்கும் சுவாரசியமாகத்தான் இருந்தது.



உதட்டோரத்தில் தோன்றத் தொடங்கியிருந்த புன்முறுவல் மறைய "விஷயம் என்னவென்று சொல்லுங்கள்" என்றாள் சுமனா.

"உன் விருப்பம்?" என்று தோளைக் குலுக்கினான், சீலன். "சுந்தரை விட்டு விலகுவதற்கு, உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?" என்று அழுத்தமான குரலில் வினவினான்.

"பணமா?"

"ஆமாம், பணம்தான். அவன் கையால் தாலி கிடைக்கும் என்று நீ நினைத்திருப்பாய். அது, கிடைத்தால் ஒரு கோடீசுவரி ஆகிவிடலாம் என்றும் மனப்பால் குடித்திருப்பாய். ஆனால் அது, வெறும் மனப்பால்தான், பகல் கனவு ஒரு நாளும் நடவாது. சுந்தரைத்தான் பிடித்தாயிற்றே பிறகு அது ஏன் முடியாது என்று நீ. கேட்கலாம். முதலும், முக்கியமுமான காரணம், எந்தவிதத்திலும், உன்னால் வெல்ல முடியாத காரணம் என் அத்தை சுந்தருடைய தாய். அவர்கள் ஒருநாளும் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கவே மாட்டார்கள். அத்தையின் மறுப்பை மீறி, சுந்தரும், ஒரு நாளும், உன் கழுத்தில் தாலி கட்டவேமாட்டான். ஆகவே, உன் கனவுகள், இலவம் பழத்துக்காகக் காத்திருந்த கிளியினது போல ஒரு பயனும் இல்லாமல், வீணாகத்தான் போய்விடும்" என்று சொல்லிக் கொண்டே போனவன், சுமனா, எதுவுமே பேசாமல் சும்மா கேட்டுக் கொண்டு இருக்கவும், " என்ன, நான் சொல்வது, புரிகிறதா இல்லையா?" என்று சற்று எரிச்சலுடனேயே கேட்டான்.

ஆனால், "என் தாய்மொழி தமிழ். நீங்கள் தமிழில்தானே, சொன்னீர்கள்? பின்னே, எனக்குப் புரியாமல் போவானேன்?" என்று சுமனா அலட்சியமாகக் கேட்கவும். அயர்ந்து போனான்.

அச்சம், சீலன் எதிர்பார்த்தது. சுந்தரைப் பெற்றவள். திருமணத்தைத் தடுத்து விடுவாளோ என்று சுமனா பயம் கொள்வது இயற்கை.

அடுத்து கவலை. அதுவும், அவன் எதிர்பார்த்ததுதான். வருங்கால மாமியாராகப் போகிறவள் என்று நினைத்தவள், மறுப்பையல்லவா விட்டிருக்கிறாள். இனி என்னசெய்யப் போகிறோம் என்கிற கலக்கமும் இயல்புதான்.

எங்கள் காதலை எப்படித் தடுக்கலாம் என்று ஆத்திரப்படுவது, யார் என்ன சொன்னாலும், நாங்கள் மணந்தே தீருவோம் எனும் ஆவேசம், இதெல்லாம் கூட நடக்கக்கூடியவையே.

ஆனால், சுமனாவின் அலட்சியம், எந்தவிதத்திலும் சீலனின் கணக்கில் அடங்காமல், அவனைத் திகைக்க வைத்தது.

சுந்தர் முழுக்க முழுக்க தன் கைக்குள் இருக்கிறான் என்ற திமிரல்லவா இவளை இவ்வளவு அலட்சியமாகப் பேச வைத்திருக்கிறது!

மற்ற எதற்காக இல்லை என்றாலும், இந்தத் திமிருக்காக-வாவது, இவள், காமேசுவரி அத்தைக்கு மருமகள் ஆகாமல் தடுத்தாக வேண்டும். தடுத்தே ஆகவேண்டும்.

எனவே, சுமனாவை அந்த இடத்தில் இறக்கி விட்டுவிட்டுப் போய் விட வேண்டும் என்ற ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, சீலன் அமைதியாகவே பேசினான். "எதையும் வேடிக்கையாக எடுத்தே உனக்குப் பழக்கம் என்று நினைக்கிறேன். அப்படி இல்லாவிட்டால், உன் குடும்பத்துக்கு நேர்ந்த துன்பங்களைச் சமாளித்து, நீ மீண்டிருக்க முடியாதுதான். ஆனால் சுமனா, இது, வேடிக்கைக்குரிய விஷயம் அல்ல. சுந்தரைக் கொண்டு எப்படியாவது, என் அத்தையைச் சமாளித்துவிட முடியும் என்று, நீ நினைத்தால், அதைப்போல ஒரு முட்டாள்தனம், உலகத்தில் கிடையாது. சுந்தர், இதுவரை, செல்லப்பிள்ளையாக வளர்ந்தவன். அத்தையின் நல்ல பக்கத்தையே, பார்த்து வளர்ந்தவன். அத்தை



கோபப்பட்டோ, பிடிவாதம் பிடித்தோ அவன் அறிந்ததே இல்லை..."

"ஆனால், நீங்கள் அறிந்திருப்பதாகத் தெரிகிறதே! அதை அறிய நீங்கள் அப்படி என்ன தப்பு செய்தீர்கள், மிஸ்டர் சத்யசீலன்?"

மனதை மறையாமல், அவளை உறுத்து நோக்கினான். அவன், "இந்த விஷயத்தில் விளையாடுவது, உனக்கு நல்லதல்ல, பெண்ணே. அப்புறம், நிற்க, ஒதுங்க நிழல்கூட இல்லாமல், நடுத்தெருவில் நிற்க வேண்டியதாகி விடும். ஜாக்கிரதை" என்று எச்சரித்தான்.

"என்ன சொல்லுகிறீர்கள், மிஸ்டர் சத்யசீலன்? சுந்தருடைய அம்...ம்மா விஷயத்தில் நான் விளையாடுவதா? என்ன மாதிரித் தப்புக்கு அவர்கள் கோபப்படுவார்கள் என்று...அவர்கள் குணம் பற்றி விசாரித்து அறிந்துகொள்ளலாம் என்று பார்த்தேன். தப்பா?" என்று சாதுவாய்க் கேட்டாள் சுமனா.

மெய்யாய் இருந்தால், தப்பில்லைதான். அவளது முயற்சியில் தப்பு சொல்ல முடியாதுதான். ஆனால், அவள் கேட்ட விதம் மெய்யாய்த் தெரியாததோடு, அப்படியே மெய்யாய் இருந்தாலும், இந்த முயற்சிக்கு சீலன் இடம் கொடுப்பதும் முடியாத காரியம்.

"அத்தையைப் பற்றி நீ அறிவது அவசியம் இல்லை. சுமனா. ஏனெனில் அவர்கள், ஒருபோதும், உனக்கு - உன்மீது தனியாக ஒரு குற்றமும் நான் சொல்லமாட்டேன். ஆனால் உன் போல் ஒருத்தியை மருமகளாக ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள்" என்றான், இளக்கமற்ற குரலில்.

"என் போல ஒருத்தி என்றால்?"

இவள் முட்டாள் அல்ல. புரியாமல் கேட்பதற்கு. சொல்வதற்கு அவள் சங்கடப்பட வேண்டும். அவளைச் சங்கடப்பட வைக்கவேண்டும் என்றே கேட்கிறாள்! ஆனால். இதற்காகவெல்லாம் அஞ்சிக்கொண்டு. அவன் சொல்லாமல் இருந்துவிடப் போகிறானா, என்ன?

கேட்டாயல்லவா. வாங்கிக் கட்டிக்கொள் என்ற மனோபாவத்தில், "உன்னைப்போலப் பின்பலம் ஒன்றும் இல்லாத ஒருத்தி பெரும் பணம் இல்லாத - உனக்குத்தான். ஒன்றுமே கிடையாதே எங்களைப் போல, தலைகீழாக நின்றாலும் என் அத்தை மகனை மணந்து கொள்ள முடியாது!" என்று முடித்தான். "நீ கேட்டதால் சொன்னேனே தவிர. உன்னை வருத்தப்படுத்துவதற்காக அல்ல சாரி" என்றான், சற்றும் வருத்தமற்ற குரலில்.

ஆனால். சுமனாவின் கவனம் வேறு எங்கோ இருந்தது. ஓரக்கண்ணால் சீலன் பார்த்தபோது. அவள் முகத்தில் போலும். தீவிர சிந்தனைதான் தெரிந்தது.

யோசிக்கட்டும், யோசிக்கட்டும். இவ்வளவு வெளிப்படையாகப் பேசியபிறகுதான், இவளுக்கு விஷயம் புரிகிறது போலும்! நன்றாக யோசித்து நல்ல முடிவாக எடுக்கட்டும்.

சீலன் நம்பிக்கையோடு காத்திருக்க, யோசித்து முடித்துவிட்டு, சுமனா பேசினாள். "நீங்கள் சொல்வது ஓரளவுதான் சரி, மிஸ்டர் சத்யசீலன். ஏனென்றால் யாராலுமே, தலைகீழாக நின்று திருமணம் செய்ய முடியாது" என்றாள் சீரியசாக.

இவள் சரியான குரங்காகத்தான் இருக்க வேண்டும்! இல்லை, பிசாசு! குரங்குப்பிசாசு!

பற்களை இறுகக் கடித்து. வார்த்தைகளை அடக்கினான்,



சீலன். காரை மெல்ல வேகம் குறைத்து. ஓரமாக ஒதுக்கி நிறுத்தினான். சுமனா. அவளது பொருட்களை எல்லாம் எடுக்கத் தொடங்கவும், "என்ன?" என்று கேட்டான்.

"என்னை இறக்கிவிடப் போகிறீர்கள்தானே?" என்று பிரசாதக் கூடையை எடுத்தாள்.

"இல்...லை" என்று இறுகிய குரலில் கூறி. கூடையை அவள் கையிலிருந்து பிடுங்கி, மீண்டும் 'சீட்' டில் வைத்தான். அவன். "நாம் இன்னும் பேசி முடிக்கவில்லை!" என்றான் ஆத்திரத்துடன்.

"ஓ. ஆமாமில்லை? ஏதோ பணம் பற்றிப் பேசினீர்கள் இல்லையா? எவ்வளவு பணம்?" என்று கேட்டாள். அவள்.

விழி இடுங்கக் கூர்மையுடன், அவளைப் பார்த்தான். சீலன். "சீ. என்ன. எனக்கு வேண்டுமென்றே வெறுப்பேற்ற எண்ணுகிறாயா?" என்று உள்ளடக்கிய சினத்துடன் வினவினான்.

"இல்லை" என்றாள். அவள் தெளிவாக. "உங்கள் அத்தை மகன், சுந்தரைத் தலைகீழாக நின்றாலும் நான் மணந்து கொள்ள முடியாது என்று, வெகு தெளிவாகச் சொல்லி விட்டீர்கள். இந்த நிலையில் அடுத்த நல்ல தீர்வு, இரு தரப்பினருக்கும் லாபம் தரக்கூடியது என்ன என்று யோசிக்க வேண்டியதுதானே?" என்று நிதானமாகக் கேட்டாள்.

பணம் பத்தும் செய்யும்.

சீலன், எண்ணிவந்த காரியம் நிறைவேறப் போகிறது.

ஆயினும், மகிழ்ச்சி ஊற்றாகப் பெருகுவதற்குப் பதிலாக, விசித்திரமான வகையில், அவன் மனதில், ஏமாற்ற உணர்ச்சிதான் உண்டாயிற்று.

சிரமப்பட்டு, அதை அடக்கிக்கொண்டு, "உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?" என்று கேட்டான்.

"எவ்வளவு தருவீர்கள்?" என்று பதிலுக்குக் கேட்டாள் அவள். ஒரு பேராசைக்காரியிடமிருந்து, அத்தை மகனைக் காப்பாற்றுவதில், சந்தோஷம்தான் பட வேண்டும் என்று, உள்ளூரச் சொல்லிக்கொண்டு, சீலன், தன் பேரத்தைத் தொடங்கினான்.

"உனக்கு சற்று அதிகமான பணத்தேவை என்று தெரிகிறது. இல்லை என்றால், இந்த வழி சென்றிருக்கவே மாட்டாய் என்பது என் கருத்து. ஒரு ஓர் இரண்டு லட்சம், உனக்குப் போதுமில்லையா? உன் தேவை அதற்குமேல் இராது என்று நினைக்கிறேன்" என்று, அவளுக்காகச் சிந்திப்பது போலப் பேசினான்.

சுமனா, சும்மா இருக்கவும், "அல்லது, கூடுதலாகத் தேவைப்பட்டாலும், சொல்லு. அத்தையிடம் பேசி இன்னும் ஒரு லட்சம் சேர்த்துத் தர ஏற்பாடு செய்கிறேன்" என்று, இதமாகக் கூறினான். "சொல்லு, சுமனா, உன் தேவை என்ன?"

அதுவரை, எதுவும் பேசாமல், சீலனையே நேராகப் பார்த்துக் கொண்டிருந்தவள், மெல்ல வாய்திறந்து, "என் தேவை, உங்கள் அத்தையுடைய சொத்து என்றுதான், நீங்களே சொன்னீர்களே!" என்றுரைத்து சீலனின் முகம் கறுப்பதை, உள்ளூர ரசனையுடன் பார்த்துவிட்டு, மீண்டும் தொடர்ந்தாள், "ஆனால் அது நடக்காத காரியம் என்றும் ஆகிவிட்டதால்."

"ம்...மேலே சொல்லு, சுமனா, உனக்கு எவ்வளவு வேண்டும்?" என்று பரபரப்பை உள்ளே அடக்கிக் கொண்டு, முடிந்த அளவு நிதானத்துடன் சீலன் கேட்டான். இவ்வளவு எளிதாகவும், சீக்கிரமாகவும் வேலை முடியும் என்று அவன்



எதிர் பார்க்கவே இல்லையே. இனி,தொகைதான் படியவேண்டும். கூடக் கொஞ்சம் கேட்டாலும் கொடுத்து விடலாம். அப்படிப் பார்த்தால், இந்தப் பெண்ணும் பாவம் தானே? அவனது மனநிலைக்கு ஏற்றபடி, "அது...நீங்களே பார்த்துச் சொல்லுங்களேன், சீலன், சார்? நியாயமாகவும் பேசுகிறீர்கள், என்னிடம் இரக்கமும் காட்டுகிறீர்கள்" என்றாள் அவளும், பதவிசாக.

நிஜமாகத்தான் சொல்லுகிறாளா என்று எழுந்த சந்தேகத்தை அடக்கிவிட்டு, "ஒரு நாலு லட்சம் வரை அத்தையிடம் கேட்டு வாங்கித்தர முடியும். ஆனால், அதற்குமேல் நீ ஆசைப்படுவது தப்பு; நியாயமல்ல" என்றான் சீலன்.

"நா...லு லட்சம்! பெரிய தொகை! ம்?" என்றவள் திரும்பி, அருகில் இருந்தவனின் முகத்தைப் பார்த்தாள். "சுந்தர் பயன்படுத்தும், அவரது கார், லான்சர், அதன் விலை தெரியுமல்லவா? அவர், சாதாரணமாகப் பயன்படுத்தும் ஒரு காரின் விலையைக் கொடுக்கக்கூட, உங்களுக்கு மனம் வரவில்லையே, மிஸ்டர் சத்யசீலன்?" என்று கேட்டபோது, சுமனாவின் குரல் அடியோடு மாறி, சீலனைக் கிண்டல் செய்தது.

அவனது சந்தேகம் சரிதான். முதலிலிருந்தே, இவள் நாடகமாடிக் கொண்டுதான் வந்திருக்கிறாள். இருக்கட்டும் இதுவும் நல்லதுதான். அவ்வப்போது தலைதூக்கிய இரக்கத்தைத் துடைத்துப் போட்டுவிட்டு, வியாபாரமாகவே பேசலாம்.

"இப்போது, உனக்கு எவ்வளவுதான் வேண்டும் என்கிறாய்?" என்று அவளை நேராகப் பார்த்துக் கேட்டான். "முதல் இல்லாத வியாபாரம், என்ன வேண்டுமானாலும் கேட்கலாம் என்று, பேராசைப்படாதே. தகுதிமீறி ஆசைப் பட்டால், ஒன்றுமே கிடைக்காமல் போய்விடக்கூடும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு கேள்" என்றான் கறார்க்குரலில்.

ஓரக்கண்ணால் அவனை ஒருதரம் பார்த்தாள் அவள். தலையை மீண்டும் திருப்பிக்கொண்டு.

கைப்பையின் 'டிசைனைக்'க் கையால் வருடியபடி, "அதை அவ்வளவு அவசரப்பட்டுச் சொல்ல முடியுமா, மிஸ்டர் சத்யசீலன்? எத்தனையோ யோசித்து, மதிப்புப் போட்டு, அதற்குப்பிறகு அல்லவா, கூறவேண்டும்?" என்றாள், எதையோ யோசித்தபடி.

"அப்படியென்றால்?"

"இப்போது ஒன்றும் முடிவுசொல்ல முடியாது என்கிறேன், என்று அர்த்தம்" என்றாள். அவள் அலட்சியமாக தொடர்ந்து, "இப்போது என்னை இறக்கி விட்டுவிட்டுப் போகவேண்டும் போல இருந்தால் தாராளமாகச் செய்யுங்கள். நான் ஓர் ஆட்டோ பிடித்துக்கொண்டு, இலகுவாக வீட்டுக்குப் போய்விடுவேன். அங்கே, நான் காரில் வராமல் பாதிப்பயணத்தை 'ஆட்டோ'வில் செய்து முடித்ததின் காரணத்தைச் சொல்லும் உரிமையைக் கூட உங்களுக்கே விட்டுக்கொடுக்கிறேன். என்ன சொல்லுகிறீர்கள்? இறங்கவா?" என்று வினவினாள்.

"அப்படியானால், நீ, இப்போதைக்கு ஒரு முடிவும் சொல்லப் போவதில்லை?"

"ஊகூம்!" என்று தலையசைத்தாள் அவள். "என்ன, இறங்கட்டுமா?"

கண்ணால் அவளை எரித்துவிட்டு, காரை, அவன் எடுத்த வேகத்தில், சுற்றுப்புறமே அதிர்ந்தது. ஆனால், அவள் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

வீடு வந்து சேர்ந்ததும், காரை நிறுத்தியபடி, "நமக்குள் நடந்த பேச்சு வார்த்தைகளையெல்லாம் சுந்தரிடம் சொல்ல



மாட்டாய் என்று நம்புகிறேன்" என்று, ஓர் அழுத்தத்துடன் சீலன் கூறினான்.

"ஏனோ?"

வெறுப்புடன் நோக்கி, "கொஞ்சமாவது மனிதத்தன்மை இருந்தால், இதுபற்றி நீ யாரிடமும் பேசமாட்டாய்" என்றான் அவன்.

"மனிதத்தன்மையா? என்னிடமா? என்ன ஆச்சரியம்?"

பிரசாதக்கூடையை எடுத்துக்கொண்டு, காரைவிட்டு, இறங்கிச் சென்றவளின் முதுகை, சீலன், ஆத்திரத்துடன் முறைத்தான்.

படியேறிச் சென்றவளை, ஹால் வாயிலில், சுந்தர் எதிர்கொள்வதையும், இருவருமாகப் பேசியபடியே பாட்டியின் அறைப்பக்கமாகத் திரும்புவதையும் கவனித்த சீலன், அவசரமாகக் காரை ஒதுக்கி நிறுத்திவிட்டு இறங்கி, மடமடவென்று வீட்டினுள் சென்றான்.

## 4

இந்தப் பாதகிக்குத்தான் பாட்டியிடம் தன் சொந்தம் இருக்கிறதே பாட்டியிடமே, ஏதாவது, வத்தி வைத்துவிடக் கூடாதே.

அவசரமாக, அவன், உள்ளே சென்று பார்க்கையில், சுமனா விபூதிப் பிரசாதத்தை எடுத்துப் பாட்டியின் நெற்றியில், பூசிக் கொண்டிருந்தாள்.

"சர்க்கரைப்பொங்கல் தந்தார்கள், அம்மா ஒரே ஒரு வாய் சாப்பிடுகிறீர்களா? அதிகம் வேண்டாம்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

பெரிய பேரனைப் பார்த்ததும், "ரொம்பவும் நன்றாக என்னைக் கவனித்துக் கொள்கிறாளடா, வைத்தியர் மாதிரி உடம்பையும், உறவினள் மாதிரி, மனதையும் பேணுகிறாள் இவள் கிடைத்தது என் நல்லநேரம்" என்றார் பார்வதி.

"அந்தப் பெண் காது கேட்கச் சொல்லி விடாதீர்கள், பாட்டி அப்புறம், பயங்கரமாகச் சம்பள உயர்வு கேட்டுவிடப் போகிறாள்" என்று வேடிக்கை போலக் கூறினான் சத்யசீலன்.

"அப்படியெல்லாம் அவள் கேட்கமாட்டாள்" என்று, சுந்தர், சுமனாவுக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு இருக்கும்போதே, கையில் சில கிண்ணங்கள், சிறு கரண்டிகளோடு, சுமனாவே அங்கே வந்து விட்டாள்.

இரு கிண்ணங்களில் சற்று அதிகமாகப் பொங்கலை வைத்து, ஆண்களின் நடுவே வைத்துவிட்டு, ஒன்றில் மிகவும் குறைவாகவே எடுத்துக்கொண்டு, பார்வதியிடம் சென்றாள்.

"உனக்கு?"

"நான் நளினியோடு சாப்பிடுகிறேன், அம்மா" என்றவளிடம், "இல்லையில்லை, யாரோ ஒரு சினேகிதி வந்து கூப்பிட்டாள் என்று நளினி, அவளோடு 'லைப்ரரி'க்குப் போயிருக்கிறாள். நாலைந்து புத்தகங்கள் மாற்ற வேண்டுமாம் சுந்து, கூட, ஏதோ இரண்டு சொல்லி அனுப்பியிருக்கிறான். அவள் வர நேரமாகும். அதனால், நீயும் இப்போதே சாப்பிட்டு விடு. உனக்கும் கிண்ணத்தில் எடுத்துக்கொண்டு, நீயும் சுந்தரும் வேறு எங்காவது, போய்ச் சாப்பிடுங்கள். நாலு மாதங்களுக்கும் அதிகமாக, இந்த அருமருந்தன்ன பேரனை, நான் கண்ணால் கூடக் காணவில்லை. அவனோடு, நான் கொஞ்சம் தனியாகப் பேசவேண்டும். ஏன் சீலா, காலையில் சுமனா, எனக்கும் தந்து, தானும் உண்டதைப் பார்த்தாயல்லவா? உன்னாலும், அது முடியும்தானே?" என்று பார்வதி, கிண்டலாக வினவினார்.



இவர்கள் இருவரையும் பாட்டி, தனியாக அனுப்புகிறாரே, என்று எண்ணியபோதும், "அவளைவிடப் பிரமாதமாய்!" என்றான் சீலன். "இன்றைக்கு நான் அள்ளித்தருவதைப் பார்த்தபிறகுதான், சுமனாவின் வேலை, எவ்வளவு மட்டம் என்று உங்களுக்குப் புரியப்போகிறது."

"உன்னைப்பற்றிப் பாட்டியிடம் வத்தி வைக்கப் போகிறேன்" என்று எச்சரிக்கிறானாக்கும்!

செய்யேன் என்பது போன்ற பார்வை ஒன்றை அவன்மீது வீசி விட்டு, சுமனா, தனக்கு ஒரு கிண்ணத்தில் பொங்கலை எடுக்க, "அடுத்து, என் பேரன், நாளைக் காலையில் சூரியனை, மேற்கே உதிக்கச் செய்யப்போவதாகச் சொல்லப் போகிறான்" என்று பார்வதி கேலி பேசவும், எல்லாருமே சிரித்து விட்டனர். நகைமுகத்துடன் சுமனா, சுந்தரோடு அறையிலிருந்து வெளியே செல்ல, பாட்டியும், பேரனும் தனித்துப் பேசத் தொடங்கினர்.

சுமனாவிடம் குறிப்பாய் மிரட்டியது போலப் பாட்டியிடம், சுமனாவைப் பற்றிக் கோள் மூட்டும் எண்ணம், சீலனுக்கு லேசாக இருக்கத்தான் செய்தது. ஆனால், அதற்குத் தேவையான தனிமை கிடைத்தபோது, அவளைப் பற்றிக் குறைகூற ஏனோ அவனுக்கு மனம் வரவில்லை.

பார்வதியும் தன் பிள்ளை, மருமகள், தொழில் என்று குடும்ப விஷயம் பேசவே, அதை அப்படியே விட்டுவிட்டான்.

ஆனால், சற்றுநேரம் பேசுமுன்பாக, அவனுக்கு, சுந்தரிடம், சுமனா என்ன சொல்லிக் கொண்டிருக்கிறாளோ என்று மனம் அலைபாயத் தொடங்கிவிட்டது.

குடும்பத்தில், சத்யசீலன்தான், பையன்களுக்குள் பெரியவன். பிறகு, சுந்தர். அப்புறமாய், ஒன்றுவிட்ட சித்தப்பா, மாமா பிள்ளைகள் என்று சிலர் உண்டு.

நல்ல உயரம், படிப்பு விளையாட்டுகளில் முதன்மை என்றெல்லாம் இருந்ததால் எல்லாப் பையன்களுக்குமே சீலன்தான், ஹீரோ. அதிலும், சிறுவயதில் நோஞ்சானாக இருந்த சுந்தருக்கு, மற்ற பையன்களிடம் இருந்து, எப்போதுமே தன்னைக் காக்கும் சீலனின் சொல்தான் வேதம். தாய் பேச்சுக்கூட இரண்டாம்பட்சம்தான்.

ஆனால், காதலின் இளம்வயதுக் கவர்ச்சியின் வலிமையே வேறாயிற்றே.

பொய் என்று சொல்ல வேண்டாம். கோயிலிலிருந்து வரும்போது, சீலன் பேசியதைச் சொன்னாலே போதுமே. அப்புறம், சுந்தர், பழைய மாதிரி, அவனிடம் மதிப்பும், பிரியமுமாய்ப் பழகுவானா?

அந்தப் பெண்ணே கோள் மூட்டாவிட்டாலும் கூட, என்ன, ஏது என்று கேளாமல் விடுவானா?

உள்ளே குடைய, அவன் அங்கே பாட்டியின் அறையில் இதே நினைவாய் அமர்ந்திருக்க, இங்கே சுந்தரும், அதே மாதிரிதான், கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

தன் காதலைப் பற்றிச் சொன்னானா என்று நேரடியாகக் கேட்கத் தைரியம் இல்லாததால், சீலன் அண்ணன் என்ன சொன்னான், எப்படிப் பேசினான், எங்கள் அண்ணன் ஆள் எப்படி, என்றெல்லாம் துருவித் துருவிக் கேட்டுக் கொண்டிருந்தான்.



சீலனோடு பேசியதைக் கொண்டு, இந்தக் கேள்விகளைச் சுமனா ஓரளவு எதிர்பார்த்திருந்ததால, உரிய பதில்களையும், அவள் தயாராகவே வைத்திருந்தாள்.

சீலன் என்ன சொன்னான்? அவர்கள் குடும்பத்தைப் பற்றிச் சொன்னான்.

எப்படிப் பேசினான்? மிகவும் இதமாகப் பேசினான்.

அண்ணன் ஆள் எப்படி? பிரமாதம்! மகா உத்தமன்! அவனைப் போல ஒரு நல்லவன் இனிமேல் பிறந்துதான் வரவேண்டும், சுமனா கண்கள் பளபளக்கப் புகழ்ந்து தள்ளினாள். "எ...என்னைப்பற்றி அண்ணன் ஒன்...அண்ணன் ஒன்...அண்ணன் ஏதாவது சொன்னானா, சுமனா?" என்று கடைசியாக, தைரியத்தைக் கூட்டிக்கொண்டு சுந்தர் கேட்டான்.

உண்மையைச் சொல்லி விடலாம். அன்போடு பழகும் இந்த இரு ஆண்களிடையே மனம் விட்டுப் போகும். அந்த சீலனுக்கு அது சரியான தண்டனைதான். ஆனால், சுமனாவின் மனதுள், உருவாகிக்கொண்டு இருந்த திட்டத்துக்கு, அது உகந்ததல்ல. எனவே, "ஓ, உங்களைப்பற்றி, நிறையச் சொன்னார், சுந்தர். உங்கள் அம்மா, அவர்களுக்கு உங்கள் மேல் உள்ள அளவிட முடியாத பாசம், உங்களுக்கு அம்மா மேல் இருக்கும் அன்பு, அப்பப்பா! எப்படிச் சொன்னார் தெரியுமா?" என்று அளந்து விட்டாள். "ஆமாம் சுந்தர், உங்கள் விருப்பம் எதையும், உங்கள் தாயார், மறுக்கவே மாட்டார்களாமே" என்று வெகுவாக வியந்தாள்.

சுந்தருக்கு உற்சாகத்தில் தலைகால் புரியவில்லை.

"அந்தத் தைரியத்தில்தான், நான் இருக்கிறேன், சுமனா" என்றான் சுந்தர் உருக்கமாக.

"அபயம்" என்று, அம்மன் சாமி போல, சுமனா, போஸ் கொடுக்க சுந்தர் சிரிக்க, அந்த நிலையில் தான், சீலன், அவர்களைப் பார்த்தான்.

இவ்வளவு நேரம் இவர்கள் இருவரும் தனியாக, பஞ்சும் நெருப்பும் அருகருகே இருந்தால் பற்றிக்கொள்ளும் என்பது எழுபது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் பாட்டிக்கு ஏன் தெரியவில்லை?

அல்லது...பாட்டியே இதற்கு ஆதரவுதானா?

பாட்டியின் திட்டம், ஒருவேளை இதுவாகவே இருக்கக் கூடுமோ? சீலனுள் எழுந்த சந்தேகத்தின் எதிரொலியாக, அவனுள் நேர்ந்த பாதிப்பு அவனையே வியக்க வைத்தது. அந்த அளவுக்கு கொதிப்பு, வெறுப்பு, அருவருப்பு எல்லாம் ஒன்றுசேர்ந்து அவனைத் தாக்கின.

இதன் காரண காரியத்தை ஆராய்ந்து கொண்டிருக்க அவனுக்கு அடியோடு விருப்பம் இல்லை. ஆனால், சுந்தர் சுமனா திருமணம் நடக்க விடவே கூடாது என்பதில் மட்டும், அவன் வெகு நிச்சயமாய் இருந்தான்.

முந்திய நாள் இரவு, இன்னமும் அவன் மனதில் வெறுப்பேற்றியது. திருமணத்தின் புனிதத்தையே உடைத்து விட்டவர்களுக்கு அது எதற்கு என்று ஆத்திரம் வந்தது.

கூடவே, ஒரு சந்தேகமும். சுமனா எப்படியோ? சுந்தர், ஒழுக்கத்தோடு வளர்ந்தவன். தப்பு நோக்கத்தோடுதான் சுமனாவின் அறைக்குள் சென்றான் என்று ஒரேயடியாகச் சொல்லிவிட முடியாது.

எதையாவது சொல்ல, ஏன் சீலனின் வரவுபற்றித் தெரிவிப்பதற்காகக் கூடச் சென்றிருக்கலாம்.



அந்தப்பெண்ணின் படுக்கையறைக்குள், சுந்தர் இவ்வளவு சாதாரணமாகச் சென்றுவரும் பழக்கம் கூட.

இதையெல்லாம் நிறுத்தியாக வேண்டும்.

அதற்கு முன், சுந்தருக்கு, தன் மீதுள்ள மரியாதை, மிச்சம், மீதி, ஏதாவது இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

சுமனா அதையும் கெடுத்து வைத்திருந்தால்?

மனதுக்குக் கஷ்டமாகவும், கவலையாகவும் இருந்தது, சீலனுக்கு.

சீலனைப் பார்த்ததுமே "ரொம்பநாள் கழித்து சந்தித்து இருக்கிறீர்கள், உங்கள் பாட்டியைப் போலவே, உங்களுக்கும், உங்கள் சீலன் வந்து உங்கள் சீலண்ணாவோடு தனியே பேச நிறைய இருக்கும். பேசுங்கள்" என்றுரைத்து சுமனா, வெளியே சென்றுவிட்டாள்.

'சுந்தர், முழுக்க முழுக்க என் பிடியில் உன்னால் ஆனதைச் செய்து பார், ஒன்றும் பயனிராது' என்று சொல்லாமல் சொல்லிவிட்டுப் போகிறாளா?

யோசனையோடு, அத்தை மகனைப் பார்த்தான் சீலன்.

'ஈ'யென்று, வாய்நிறைந்த புன்னகையோடு, சுந்தர், தன்னிலும் மூத்தவனைப் பார்த்தான். "என்ன அண்ணா சுமனாவைப் பார்த்தாயல்லவா? பேசினாயல்லவா? ஆள் எப்படி? பிரமாதம் இல்லை? எவ்வளவு அழகு? எவ்வளவு புத்திசாலித்தனம்? இப்போது கூடப் பார், எவ்வளவு இங்கிதமாய் நம்மைப் பேசவிட்டு விட்டுப் போகிறாள், பார் இவள் மருமகளாக வரும் வீட்டில் சண்டை சச்சரவே இராது, இல்லையாண்ணா?" என்று அடுக்கிக் கொண்டே போனவன், பெரியவன், முகத்தில் வியப்புடன், வாய்திறவாது

கேட்டுக்கொண்டு இருக்கவும், சற்று முகம் சிவந்து, "என்ன அண்ணா?" என்று கேட்டான்.

வாயால் முறுவலித்து, "ஒன்றுமில்லைய்டா இரண்டு வார்த்தை சேர்த்துப் பேச, இருபது நிமிடம் ஆக்குகிற நீயா, இப்படிச் சடபுடாக் குச்சி மாதிரிப் படபடவென்று பொரிந்து தள்ளுகிறாய் என்று, எனக்கு ஒரே ஆச்சரியம். அதுதான், உன் தன்மை எனக்கு வந்து, நான் பேசாமடந்தை... 'மடந்தை' அல்ல, பேசாமனிதன் ஆகிவிட்டேன் என்று தோன்றுகிறது" என்று கூறிச் சிரித்தான், சீலன்.

அவனது கண்கள் மட்டும் வெகு கவனத்துடன் இளையவனின் முகமாற்றத்தை கண்காணித்தன.

லேசாக முகம் கன்றிச் சிவக்க, சுந்தர் வெட்கத்தோடு சிரித்தான் "கேலி செய்கிறாயாக்கும்? நீயே சொல்லேன், சுமனாவிடம், இத்தனைச் சிறப்புகளும், இதற்கு மேலும்கூட இருக்கிறதா, இல்லையா?" என்று விடாமல் கேட்டான்.

இதற்குப் பதில்கூற, சீலனுக்குப் பிடிக்கவில்லை, சுந்தர் பேச்சுக்கு ஒத்து ஊதி, அவனது மயக்கத்தை அதிகப்படுத்தவும், அவனுக்குப் பிடிக்கவில்லை, அதேசமயம், மறுப்பது நியாயமாயும் படவில்லை. எனவே "இல்லை என்று சொன்னால் அடித்து விடுவாய்போல இருக்கிறதே அதனால், ஒத்துக்கொள் கிறேன், அப்பா" என்று பயந்தவன் போலச் சொன்னான்.

"போ அண்ணா" என்றான் மற்றவன் "நிஜமாக உனக்கு அவளைப் பிடித்து இருக்கிறதா, இல்லையா?" என்று கேட்டவன், பதில் சொல்லும் பொறுப்பையும், தானே ஏற்று, 'பிடித்திருக்கிறது என்று எனக்குத் தெரியும் அண்ணா" என்று முடித்தான்.

"தெரியுமா? எப்படி? கிளி ஜோசியமா?" என்று கேலி போலவே சீலன் விசாரித்தான்.



"அதற்கெல்லாம், அவசியமே இல்லையே. சுமனாவை உனக்கும் பிடித்திராவிட்டால், அவளிடம் இவ்வளவு பிரியமாகப் பேசிக்கொண்டிருந்திருக்க மாட்டாயே!"

பிரியமாய்! அதுவும் இவ்வளவு பிரியமாய்! எங்கோ உதைக்கிறதே என்றிருந்தது, சீலனுக்கு நேரடியாக விவரம் கேட்க மனமின்றி, " எவ்வளவு பிரியம்? இவ்வளவு இருக்குமா?" என்று கைகளை விரித்து, கேலியாக அளவு கேட்டான்.

சுந்தர் சிரிக்கவும், "நான் நினைப்பது பற்றியே கேட்கிறாயே? அந்த சுமனா என்ன நினைக்கிறாள்? அதை நீ சொல்லவே காணோமே. அவள் என்னைப் பற்றி என்ன சொன்னாள்?" என்று விசாரித்தான்.

"பிரமாதமாய்ச் சொன்னாள், அண்ணா நீ மிகவும் நல்லவானம் மகா உத்தமனாம். உன்னைப்போல் ஒருவர், இனிமேல் பிறந்துதான் வரவேண்டுமாம். எப்படிப் புகழ்ந்தாள், தெரியுமா?"

சீலனுக்குச் சிலகணங்கள், தலைசுற்றி விட்டது. என்ன இது? ஏன் இப்படி? எதற்காக இந்தப்பெண் இப்படியெல்லாம், கதை கட்டியிருக்கிறாள்?

நேரில் புகழ்ந்தாலாவது முகஸ்துதி எனலாம். அப்போது, வேண்டுமென்றே வெறுப்பேற்றி விட்டு, சுந்தரிடம் போய்ப் பயங்கரமாகப் புகழ்ந்து தள்ளியிருக்கிறாளே...என்று யோசிக்கும்போதே, பொறி தட்டினாற்போல அவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

இவனைப் புகழ்ந்து, அவள் நல்லவள் ஆகிவிட்டாள்!

இப்போது, சுந்தரிடம், சுமனாவைப் பற்றி, சீலன், குறை கூறினால், நம்புவானா?

அவள், 'கெட்டவனைத் தேடிய தருமபுத்திர'ராகவும், சீலன் நல்லவனைத் தேடிய துரியோதனன் ஆகவும் தோன்றி விடுவார்கள். சுமனா நல்லவள். அதனால், சீலனிடம், அவள் நல்லதை மட்டும் காண்கிறாள். சீலனின் கெட்டபுத்தி, சுமனாவிடம் கெட்டதைக் காண்கிறது, என்றல்லவா ஆகிவிடும்?

இனி, அவளைப் பற்றி மட்டமாக, ஒரு வார்த்தை பேசமுடியுமா?

பாதகி, கெட்டிக்காரப்பாதகி!

இவளை எப்படி மடக்குவது என்ற சீலன் மனம் குழம்பினான். எப்படியும், இந்தத்தடவை இவளை ஒன்றும் செய்வதற்கில்லை என்று உணர்ந்து, அவனும், இலகுவாகவே பழகியிருந்துவிட்டுக் கிளம்பினான். கவனித்துப் பார்க்கும் போது, சுந்தர், சுமனாவின் தாசனாகியிருப்பது தெரிந்தது. அவள், ஏவியதை எல்லாம், அவன் செய்தான். சுமனா, அந்த வீட்டின் சர்வாதிகாரியாக இருந்தாள். எதற்கும், எல்லோரும் அவளைத்தான் கேட்டார்கள், அவளிடம்தான் வந்து நின்றார்கள். எப்படியோ, எல்லா அதிகாரத்தையும், அவள், தன் கையில் எடுத்துக் கொண்டிருந்தாள்.

பாட்டி, ஏன் இதைக் கவனிக்கவில்லை?

ஒருவேளை, பாட்டியின் உடம்பு, பழையமாதிரி பழைய அளவு திடமாக இல்லையா?

இடையில் வந்த, அந்த மயக்கம், அவரை, அதிகமாகப் பாதித்து விட்டதா?

பாட்டிக்கு உடம்பு சரியில்லாமல் போனதைத் தனக்கு ஏன்



தெரிவிக்கவில்லை என்று சுந்தரிடம் குறைபட்டுப் பேசினான் சீலன்.

அவன் அப்படிப் பேசியதின் காரணமே, சுமனாவைக் குற்றவாளி ஆக்கலாம் என்பதற்காகத்தான். எல்லா முடிவுகளையும்சுயவிருப்பமாக எடுக்கும் அவளேதான், இதற்கும் காரணமாக இருப்பாள் என்று எண்ணினான், அவன்.

ஆனால், பார்வதி அம்மாள்தான் அவனுக்குச் சொல்ல வேண்டாம் என்று சுந்தர் கூறவும், அவனுக்குச் சொத்தென்று ஆகிவிட்டது.

அப்போது, ஏதோ நெசவாளர் வேலைநிறுத்தம் என்று சீலன் இங்கும் அங்குமாய் ஓடிப்பழைய சரக்குகளைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேமித்து ஏற்றுமதி பண்ணிக் கொண்டிருந்தான் இதை வேறு தெரிவித்து அவனைக் கஷ்டப்படுத்த வேண்டாம் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாராம். குணமான பிறகோ, தெரிவிப்பது அவசியமில்லை, என்றதும் முதியவரேதான்.

இதை, சுமனாவின் குற்றமாக எப்படிக் கூறுவது?

பிறகும், சுமனாவுக்கு அதிக இடம் கொடுத்துவிட்டதாகப் பாட்டியிடம், லேசாகச் சொல்லிப் பார்த்தான்.

ஆனால், அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, "உன் அலுவலகத்தை இப்படி நடத்து என்று நான் உன்னிடம் சொல்லியிருக்கிறேனா? வீட்டை, அதிலும் இந்த வீட்டை நடத்துவதில் நீ, மூக்கை நுழைக்காதே" என்று, அவர், சிறு கண்டிப்புடன் கூறவே, அதற்குமேல், அவன், அது விஷயமாய், வாயை மூடிக்கொண்டான்.

பார்வதி அம்மாள், சோபாவில் இலகுவாகச் சாய்ந்திருக்க, சின்ன வயசுக்காரர்கள் மூவரும், மூவரில் நளினி, லேசில்

எதிலும் கலந்து கொள்ள மாட்டாள். ஆனால், ஒரு சின்னப் புன்னகையுடன், அபூர்வமாக ஓரிரு வார்த்தைகள் பேசிக்கொண்டு அங்கேயே இருப்பாள். அதேமாதிரி எப்போதாவது விளையாடுவதும் உண்டு. கேரம், சீட்டு, ஸ்கிராபிள் என்று விளையாடுவதும், பாட்டு, சினிமா என்று பேசிக்கொண்டு இருப்பதும் பெரியவர் மனதுக்கு, ரம்மியமாக இருப்பதை, சீலனால் கண்டுகொள்ள முடிந்தது.

அதிலும், விளையாட்டு, பேச்சு, அனைத்துயுமே சுமனாவே தொடங்கி வைப்பதையும் கண்டான்.

சீட்டு விளையாடும்போது பார்வதி அருகே அமர்ந்து, "இந்த சீட்டுப் போடலாமா, அதைப் போடவா?" என்று, ஐடியா கேட்டால் ஸ்கிராபிள் விளையாடும்போதும் அப்படியே. பார்வதி அந்தக்காலப் பட்டதாரி. நல்லநல்ல வார்த்தைகள், சொல்லிக் கொடுப்பார்.

எல்லோருக்குமே, பொழுது குதூகலமாகக் கழிந்தது.

இந்த நிலைதான், சுந்தரைக் கவர்ந்து, பார்வதியையும் பெரும் போக்காய், இருக்க வைத்ததோ?

விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோதும், சுமனா, அவளது வேலைகளையும், அலட்சியப்படுத்தவில்லை. சமையல்காரி, தோட்டக்காரன், கடைகண்ணிக்குப் போய்வருகிறவன், யார் கூப்பிட்டாலும் எழுந்து போய், என்னவென்று கேட்டு, ஆவன செய்தாள். அப்படி, அவள் எழுந்து செல்லும்போது நளினியிடம், தன் சீட்டுகளையோ, கேரம் 'ஸ்டிக்கரையோ கொடுத்துவிட்டுப் போவாள். வேலைமுடிந்து திரும்பி வந்தபிறகு, நளினியின் அருகிலேயே இருந்து, அவளுக்கு யோசனைகள் சொல்லுவாள்.



மொத்தத்தில் பார்வதிக்கு மிகவும் பிடித்த நேரம் இது என்பது நன்றாகவே புரிந்தது.

பழக்கம் விட்டுப் போயிற்று என்ற சாக்கோடு சீலன் தன் பாட்டி பக்கத்திலேயே சும்மா உட்கார்ந்து, மற்றவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தான். கவனித்த அளவில், அவனால், சுமனாவிடம் ஒரு குற்றமும் காண முடியவில்லைதான். ஆனால், கோயிலிலில் இருந்து, திரும்பி வந்தபோது அவள் நடத்திய பேரம்?

அப்படிப் பேரம் பேசக்கூடிய நிலையை அடைவதற்காக அவள் அமைத்த படிகளே, அவளது குற்றம் காண முடியாத இந்த நடவடிக்கைகள் என்று சொல்லலாம் இல்லையா?

திட்டமிட்டுத் தன்னை இன்றியமையாதவளாக ஆக்கிக் கொண்டிருக்கலாம்!

இவளிடம் எதையும் நம்ப முடியாது.

நல்லவேளையாக, இங்கே வீட்டில் நகைகள், பெரும் தொகையாகப் பணமோ கிடையாது. அதனால், உடனடி அபாயம் ஏதும் இல்லை...சே! என்ன மாதிரி கண்ணையும், முகத்தையும் வைத்துக் கொண்டு, என்ன மாதிரியெல்லாம் நினைக்க வைக்கிறாள்!

வருத்தம், கோபம் இரண்டுமே சீலனுக்கு ஏற்பட்டன.

இரவே, காரில் புறப்படுவதாக இருந்தவன், 'இராப்பயணம் வேண்டாமடா" என்ற பாட்டியின் வேண்டுகோளை ஏற்று விமானத்தில் சென்னை திரும்புவதாகப் பாட்டியிடம் ஒத்துக்கொண்டான். "காருக்கு நான் வேறு ஏற்பாடு செய்கிறேன்" என்றான்.

கிளம்புமுன், சுமனாவைத் தனியே சந்தித்து, "அடுத்த வாரமும் வருவேன்" என்றான் மிரட்டுவது போல.

பறித்து வந்த பூக்களை பூச்சாடியில் அடுக்கிக்கொண்டு இருந்தவள், வேலையிலேயே கவனமாக, "உங்கள் பாட்டி வீட்டுக்கு நீங்கள் வருவது நியாயம்தான். ஆனால், இதை என்னிடம் ஏன் சொல்லுகிறீர்கள்? இதை விட உங்கள் பாட்டியிடம் சொன்னால், பாவம், அவர்களாவது சந்தோஷப்படுவார்கள்" என்றாள் அவள், விட்டேற்றியாக.

"அப்படியானால், நான் வருவதில், உனக்குச் சந்தோஷம் இல்லை, வருத்தம்தான்?"

"சந்தோஷமோ, துக்கமோ உண்டாகிற அளவு, உங்களோடு எனக்குப் பழக்கம் இல்லையே" "பழக்கம் இல்லாதவனிடமா, காரில் அந்தப்போடு போட்டாய்?" என்று சீலன் கிண்டலாகக் கேட்கவும் "சுவரில் அடித்த பந்து, அதேவேகத்தில் திரும்பி வரத்தானே செய்யும்?" என்று பதில் கொடுத்தாள், அவள்.

உண்மைதான். அவனும் கடுமையாகத்தான் பேசினான். ஆனால், அவன் சொன்னதெல்லாமும்கூட உண்மை ஆயிற்றே.

"எப்போதும் உண்மை சுடத்தான் செய்யும்" என்று தோளைக் குலுக்கினான் சீலன்.

"யாரை?"

எப்போதுமே, சீலனுக்குத் தன்னைப்பற்றி ஒரு பெருமை உண்டு, சுருங்கப்பேசி, மற்றவர்களை விரிவாக விளக்கம் சொல்ல வைக்கிறவன் என்று. அவனது ஒற்றை வார்த்தை எதிராளியிடமிருந்து, முழுக்கதையையுமே, கொண்டு வந்துவிடுவான் என்று மற்றவர்கள் கூடச் சொல்லுவார்கள்.



அப்படிப்பட்டவன், இப்போது, ஒரு சிறு பெண்ணின் முன், நின்று விளக்கம் சொல்லிக்கொண்டு இருக்கிறான்.

தன் பாணியையே கையாள நினைத்து, "பொய் சொல்லுகிறவர்களை" என்றான் சுருக்கமாக.

"அப்படி ஒன்றும் தெரியவில்லையே" என்றாள், அவள், அயராமல்!

அவள், முன்னிலையில், இரண்டாம் முறையாக பற்களை நரநரவென்று கடிக்கும் உந்துதலைச் சிரமத்துடன் அடக்கியவாறு, "அதற்கு மனசாட்சி என்று ஒன்று இருக்கவேண்டும்" என்றான் அவன், வெறுப்பும் ஏளனமுமாக.

"மனசாட்சியா? அதைக் கழுத்தை நெரித்துக் கொன்று விட்டுத் தானே, இந்தக்காலத்தில், வீட்டை விட்டு, வெளியே அடி எடுத்து வைப்பதே" என்றாள் அவள், அவனுக்குச் சற்றும் குறைவில்லாத குரலில், கொஞ்சம் கசப்பையும் கூடச் சேர்த்து.

சீலன் சற்றுத் திகைத்தான். இவளைப் பார்க்குமுன்பாகவே, இவளை விரட்டிவிடும் எண்ணத்தோடு அவன் சென்னையிலிருந்து கிளம்பி வந்தது, ஒரு மனசாட்சியற்ற செயல்தான். ஆனால்,பணத்துக்காக ஒருவனை, வலைவீசிப் பிடிப்பது கூட, மனசாட்சியற்ற செயல்தானே? அத்தோடு, அவன் வந்த அன்று இரவு? ஒழுக்கத்தோடு, வளர்ந்திருந்தால், அதுவும் அப்படித்தானே?

தகப்பனாரின் விபத்துக்குப் பின், இவள் கன பாடு பட்டிருக்கிறாள் என்பது, அவளது பேச்சிலிருந்து, ஏற்கனவே, சீலன் ஊகித்ததுதான். ஆனால், அவன் ஊகித்ததை விடவும், அதிகமாகக் கஷ்டப்பட்டிருப்பாளோ?

அதனால், அவளது மனசாட்சியைக் கொன்றுவிட்டுத்தான் இந்த அளவுக்கு இறங்கி, சுந்தரைப் பிடித்தாளோ?

பாவம் என்று எண்ணிமிடும்போதே, சீலன் திகைத்தான்.

இதென்ன, அடிக்கடி, சுமனாவின் தப்புகளுக்குச் சப்பைக்கட்டு, கட்டுகிற மாதிரியே, அவன் மனம் யோசிக்கிறது? 'பாவம்' என்று பரிகிறது?

ஊகூம். இரக்கத்தைத் தூண்டும் வண்ணம் இவள், என்னவோ செய்கிறாள்! பாட்டியை, சுந்தரை.

இவள் பிடித்தது இப்படித்தான் போல. ஆனால், இந்த சீலனை அப்படி யாரும், எளிதாக ஏமாற்ற முடியாது.

மனதைப் பாறையாக்கிக் கொண்டு பார்த்தபோது, சுமனா, சலனமே இல்லாமல், தன் வேலையே கவனமாகப் பூக்களை அடுக்கி முடித்திருந்தாள்.

இவளுக்குப் பயமே இல்லையே! இவ்வளவு சொல்கிறான், திருமணத்தை நிறுத்தி விடுவானோ, என்கிற அச்சம், கொஞ்சம் கூடவா இல்லாமல் இராது?

சீலன் நிற்பதை லட்சியமே செய்யாமல், சுமனா பூஜாடிகளுடன் கிளம்பவும், சீலனின் மனம் மிகவும் கடினப்பட்டுப் போயிற்று. "நீ இன்னும் ஒரு முடிவும் சொல்லவில்லையே?" என்று கேட்டான்.

"என்ன முடிவு?"

கூர்மையாக நோக்கி, "நீ, எனக்கு வெறுப்பேற்றவென்றே பேசுகிறாய் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றான் அவன்.

"அதை நான் செய்ய வேண்டும் என்ற அவசியமே இல்லை, மிஸ்டர் சத்யசீலன். நீங்கள் வரும்போதே, நெஞ்சு நிறைய வெறுப்பை மூட்டை கட்டி எடுத்துக்கொண்டுதானே வந்திருக்கிறீர்கள்?" என்று அவள் உடனடியாகத் திருப்பிக் கொடுக்கவும், சில வினாடி நேரம் அங்கே நிசப்தம் நிலவியது.



அப்படி ஒன்றும் இல்லை. ஆனால், அத்தைக்காக...என்று, விளக்க விரும்பியது, சீலனின் மனது. ஆனால், அவன் வந்த காரியம் அதுவல்ல. மேலும், இவளும் ஒன்றும் நேர்மையின் திருவுரு அல்ல. அத்தோடு, இவளுக்கு விளக்கம் கொடுக்க வேண்டிய அவசியமும் அவனுக்கு இல்லை.

எனவே, சுமனாவின் வார்த்தைகளை மறுக்காமல், "உன் முடிவு என்ன என்பதைச் சொன்னாயானால், நன்றாக இருக்கும்" என்றான், உணர்ச்சியற்ற குரலில்.

லேசாகத் தோளைக் குலுக்கி, "முன்பே சொன்னது போல, முடிவு எடுக்குமுன் நான், நிறைய விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதனால் மெல்லத்தான் சொல்ல முடியும் மிஸ்டர் சத்யசீலன்" என்று முடித்தாள், அவள்.

"பெரிய, 'மிஸ்டர் சத்யசீலன்' இந்த மரியாதையில் ஒன்றும் குறைச்சல் இல்லை."

"வேறு எந்த மரியாதையில் குறைவைத்தேன், மிஸ்டர்..."

"போதும் இந்த 'மிஸ்டர்' எல்லாம் வேண்டாம். மற்றவர்களைப் போலவே, நீயும் கூப்பிடு" என்றான் சீலன்.

"மற்றவர்கள் மாதிரி என்றால்...ம்ம்...உங்கள் பாட்டி போல, 'சீலா, வாடா, போடா' என்றா? அல்லது, சுந்தர் மாதிரி, "சீலாண்ணா, வாயேன்" இந்த மாதிரியா?"

"உனக்குக் காதுகள் இருக்கின்றனவா, சுமனா? அதாவது நிஜமான காதுகள்."

"திவ்யமாய். ஏன் கேட்கிறீர்கள்?" என்றாள் அவள் யோசனையோடு.

"சந்தேகம் தெளியத்தான். நீ, பேசுகிற தினுசுக்கு இவ்வளவு நாளில், குறைந்தபட்சமாய் ஒரு நாலைந்து பேராவது உன்

காதுகளைத் திருகி எடுத்திருக்க வேண்டுமே என்று நினைத்தேன்" என்றவனுக்குத் தன்னை மீறிச் சிரிப்பு வந்தது.

"நீங்கள் எப்பேர்ப்பட்ட பழைய கற்கால மனிதர் என்பது, இப்போதுதானே, புரிகிறது!" என்றாள், அவளும், புன்னகை-யோடு.

இப்படிச் சிரிப்பதைவிட்டு, சண்டை போட்டுக் கொள்வது இருவருக்குமே உள்ளூர வருத்தம்தான். ஆனால், இருவரும் இருக்கும் நிலையில், சுமுக உறவுக்கு வழியே இல்லை என்பதும், இருவருக்குமே புரிந்திருந்ததால், இருவருமே தங்கள் வருத்தத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல், பழைய மாதிரியே பழகினர்.

"யாரோ மாதிரி 'மிஸ்டர்' போட்டு, முழுப்பெயர் சொல்லி அழைக்கவும் வேண்டாம். அதிகப்படிச் சொந்தம் காட்டவும் வேண்டாம். என்னை ஓரளவு அறிந்தவர்கள், என்னைச் 'சீலன்' என்று அழைத்து மரியாதைப் பன்மையில் பேசுவார்கள். நீயும், அதையே செய்தால், நாகரீகமாக இருக்கும்" என்றான், அவன்.

"அதாவது நான் நாகரீகம் உள்ளவள்தான் என்று காட்டிக் கொள்வதற்காகவேனும் உங்களைச் சீலன் என்று கூப்பிட்டாக வேண்டும். அப்படித்தானே, மிஸ்ட...சாரிசாரி, சீ..சீலன்?" என்று கிண்டலாகக் கேட்டாள், சுமனா.

தோளைக் குலுக்கினான் சீலன். "நீ ஓர் அல்ட்ரா நாகரீகப் பெண் என்பது, எனக்குத் தெரியும். எனக்கு எரிச்சல் மூட்டவே, நீ என்னை, அப்படிப் பழைய பாணியில் அழைத்தாய் என்பதும் கூட, எனக்கு நன்றாகவே தெரியும். எனவே, இந்த அழைப்பு நமக்குள் பெரிய பிரச்சினை அல்ல. ஆகவே, இதை நூல்பிரித்து, இழை பிரித்துப் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டாம்" என்றான்.



சுமனா பேசாமல் பார்த்துக்கொண்டு நிற்க, அவனே தொடர்ந்தான்.

"என் கார், இங்கேயே நிற்கட்டும். அடுத்த வாரம், நான் வரும் போது, பயன்படுத்த வசதியாக இருக்கும். இந்த சனி, ஞாயிறில், நீ எனக்குப் பதில் சொல்லிவிட வேண்டும், சுமனா. அத்தையிடம், உனக்காகப் பேசி, அதிகபட்சமாக, ஒரு பத்து லட்சம் வாங்கித்தர, என்னால் முடியும். உன்னளவில் பார்த்தால், அது மிகவும் பெரிய தொகைதான். உனக்குத் தேவைகள் இருக்கின்றன என்றாலும், இது தாராளமாய்ப் போதும். நான் உனக்காகவும் யோசித்துத்தான் சொல்லுகிறேன். ரொம்பவும், அதிகத்துக்கு ஆசைப்படாமல், இந்தப் பணத்தை வாங்கிக் கொள்வதுதான் உனக்கு நல்லது. ஏனெனில், பத்து லட்சத்துக்கு மேல், ஒரு பைசா கொடுக்கக்கூட, அத்தை தயாராக இல்லை"

கையிலிருந்த பூக்களைப் பார்த்தவண்ணம், சுமனா, ஒன்றும் பேசாமலே நிற்கவும், சீலனின் முகத்தில் எரிச்சல் படர்ந்தது. ஒரு பொறுமையிழந்த மூச்சுடன், "நான் சொல்வது புரி" என்று தொடங்கியவன், கார்ப்பேச்சு நினைவுவர, அதை விடுத்து "நல்லதைச் சொன்னேன். ஏற்று, பணத்தை வாங்கிக் கொண்டு நன்றாக இருப்பதோ, ஒன்றுமில்லாமல், நடுத்தெருவில் நிற்பதோ, எதுவானாலும், உன் விருப்பம்" என்று பட படத்துவிட்டு, அறையை விட்டு வெளியேறலானான்.

சீலன் அறைவாயிலை அடையுமுன், "கொஞ்சம் நில்லுங்கள்" என்று சுமனாவின் குரல் கேட்டது.

அவன் திரும்பிப்பார்க்கவும், "உங்களுக்கு என்ன பிடிக்கும்?" என்று கேட்டாள் அவள்.

"ஏன்? சொன்னால் கிடைக்குமா?"

"அடுத்த வாரம் நீங்கள் வரும்போது பாருங்கள் உங்களுக்குப் பிடித்த உணவு, சாப்பாட்டு மேஜையில் கட்டாயம் இருக்கும்" என்றாள் சுமனா சாதுவாய்.

"பிடித்தது என்றால், அது சாப்பாடாக மட்டும்தான் இருக்க வேண்டும் என்பது இல்லையே. இப்போது, நீ இந்த வீட்டை விட்டுப் போனால் அதுகூட எனக்கு மிகவும் பிடித்தம்தான். செய்யேன்" என்றான் அவன்.

கலகலவென்று சிரித்து, "என்னை என்ன பழைய காலத்து ராஜா என்று நினைத்தீர்களா? யோசனை இல்லாமல் என்ன வேண்டுமானாலும் தருவதாய் அறிவித்துவிட்டு, 'நாட்டையே கொடு' என்று வந்து கேட்கிற சாதனையாளனுக்கு, சொன்ன சொல் தவறாமல், எல்லாம் கொடுத்துவிட்டுப் பராரியாய் அலைகிற அந்தக்காலத்து, அரசனைச் சொன்னேன். சாரி, சீலன், நான் அப்படிப்பட்டவள் அல்ல" என்றாள் சுமனா.

"அதுதான் நன்றாகத் தெரிகிறதே. சொன்ன சொல் தவறாத குணம் எல்லாம் அந்த அரசனுக்கு இருக்கிறபோது, நீ எப்படி, அந்த அரசனைப் போல ஆகமுடியும்?" என்றான் அவன் குத்தலாக.

மீண்டும் நகைத்து, "பிரமாதம். நீங்கள் நன்றாகத் தொழில் நடத்துகிறீர்கள் என்று, உங்கள் பாட்டி சொல்லுவார்கள். எதைக் கொண்டாவது, உங்கள் 'பாயின்டை' வலியுறுத்துகிறீர்களே, மெய்யாகவே, நீங்கள் பிரமாதம்தான்" என்று வெகுவாகப் பாராட்டினாள், சுமனா. "நான் எப்போது சொன்ன சொல் தவறினேன், என்று நான் உங்களைக் கேட்கலாம், ஆனால், கேட்கமாட்டேன். ஏனென்றால், இந்த மாதிரிச் சின்ன விஷயங்களை எல்லாம் பெரிதாக எடுத்துப் பேசக்கூடாதில்லையா" என்று தொடர்ந்து விளம்பினாள், அவள்.



ஆத்திரமும் வெறுப்புமாக, அவளை நோக்கிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டு, சீலன், அங்கிருந்து வெளியேறினான்.

பிசாசு, ராட்சசி, பொல்லாத பேய், குரங்கு எல்லாவற்றையும் விடப் பெரிய, மிகப்பெரிய வாயாடி

இருந்திருந்து, அவளிடமா, சுந்தர், மனதைப் பறிகொடுக்க வேண்டும்?

உலகத்தில், வேறு பெண்களே அவனுக்குக் கிடைக்கவில்லையா?

## 5

மதுரையிலிருந்து கிளம்பியதிலிருந்து, சென்னையில் வீடு வந்து சேரும்வரை, சீலனின் மனம் கொதித்துக்கொண்டே இருந்தது.

வழக்கம்போல, அன்றாட வேலைகளில் ஈடுபடத் தொடங்கிய பிறகுதான், அவன் மனம் கொஞ்சம் அமைதியடைந்தது.

சொல்லப்போனால், அவன், மதுரை செல்லும் வழியில், கொள்முதல் செய்த சரக்குகள், பெரும்பாலும் வந்துவிடவும், அவனுக்கு, உற்சாகம் கூடப் பிறந்துவிட்டது எனலாம்.

கிடங்கில் சரக்கைச் சரிபார்த்து இறக்கவும், தரம் சோதனை செய்து, பிரித்து அடுக்க ஏற்பாடு செய்வதுமாக, முழுமூச்சுடன், அலுவலில் இறங்கியதும் மற்றதெல்லாம் மறந்தே போயிற்று எனலாம்.

ஆனால், அவன் அப்படி மறப்பதற்குக் காமேசுவரி விட்டு விடுவாளா? அண்ணன் மகன் எப்போது வருவான் என்று காத்துக் கிடப்பவள் ஆயிற்றே.

சீலனின் வரும் நேரம் பற்றி, அவனது அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொண்டவள், வந்ததும், அவனாகத் தொடர்புகொள்வான் என்று கொஞ்சநேரம் காத்திருந்து பார்த்தாள்.

ஏனெனில், வந்ததும் வராததுமாகக் கூப்பிட்டால், "என்ன அத்தை, மனிதனுக்கு மூச்சுவிடக் கூட அவகாசம் கொடுக்க மாட்டீர்களா?" என்று எரிச்சல்படக்கூடியவன், அவன். இன்றைய நிலையில், சீலனின் எரிச்சலைச் சம்பாதித்துக் கொள்ள காமேசுவரிக்குக் கொஞ்சம்கூட விருப்பம் இல்லை.

எனவே, சற்றுநேரம் பொறுமையை இழுத்துப் பிடித்துக்கொண்டு காத்திருந்தவளுக்கு அதிக நேரம் அப்படி இருக்க முடியவில்லை. கடைசியாக, அடக்கமாட்டாமல் அவள் டெலிஃபோன் செய்தபோது, சீலன் வெளியே சென்று விட்டிருந்தான்.

விடாமல், அவனைத் தேடிப்பிடித்தபோது, மும்முரமான வேலை நடுவில் இருப்பதாகவும், வேலை முடிந்ததும் அவன், வீட்டுக்கே வந்து பேசுவதாகவும், இப்போதைக்குப் பெரிதாகக் கவலைப்பட ஒன்றும் இல்லை என்பதால் தைரியமாக இருக்குமாறும் வேகமாகச் சொல்லி விட்டு, அவள் ஏதும் கூறுமுன் ரிசீவரை வைத்துவிட்டான்.

அவ்வளவோடு, அப்போதைக்குக் காமேசுவரி, திருப்தி அடைய வேண்டியதாயிற்று.

மாலைமயங்கி, இருள் படர்ந்து, அதன்பிறகும், தன் வீடு சென்று, குளித்துச் சாப்பிட்டுவிட்டு, நிதானமாக வந்துசேர்ந்த மருமகனிடம், காமேசுவரிக்குக் கோபம்தான். அதையும் காட்டிக் கொள்ளாமல் சீலனை வரவேற்று, உபசாரங்கள் செய்தாள்!



குளிர்ச்சியாக, பாதாம்கீரைக் கண்ணாடி டம்ளரில் கொணர்ந்து கொடுத்துவிட்டு, எதிர் சோஃபாவில் அமர்ந்து கொண்டு, ஆவலாகக் கேட்டாள், "என்னடா, பார்த்தாயா? அந்தப் பேய் பார்ப்பதற்கு எப்படி இருக்கிறாள்?" என்று விசாரித்தாள்.

"பிரமாதமாய் இருக்கிறாள்" என்றான், மருமகன்.

அயர்ந்துபோய், "என்னது?" என்றாள், காமேசுவரி, ஈனசுரத்தில்.

கையிலிருந்த பானத்தை, மெல்ல ஒரு மடக்கு அருந்தி விட்டு யோசனையோடு, "ஆமாம், அத்தை. பார்வைக்குப் பளிச்சென்று, ஒரு ராஜகுமாரி மாதிரி இருக்கிறாள். நடை, உடை, பாவனை எல்லாம், பேச்சுக்கூட அப்படித்தான். என்ன செய்தாலும் திருந்தச் செய்கிறாள். அவளிடம், சுந்தர் மயங்கியதில், ஆச்சரியப்பட ஒன்றுமே இல்லை. மயங்காமல் இருந்திருந்தால்தான், அதிசயப்பட வேண்டும்" என்றான், சீலன்.

காமேசுவரியின் விழிகள் தெரித்து விழுவன போல விரிந்தன. "ஏ...ஏ..ஏய்...என்னடா? உ..உன்னை, நான் எதற்காக அனுப்பினேன், நீயானால் அவர்கள் இருவருக்கும் திருமணத்தையே முடித்து வைத்து விடுவாய் போல இருக்கிறதே" என்று பதறினாள். "என்னடா சீலா, அவள், அப்பேர்ப்பட்ட ரம்பையாக இருந்தால் அவளிடமிருந்து என் பிள்ளையை எப்படியடா மீட்பது?" என்று அழுகுரலில் கேட்டுக் கண்ணைக் கசக்கினாள்.

"அட, என்ன அத்தை, இதற்குள் அழுதுகொண்டு? பார்ப்பதற்கு, அவள் எப்படி இருக்கிறாள் என்று நீங்கள் கேட்டதற்குப் பதில் சொன்னேன். இன்னும் அவள் எப்படிப் பட்டவள் என்று நான் உங்களிடம் சொல்லி முடிக்கவில்லையே.

அதற்குள் என்ன ராகம்? அழுகைக் கெல்லாம் அவசியமே கிடையாது, அத்தை. ஏனென்றால் அந்த சுமனாவிடம், எல்லாவிதச் சிறப்புகளும் இருந்தாலும், இதயம் இருக்கும் இடத்தில் மட்டும் அவளுக்குப் 'பணம் என்னும் இயந்திரம்' தான் இருக்கிறது. எனவே கூடக் கொஞ்சம் காரட்டை நீட்டினால் அந்தக் குதிரை, கட்டைத் தறித்துக் கொண்டு ஓடிவிடும்'' என்றான் அவளுடைய மருமகன் இறுகிய குரலில்.

"அப்பாடா'' என்று பெரிய மூச்சுவிட்டு, சோஃபாவில் சாய்ந்து அமர்ந்த காமேசுவரி, 'விலுக்' கென்று, உடனே நிமிர்ந்தாள். "கூடக் கொஞ்சம் காரட்'டா? என்னடா, சீலா, சுளையாகப் பத்து லட்சமடா! அதை விடவா, அதிகம் கொடுக்க வேண்டும் என்கிறாய்? அநியாயம்டா. ஊகூம், நான் மாட்டேன்பா. பத்து லட்சத்துக்குமேல், ஒரு பைசா கூட நான் கொடுக்கமாட்டேன். இதுவே, ரொம்பவும் அதிகம் என்று, மாமா, திட்டுகிறார். இன்னும் கூடுதலாக, என்றால், என்னை உண்டு இல்லை என்று ஆக்கிவிடுவார். அதனால், பத்துக்கு மேல் ஒரு காசு கூடக் கிடைக்காதென்று, அவளிடம், கண்டிப்பாகச் சொல்லிவிடு'' என்று கறாராகப் பேசினாள், காமேசுவரி.

காலி டம்ளரை, எதிரிலிருந்த 'டீபாய்' மீது வைத்துவிட்டு, கைக்குட்டையை எடுத்து வாயைத் துடைத்துக் கொண்டான். சீலன், கைக்குட்டையை, மீண்டும் பாக்கெட்டில் வைத்தபடி, "அத்தை, அந்த சுமனாவுக்கு இருதயம் இருக்க வேண்டிய இடத்தில் பணம் என்னும் இயந்திரம் இருக்கிறது என்று சொன்னேனே, அது அந்த இயந்திரம் இப்போது என்ன செய்துகொண்டு இருக்கிறது தெரியுமா? உங்கள் சொத்தை எல்லாம் கணக்கு எடுத்துக் கொண்டு இருக்கிறது. சுந்தரை மணந்தால், தனக்கு என்ன வரும் என்று அதையும் அவள் கணக்குப் போடுவாள். அப்புறம், இந்தப்பெண்ணை விரட்டு



வதற்கு அழுவதை விட, அவளையே மருமகளாக்கிக் கொள்வதுமேல், என்கிற அளவுக்கு, விஷயம் போய் விடும். பரவாயில்லை என்றால், சொல்லுங்கள். இத்தோடு நான் ஒதுங்கிக் கொள்கிறேன்'' என்று எழுந்தான்.

பதறிப்போய்க் கூடவே எழுந்து, "அட, சீ என்னப்பா நீ! பத்து லட்சத்துக்கே உன் மாமா திட்டுகிறாரே என்று சொல்லவந்தால், அதற்குள் கோபித்துக் கொள்ளுகிறாயே. உட்கார், இன்னும்...இதற்கு மேலும் பணம் வேண்டும் என்றால், சுந்தர் அப்பா என்ன சொல்லப் போகிறாரோ?'' என்று பெரிதாகக் கவலைப்பட்டாள், காமேசுவரி.

கிண்டலாக முறுவலித்து, "யாரிடம் அத்தை, இந்தக் கதை விடுகிறீர்கள்? நீங்கள் ஒன்று சொல்லி, மாமா, அதைக் கேள்வி கேட்டதாகச் சரித்திரமே கிடையாதே! அவர் கோ..பித்துக் கொள்ளப் போகிறார் என்று நீங்கள் அஞ்சி நடுங்குகிறீர் களாக்கும்? விவகாரத்தை முடிந்த அளவு, குறைந்த செலவில் முடிக்கப் பார்க்கிறீர்கள் என்று நிஜத்தைச் சொல்லுங்களேன்'' என்றான், சீலன். அசடு வழியத் தலைகுனிந்தாள், அத்தைக்காரி. இந்தப்பையனோடு, இதுதான் தொல்லை. சொன்னதை ஆமாம் என்று கேட்டுக்கொண்டு சும்மா இருக்க மாட்டான். பொறிதட்டினாற் போல, சூட்சுமத்தைக் கண்டுபிடித்தும் விடுவான். பொட்டில் அடித்தாற்போலக் கேட்டும் விடுவான். எப்போதும், இவனிடம், வாங்கிக் கட்டுவதே அவளுக்கு வேலையாகிப் போயிற்று. மற்றவர்களிடம் செய்வது போல இவனிடம், கணவர் பெயரைப் பயன்படுத்தியிருக்கக்கூடாது.

மெல்ல விழி உயர்த்தி... "அதில்லை, சீலா..." என்று தொடங்கியவள், சட்டெனத் திகைத்தாள். அவளைப் பொறுத்தவரை, அண்ணன் மகனின் கணிப்பு, சரியே. அப்படியானால், அந்தப்பெண் விஷயம்? அதுவும் சரியாக

இருந்து அந்தப் பிசாசை, மருமகளாக ஏற்கும்படி ஆகிவிட்டால்?

பரபரப்புடன், சீலனை நோக்கி, "சீலா, நீ என்ன செய்வாயோ, எது செய்வாயோ, எனக்குத் தெரியாது. அந்த ராட்சசிக்கும் சுந்தருக்கும், ஒருபோதும், திருமணம் நடக்கவே கூடாது. அதுமட்டும் நடந்தால் என்னால் தாங்கவே முடியாது" என்று அறிவித்தாள்.

அப்படி நடந்தால், தன்னாலும், அதைத் தாங்க முடியாது என்பதை, ஓர் உறுதியுடன் உணர்ந்த சத்யசீலன், "நடக்காது, அத்தை. அப்படி நடக்க நிச்சயமாக, நான் விடவே மாட்டேன். இது சத்தியம்!" என்று ஆவேசத்துடன், சூளுரைத்தான்.

அண்ணன் மகனின் ஆவேசம் காமேசுவரிக்கு ஆச்சரியத்தைத் தந்தபோதும் பெருத்த நிம்மதியையும் அளித்தது. அமைதியுற்றவளாய், "எப்படி, எப்படிம்மா இதைச் சாதிப்பது? அந்த சுமனா, ரொம்பவும், பொல்லாதவள் என்கிறாயே. எப்படி அவளை விடுவது? யாராவது ஆள் வைத்து, அடித்துப் பார்க்கலாமா?" என்று கேட்டாள்.

அருவருப்புடன் நோக்கி, "நீங்கள், ஒரு குடும்பத்-தலைவியாகவே இருங்கள், அத்தை, பேட்டை தாதா ஆக வேண்டாம்" என்றான் சீலன், கண்டனக்குரலில்.

"ஆமாம், நீ சொல்லுவாயப்பா. லட்சக்கணக்கில், பணம் போவது, எனக்குத்தானே. நினைக்கும்போது வயிறு பற்றி எரிகிறது. அலுங்காமல், நலுங்காமல், இவ்வளவு பணம் சம்பாதிக்க, என்ன முதல் போட்டாள் அந்தக் கிராதகி. அழகையும், உடம்பையும் காட்டி என் பிள்ளையை..."

"அத்தை!" என்று ஆத்திரத்துடன் எழுந்து நின்றான் சீலன். "இந்த மாதிரி மட்டமாகப் பேசுவது என்றால் நான் போகிறேன்" என்றான் கோபமாக.



"எவளையோ சொன்னால், உனக்கு என்னடா வந்தது? – சரிசரி, என் வாயால், அந்தக்கழுதையின் செயலைப் பற்றிப் பேசி அகத்தப்படுத்திக் கொள்ள வேண்டாம் என்கிறாய். அதுதானே?" என்று கேட்டவள், அவன் பேசாமலே நிற்கவும், "சரிடா. இனிப் பேசவில்லை. விடு இப்போது. நம் பிரச்சினைக்கு வா. என்ன செய்யலாம்?" என்று கேட்டாள்.

ஆனால், எழுந்தவன் மீண்டும் உட்காரவில்லை. "அடுத்த வாரம் மறுபடியும் மதுரைக்குப் போய் வரலாம் என்று இருக்கிறேன். அப்போது அவளிடம் பேசிப் பார்த்துவிட்டுச் சொல்லுகிறேன்" என்றவன், அதற்கு மேல், தாமதியாமல் கிளம்பிச் சென்று விட்டான்.

மறுதரம் மதுரைக்குச் சென்றபோது, சீலனுக்கு, சுமனாவைப் பற்றிய பல தகவல்கள் கிடைத்தன. அவற்றுள், ஒன்று அவளை மிரட்டிப் பணிய வைக்கும் சக்தி வாய்ந்த பலமான ஆயுதமாகவும் அமைந்தது.

ரயில் பயணம் செய்து, காலையில் அவன் பாட்டி வீட்டை அடைந்தபோது, சுந்தர், அவனை வெகு உற்சாகத்துடன் வரவேற்றான்.

"சுமனா சொன்னதுதான் சரி அண்ணா, நீ இன்று வருவாய் என்று நிச்சயமாகச் சொன்னாள். அதே மாதிரி வந்துவிட்டாயே!" என்று குதூகலத்துடன் கூறியபடி, மாமன் மகனின் பெட்டி, பையைத் தூக்கி கொண்டு உள்ளே சென்றான்.

தான் வந்ததை விடவும், சுமனாவின் வார்த்தை மெய்யானதில் தான், இவனுக்கு மகிழ்ச்சி அதிகம் போலத் தெரிகிறது. இதிலிருந்து இவனை எப்படி மீட்கப் போகிறோம் என்று கவலையுடன் யோசித்தவாறு மூத்தவன், மற்றவனைப் பின்தொடர்ந்தான்.

வீட்டினுள் சென்றபிறகும், எதிர்ப்பட்ட சுமனாவிடமும் அந்தப் பேச்சையே, சுந்தர் தொடரவும், எரிச்சலுற்று, "ஏன், இந்த வாரம் வருவதாகச் சொல்லிவிட்டுத்தானே, போன தரம் திரும்பிச் சென்றேன். இதில் இவ்வளவு அதிசயப்பட என்ன இருக்கிறது?" என்று, கேட்டான், அவன்.

முகமனாய் முறுவலித்தபடி, "நானும் அதைத்தான் சொன்னேன்" என்றாள், சுமனா. " சொல்லிவிட்டுச் சென்றதால், கட்டாயம் வருவீர்கள் என்றேன்."

மறுத்துச் சொன்னால், வாக்குத் தவறுகிறவன் என்று ஆகும். ஆனால், ஆமாம் என்றால், இவளோடு அல்லவா, ஒத்துப்போக நேரும்?

அதற்குள், "அண்ணன், தொழிலைத் தனியாகவே, நடத்துகிறவர், சுமனா. சொந்த வேலைக்கென்று நேரம் ஒதுக்குவது, ரொம்பக் கஷ்டம். போன தடவை கூட, வரும்போதே, கொள்முதலையும் முடித்துக் கொண்டுதான் வந்தான், தெரியுமல்லவா?" என்று கேட்டு, அவன் முதலில் செய்த பிழைக்குப் பரிகாரம் தேடிக்கொண்டான், சுந்தர்.

சீலன் ஒன்றும், இவளது முடிவுக்காக, இவளிடம் தொங்கிக் கொண்டு கிடப்பதற்காக மட்டுமாய் இங்கே வரவில்லை, என்று இவள் அறிந்துகொள்ளட்டும். அப்படியானால்தான் இவள், ஒரேயடியாக உச்சாணிக் கொம்புக்கு ஏறாமல் இருப்பாள்.

சீலன், மனதுள் சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே, "சுந்தர், உங்களிடம் நான் என்ன சொன்னேன்? நளினிக்குப் பிச்சிப்பூ பறிக்க உதவிசெய்யுங்கள் என்றால், உங்கள் அண்ணனுக்குப் பெட்டி தூக்கிக் கொண்டு இருக்கிறீர்களே! உங்கள் அண்ணன் என்ன, அவரது பெட்டியைக்கூடத் தூக்க முடியாத நோஞ்சானா? அங்கே பாருங்கள், மேலே உள்ள பூக்களை எட்டிப் பறிக்க



முடியாமல் நளினி எவ்வளவு சிரமப்படுகிறாள் என்று" சுமனா காட்டவும், கையிலிருந்த பெட்டி, பைகளை, அங்கேயே கீழே வைத்துவிட்டு, சுந்தர், வேகமாக, தோட்டத்தில், நளினி இருந்த இடம் நோக்கிச் சென்றான்.

பொருள்பொதிந்த, அல்லது, பொருள் காண முடியாத ஒரு புன்னகையுடன், "உங்கள் அறைதான் உங்களுக்குத் தெரியுமே, மி...வந்து சீலன்? போய்க் கொள்ளுவீர்கள் இல்லையா? சாமான்களை எடுத்துவர இளங்கோவை வேண்டுமானால் அனுப்பட்டுமா?" என்று இனிய குரலில் சுமனா வினவினாள்.

அடுத்து, உங்களைத் தூக்கிக் கொண்டு போக 'ஸ்ட்ரெச்ச'ருக்குச் சொல்லட்டுமா என்று கேட்பாள் போல?

உள்ளூரக் கொதிநிலையில் இருந்தபோதும், "என் பெட்டியைத் தூக்க முடியாத நோஞ்சான், நான் அல்ல என்று, நீயே சொன்னாயே. அப்புறம் எதற்காக, இளங்கோ?" என்று சாதாரணமான குரலில் கூறி முறுவல் என்ற பெயரில் உதடுகளை இழுத்துக் காட்டிவிட்டு, பெட்டி பையை எடுத்துக்கொண்டு சீலன் படியேறிச் சென்றான்.

"கொஞ்சம் சீக்கிரம் குளித்துத் தயாராகி விடுங்கள், சீலன், போன தடவை நீங்கள் வந்து போனதிலிருந்து, அம்மா - உங்கள் பாட்டி, பாவம் உங்கள் நினைவாகவே இருக்கிறார்கள். அவர்களும் சீக்கிரமாகக் காலை வேலைகளை முடித்து விட்டால், உங்களைப் பார்க்கப் பிரியப்படுவார்கள் என்று நினைக்கிறேன்" என்றாள் அவள், சற்று உரக்க.

அவனுக்கும், உத்திரவு போடுகிறாளாக்கும்! அவளது, புன்னகை நினைவுவர, சுமனா வேண்டுமென்றே, எரிச்சல் மூட்டுகிறாள் என்று சீலன் உணர்ந்தான். இப்போது, கோபத்தை யோ, வெறுப்பையோ வெளிக் காட்டுவது, இவளிடம், தோல்வி-

யை ஒப்புக்கொண்டதாகும் என்று உணர்ந்து. "ஓகே, சுமனா, நான் இதோ வந்துவிடுகிறேன். நீ, போய்ப் பாட்டி வேலைகளை விரைவாகக் கவனி" வீட்டுக்காரனாய் உத்திர விட்டுவிட்டு, அறைக்குள் புகுந்து, கதவைச் சாத்திக் கொண்டான்.

கண்கள் கடினமுற, சாத்திய அறைக்கதவை ஒருகணம் நின்று பார்த்துவிட்டு, ஓர் ஏளனப் பார்வையுடன், சுமனா திரும்பி நடந்தாள்.

அறையினுள், மனதைச் சமநிலைக்குக் கொண்டுவர, சீலனுக்குக் கொஞ்சம் நேரம் பிடித்தது.

அவனைப் பெட்டி தூக்க வைத்துவிட்டாளே, இந்தப்பெண்!

சீலன் பொய்யான கவுரவம் பார்க்கிறவன் அல்ல. தன் பெட்டியைத் தானே தூக்கிச் செல்வது கேவலம் என்று எண்ணுகிறவனும் அல்ல. சொல்லப்போனால் வெளிநாடுகளில் மட்டுமின்றி, நம்நாட்டிலும் கூட, அவனது பொருட்களை, அவனேதான் சுமந்து செல்வது. அது இலகுவாக இருக்க வேண்டுமென்பதற்காகவே பயணத்ததின் போது மூட்டை முடிச்சுக்கள் மிகவும் குறைவாகவே எடுத்துச் செல்லுவான். எனவே, பெட்டியைத் தூக்கியது பற்றி அவனுக்குக் குறை ஒன்றும் இல்லை.

ஆனால், அதைத் தூக்க நேர்ந்த விதம்தான் அவனை மிகவும் உறுத்தியது.

மிகவும் சாதாரணமான, ஒரு சிறு சம்பவத்தின் மூலம், சுந்தர் மீது அவளுக்கு எவ்வளவு ஆதிக்கம் இருக்கிறது என்பதை சுமனா, தெளிவாக எடுத்துக் காட்டி விட்டாளே, தெள்ளத் தெளிவாக!

பிரியமும், பாசமுமான வரவேற்பின் அறிகுறியாகத்தான், சுந்தர் சீலனின் பெட்டியைத் தூக்கி வந்தது. இவளது ஒரு



வார்த்தையில் அவனுடைய சீலாண்ணனை மறந்து, நின்ற இடத்தில் பெட்டியைப் போட்டுவிட்டு ஓடிவிட்டானே!

அதுதான் சீலனை மிகவும் உறுத்தியது. அவனைவிட அவளுக்கு அதிக மதிப்புக் கொடுக்கிறான். அப்படித்தானா? அல்லது, நளினியின் சிரமத்தைப் பார்த்து, அவளது உதவிக்குச் சுந்தர் ஓடிய சாதாரண சம்பவத்தை, சீலன்தான், அனாவசிய மாகப் பெரிதுபடுத்துகிறானா?

அதுமட்டும், சுமனா சொல்லிச் செய்யாமல், சுந்தர், தானாகச் செய்திருந்தால், ஒரு பிரச்சினையும் இருந்திராதே.

மனம் உளம்பியபடியே சீலன், குளிக்கப் போனான்.

## 6

சீலன், எதிர்பார்த்த மாதிரியே வழக்கத்துக்குப் பத்து நிமிஷம் முன்னதாகவே, பாட்டி பார்வதியின் சக்கர நாற்காலியைத் தள்ளிக் கொண்டு சுமனா ஹாலுக்குள் வந்தாள்.

வெகுநேரமாகக் காத்திருப்பவன் போன்று, பத்திரிகை ஒன்றை புரட்டியவாறு அமர்ந்திருந்த சீலனைக் கண்டதும், அவள் முகத்தில் தோன்றி மறைந்த ஏமாற்றம், சீலனின் கண்களுக்குத் தப்பவில்லை.

உள்ளூர நகைத்தவாறே, "என்ன பாட்டி, அருமைப்பேரன், அரை மணி நேரமாய்க் காத்திருக்கிறேன் இப்படி, சாவகாசமாக, ஆடி அசைந்து வருகிறீர்களே" என்று எழுந்து வந்து, ஒரு கையசைவால் சுமனாவை விலக்கி நாற்காலியை அவனே தள்ளத்தொடங்கினான். "உங்கள் உணவு நேரம் ஆகவில்லையே, கொஞ்சநேரம் தோட்டத்தில் சுற்றிவிட்டு வருவோமா? அப்படியே தனியாகக் குடும்ப விஷயம் பேசலாம்"

'இது என் குடும்பம். இங்கே நீ வெளி ஆள்' என்று, சொல்லாமல் சொன்னான் சீலன்.

கொஞ்சம் 'சுருக்'கென்று தைத்தது, சுமனாவுக்கு.

பார்வதி அவளை வீட்டுப்பெண் போல நடத்தி வந்தார். வீட்டுத் தலைவியைப் பின்பற்றி, எல்லோருமே அவளுக்கு மதிப்புக் கொடுத்ததால், அவளுக்கும், இது வெறும் சம்பளத்துக்கு வேலை செய்கிற இடம் என்கிற எண்ணம் இல்லாதிருந்தது. அவளுடைய சொந்த வீட்டில் போலவே, இங்கும் நல்லது, கெட்டது கவனித்து நடந்துவந்தாள்.

முதல்முதலாக, சத்யசீலன், அவளை, வேற்றாளாய் விலக்கி, நிறுத்தினான்.

காலையில் நடந்ததற்குப் பழிவாங்கு படலம்.

ஆனால், பழிவாங்குவதற்கு, இவனுக்கு என்ன அருகதை இருக்கிறது? சரியாகச் சொன்னால், பணம்தர முன்வந்ததற்காக, அவள்தான் அவனைப் பழிவாங்க வேண்டும்.

ஆமாம். பழிவாங்கியே தீரவேண்டும்.

மனதில் இருந்ததை வெளியே காட்டாமல் மறைத்து, "ஆமாம் அம்மா. நீங்கள் குடும்ப விவகாரங்களை அலசுங்கள். நான் போய்க் காலைப் பலகார விவகாரங்களைப் பார்க்கிறேன்" என்று பார்வதியிடம் சொன்னவள், சீலனிடம் திரும்பி, "சார் இந்த நாற்காலியின் 'பிரேக்' கொஞ்சம் மெதுவாக இழுத்துவிட வேண்டும். இடது, வலது பக்கங்களுக்குத் திரும்பும்போது, 'பிரேக்'கையும் லேசாகப் பிடிக்க வேண்டும். அப்புறம்...என்று இனிமையாக இலவச ஆலோசனை வழங்கியவள், அவன் பொறுமையிழந்து கொண்டு இருப்பதைக் கண்டு சிறு முறுவலுடன், மீண்டும் பார்வதியிடம் திரும்பினாள். "வண்டி, 'சாரு'க்குப் பழக்கம் இராதே என்பதால் சொன்னேன் எதற்கும் நீங்களும் கொஞ்சம் கவனமாக இருங்கள், அம்மா" என்று விட்டு உள்ளே சென்றாள்.



கை முஷ்டி இறுக, சக்கர வண்டியைத் தள்ளிச் சென்றான், சத்யசீலன்.

பாட்டியிடம் மீண்டும் ஒருதரம், சுமனாவைப் பற்றிச் சொல்லிப் பார்க்கலாமா என்று யோசித்துவிட்டு, உடனேயே, அந்த யோசனையைக் கைவிட்டான். பாட்டி, பிறர் சொல்லிக் கேட்கிறவர் அல்ல. சொல்லுகிறவர். எப்பேர்ப்பட்ட கொக்கனாயிருந்தாலும் சரி, எவ்வளவு வேண்டியவராக இருந்தாலும் அப்படித்தான்.

அத்தோடு, ஏற்கனவேதான், ஒரு குட்டு பட்டாயிற்றே.

மேலும், இவளைப் பாட்டி வீட்டிலிருந்து மட்டும் விரட்டுவதால் என்ன பயன்? சுந்தரின் வாழ்விலிருந்து அல்லவா விரட்ட வேண்டும்?

தோட்டத்தில், சீலனின் கண்ணுக்கு இனிய விருந்தாக, ஒரு காட்சி தென்பட்டது.

நளினிக்குப் பூப்பறிப்பதில், உதவிசெய்ய முன் வந்த சுந்தர், அப்படியே, அங்கேயே, இருந்துவிட்டான் போலும், தோட்டத்தில் இருந்த கல் 'பென்ச்' ஒன்றின் மீது அமர்ந்து, அவன் நார் கிழித்துக் கொடுக்க, அவளும், பூக்களைத் தொடுத்து முடித்துக் கொண்டிருந்தாள்.

இருவரிடையே, பேச்சும், சுவாரசியமாகப் போய்க் கொண்டிருந்தது என்பது, அவர்களது தோற்றத்திலேயே நன்கு தெரிந்தது.

இந்தக் கண்கொள்ளக்காட்சியை, சுமனா அல்லவோ பார்க்க வேண்டும்?!

இதையும்கூட முழுமூச்சாகக் காமேசுவரி அத்தை, எதிர்க்கத்தான் போகிறாள் என்றாலும், இந்த சுமனா முகத்தில் கரி பூச முடியுமே.

என்ன திமிராக அத்தையின் சொத்துக் கணக்கைப் பார்த்துக் கொண்டுதான், முடிவு சொல்ல முடியும் என்பாள்?

ஒருவேளை, சுந்தரைவிட்டு விலகுவது பற்றிச் சொல்லுவதற்காகத்தான், அவனைத் தோட்டத்துக்கு அனுப்புகிறாளோ என்றுகூட, முதலில் சீலன் நினைத்தான். ஆனால், அவன் அந்தப் பேச்சையே எடுக்கவில்லையே! அவனாக வந்து கெஞ்சுவான் என்று எண்ணியிருப்பாள்!

இருக்கட்டும். அவளே முதலில் கேட்கட்டும். அவளுக்கும் பணம் தேவைதானே? அதுவும், இவ்வளவு பெரிய தொகை! வரட்டும், தானாக வரட்டும், வந்து கேட்கட்டும். அவளாகக் கேட்டால்தான், நாம் கொஞ்சம் பிடித்துக் காட்ட முடியும்.

சீலனின் எண்ணங்கள் எதைஎதையோ சுற்றிச் சுழல, பாட்டி பார்வதி, அவனிடம், வேறொன்று கேட்டார். "சீலா, நளினியைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று வினவினார்.

"மிகவும் நல்ல பெண்" என்றான் அவன் சற்றும் தயங்காமல். "இந்தக்காலத்தில் நாம்பார்க்கும் சில பெண்களைப் போலப் பேராசை, திமிர் ஒன்றும் கிடையாது. அமைதியான, அடக்கமான பெண்" என்று பாராட்டினாள்.

"அப்படியானால், நீ அவளை, மணந்து கொளகிறாயடா?" என்று பார்வதி கேட்கவும், சீலனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.



"அய்யோ, பாட்டி, ஊகூம்" என்றான் விழுந்தடித்துக் கொண்டு அவசரஅவசரமாக.

"பின்னே, அவளை அப்படிப் பாராட்டினாயேடா? சும்மா, 'ரீல்'தானா?"

"அச்சோ, அப்படியில்லை, பாட்டி. நான் சொன்னது அவ்வளவும் அப்பட்டமான நிஜம்தான். ஆனால், அவள் மகாசாது. எனக்கு...என் மனைவி, இன்னும் கொஞ்சம் உயிர்துடிப்புடன் இருக்கவேண்டும் பாட்டி" என்று விளக்கம் சொன்னான், சீலன்.

"ஓகோ!" என்ற மூதாட்டி, சற்று யோசித்துவிட்டு, "நம் சுமனா மாதிரி இருக்கவேண்டும் என்கிறாயா?" என்று அடுத்த கேள்வி கேட்டார்.

மீண்டும் தூக்கிவாரிப்போட்டது சீலனுக்கு!

சுமனா மாதிரிப் பெண்ணா?

இருந்திருந்து, அவளைப் போய், இந்த சீலன் மணப்பதா?

சேச்சே என்று எண்ணமிடும்போதே, அவளது அழகிய முகமும், எழில் மேனியும், ஒயிலும் கம்பீரமும் கலந்த நடையும், வேடிக்கைப் பேச்சும், அவனுக்கு நினைவு வந்தன.

முதல் பார்வையிலேயே, பாரதியாரின் புதுமைப்பெண் என்று எண்ணினானே.

இப்படி ஒருத்தியை மணக்கக் கொடுத்து வைக்க வேண்டாமா?

இவை எல்லாம் உடைய ஒருத்தியை மணக்கக் கொடுத்து வைத்திருக்கத்தான் வேண்டும்.

ஆனால், சுமனா, இவை மட்டுமே உடையவள் அல்லவே. இவை அத்தனையோடு, அவளது நெஞ்சுக்கூட்டினுள் ஒரு பணம் என்னும் இயந்திரமும் இருக்கிறதே. அதன் ஆதிக்கத்தால், ஆடக்கூடாத ஆட்டம் எல்லாம் ஆடும் இவளைச் சீலன், எப்படி, மணந்துகொள்ள முடியும்?

"ஒருக்காலும் முடியாது" என்றான் அவன் உரக்க.

"என்னதும்மா, முடியாது?" என்று பார்வதி வியப்புடன் கேட்ட பிறகே, மனதில் நினைத்ததை, உரக்கச்சொல்லி விட்டது புரிபட, என்ன பதில் சொல்வது என்று தெரியாமல், ஒரு வினாடி சீலன், திகைத்துப் போனான்.

உடனேயே சமாளித்து, "அது ஒன்றும் இல்லை பாட்டி. ஏற்று மதிக்காக, மென்மையான போர்வை ஒருவகை, இங்கு வரும் வழியில் பார்த்து வைத்தேன். விலைதான் மிக அதிகம், சொல்லுகிறார்கள். அ...அந்த விலை நமக்குக் கட்டாது. அதுதான், அதையே யோசித்துக் கொண்டு இருந்தேனா? நீங்கள் ஏதோ கேட்க, எனக்கு இது வாயில் வந்துவிட்டது" எப்படியோ, எதையோ, கோவையாகக் கூறி முடித்தான்.

"ஓகோ!" என்றார், பார்வதி.

உணவின்போது, சுமனாவுடைய குடும்பத்தின், இன்னொரு நபரை, சீலன் சந்தித்தான்.

சாப்பாட்டு மேஜையில் ஒரு தட்டு மட்டும், நிமிர்த்தப்படாமல், கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த அதேநிலை யில் இருக்க, சீலன், கேள்வியாய்ச் சுற்றிலும் நோக்கினான்.

சுமனா சும்பந்தப்பட்ட விஷயம் அல்லவா? சுந்தர்தான் முந்திக்கொண்டு, பதில் சொன்னான். "அது, கண்ணனுக்கு அண்ணா. கண்ணன் நம் சுமனாவுடைய தம்பி. சரியான



புத்தகப்புழு. இப்போதுகூட ஏதாவது புத்தகத்தில் முழுகிப் போய்த்தான், சாப்பாட்டை, மறந்து போயிருப்பான்" என்று விளக்கம்சொன்னான்.

"புத்தகப்புழு என்றாள்...? கதைப்புத்தகமா?" என்று சீலன் கேட்க, அதிர்ந்து, "பாடப்புத்தகம் அண்ணா. அவனுக்கு அதுதவிர, வேறு உலகமே கிடையாது தெரியுமா? அப்படி விழுந்து, விழுந்து படிக்கிறவன் அவன்" என்று சுந்தர் மீண்டும் விளக்கினான்.

"அதுசரி, இப்போது நாம், அந்தப் புத்தகப் புழுவுக்காகக் காத்திருக்கப் போகிறோமா அல்லது புழு, புத்தகத்தையே சாப்பிட்டும் என்று விட்டுவிட்டு இட்டிலி தோசைகளைக் கபளிகரம் பண்ணத் தொடங்கலாமா?" என்று கேட்டான், பார்வதி அம்மாளுடைய மூத்த பேரன். "ஏன் கேட்கிறேன் என்றால், எதையாவது சீக்கிரம் உள்ளே போடவில்லையானால், என் சிறுகுடலைப் பெருங்குடல், கபளிகரம் பண்ணத் தொடங்கிவிடும்"என்றுரைத்து, அவன் முறுவலிக்க, மாமன் மகன், ஏதோ பெரிய 'விட்' அடித்து விட்டமாதிரி, சுந்தர், கடகடவென்று நகைத்தான்.

"இவள் தம்பிக்காகக் காத்திருப்பதா" என்பதுதான் சீலனுக்கு என்று ஊகித்த சுமனா, "உண்மையாகவே பசித்தவர்கள், யாருக்காகவும் காத்திருக்கத் தேவையில்லை. பசித்து உண்பவர்களைத் தப்பாக எண்ணுபவர்களும் இங்கே யாருமில்லை. கண்ணன், ஏதாவது பாடம் முடிக்கிற நிலையில் இருக்கிறானோ, என்னவோ? அவன், அதை முடித்துவிட்டு வரட்டும். மற்றவர்கள் சாப்பிடலாம்" என்றாள்.

அப்படிச் சொன்னதோடு மட்டுமின்றி, பார்வதி அம்மாளுக்கு, அவருக்குத் தேவையானபடி உணவை எடுத்து வைக்கவும் தொடங்கினாள்.

சுந்தரும், நளினியும் சாப்பிடத் தொடங்கினர்.

ஆனால், ஏதாவது ஒருவகையில், சுமனாவை மட்டம்தட்டியாக வேண்டும் என்கிற வேகத்தினாலேயே, இவ்வளவு பேசிய, சீலனுக்கு ஒரு விழுங்கு கூட, உள்ளே இறங்கவில்லை.

அவனது பேச்சில் மறைந்திருந்த குத்தலை உணர்ந்து, மற்றவர்களைச் சாப்பிடச் சொன்னபோதும், தன் தம்பி பட்டினியாக இருக்கையில், உணவுகொள்ள மனமில்லாததாலோ, என்னவோ, சுமனா, ஒரு பிடி கூட வாயில் வைக்கவில்லை என்பது அவனது கவனத்துக்குத் தப்பவில்லை. பிறரைப் பட்டினி போட்டுவிட்டு, அவர்காண, உண்ணும் நாகரீகம் இன்னும் அவன் பயிலாதது.

பதில் கொடுக்க முடியாதபடி மட்டம் தட்டுகிறான் என்று உள்ளூர, சுமனா குமுறிக்கொண்டுதான் இருந்தாள். இப்போது, சீலன், வெறுமனே தட்டில் அளைந்துகொண்டு இருப்பதைக் காணவும் "என்னவோ, சிறுகுடலைப் பெருங்குடல் தின்னப் போவதாக மிரட்டினீர்கள். தட்டில் வைத்தது, அப்படியே இருக்கிறதே! சென்னைப் பட்டணத்துக்காரருக்கு, இங்குள்ள சுவை, பிடிக்கவில்லை, போல?" என்று கிண்டலாகக் கேட்டாள்.

சாப்பிடாததைக் கண்டுகொண்டு விட்டாளே, கிராதகி, என்று எண்ணியபடி, "அதெல்லாம் ஒன்றுமில்லை. என்னவோ, தெரிந்தமாதிரி உன் தம்பி, பாடத்தை முடிக்கிற தருவாயில் இருப்பதாய்ச் சொன்னாயே, பாவம், அவனும் வந்துவிடட்டுமே, என்று நினைத்தேன்" என்றான் சீலன்.

சுமனா வாயடைத்துப் போனாள் இந்த மாதிரி நல்ல எண்ணம் இவனுக்குக்கூட இருக்கக்கூடும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லையே!



சுமனா வியந்து நோக்க, பார்வதி முறுவலித்தார். "போம்மா, போய்க் கண்ணனைக் கூட்டிக்கொண்டு வா. மீதிப்பாடத்தைப் பிறகு படித்துக் கொள்ளலாம் என்று சொல்லி அழைத்துவா" என்று அவளை அனுப்பி வைத்தார்.

மெலிந்த, ஆனால், நெடிய மேனியுடன், கூடவே, கையில் புத்தகத்துடன், சுமனாவுடைய தம்பி கண்ணன் வந்தான். "தட்டில் எடுத்துக் கொண்டு போய்விடுகிறேனே" என்று தமக்கையிடம் அவன் கேட்டது எல்லோரின் காதுகளிலும் விழுந்தது.

"ஷ் சும்மா வந்து சாப்பிட்டுவிட்டுப் போ" என்று தணிந்த குரலில், தம்பியை அடக்கியவாறு அவனுக்கான தட்டை, நேராய் வைத்து, இரண்டு இட்டிலிகளைத் தட்டில் எடுத்துவைத்தாள், சுமனா.

'செல்லோ' வைத் திறந்து, சுமனா தோசையை எடுப்பதற்குள்ளாக, "வேண்டாம், வேண்டாம். இதுவே, போதும்" என்று மறுத்தான், அவன்.

"உண்டவன் உரம் செய்வான். சாப்பிட்டால்தானே உடம்புக்குச் சக்தி கிடைக்கும்? தோசை வேண்டாம் என்றால், பூரி சாப்பிடு. சுமனா, கண்ணனுக்கு இரண்டு பூரி வைம்மா" என்றார் பார்வதி.

"பூரியா? ஐயய்யோ, வேண்டாம், பாட்டீ இதுவே அதிகப்படி" என்றவாறு, இட்டிலியை விண்டு, வாயில் வைத்துக்கொண்டு, இடது கையால் புத்தகத்தைப் பிரித்தான், கண்ணன்.

செய்கையற்ற ஒரு பெருமூச்சுடன், சுமனா, அவளது இருக்கைக்குச் செல்லவும், "யாருக்கு அதிகப்படி?" என்று சீலன் வினவினான்.

அவன்குரலில் இருந்த அழுத்தத்தில், எல்லோருமே நிமிர்ந்து, அவனை நோக்கினர்.

"யாருக்கு அதிகப்படி?" என்று மீண்டும் கேட்டவன் தொடர்ந்து, "உனக்கு என்றால், உன் ஒல்லி உடம்புக்குக் குறைந்தபட்சம், இன்னும் ஆறு இட்டிலிகள் தேவைப்படும். அப்படியின்றி, அந்த 'அதிகப்படி' எங்களுக்காகச் சொல்லப் பட்டது என்றால், அதாவது, உனக்கு இந்த இரண்டு இட்டிலிகளுக்கு மேல் கொடுத்து, எங்களுக்குக் கட்டுப்படி ஆகாது என்று, நீ நினைத்தால்...அப்புறம், உன்னிஷ்டம். இத்தோடேயே நிறுத்திக்கொள்" என்று முடித்தான்.

அக்கா வேலைசெய்யும் இடத்தில் ஏதாவது தப்பாக நடந்து கொண்டு விட்டோமோ என்று கண்ணன் சற்றுக் கலங்கி விட்டான்.

"அ-அப்படி எல்லாம் இல்லை, சார். சாப்பிடுகிற நேரத்தில், இன்னும் கொஞ்சம் படிக்கலாமே...என்றுதான்..." என்று தடுமாறினான்.

"ஆனால், நன்றாகப் படிக்கவும், படிப்பது நினைவில் இருப்பதற்காகவுமே, நீ இன்னும் அதிகமாகச் சாப்பிட்டாக வேண்டுமே. பாட்டி சொன்னதுபோலப் படிப்பதற்கான சக்திக்காகவே, நீ, எவ்வளவோ உண்ண வேண்டுமே. பட்டினி கிடந்து படித்தால், நினைவில் எது நிற்கும்? இப்படி, சாப்பிடும்போதும், குளிக்கும்போதும் கூடப் படித்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான். ஒரு பிரயோஜனமும் இராது" என்று எடுத்து உரைத்தான் அவன்.

ஒருகணம் கண்மூடி யோசித்துவிட்டு, "அதுவும் சரிதான், சார். ஆனால் போன வாரம் முழுவதும் வீட்டில் படிக்கவே, முடியாமல் போயிற்றா? அந்த நேரத்தை ஈடுகட்டத்தான், இப்படி



எல்லா நேரமும் படிக்கிறேன், சார். அக்கா, சார் சொன்னாரில்லையா? இட்டிலியோ, பூரியோ, இன்னும் கொஞ்சம் போடேன். அதையும், விழுங்கி வைக்கிறேன்" என்றான் கண்ணன், அலுப்புடன்.

"சாப்பிடுவதைச் சந்தோஷமாகச் சாப்பிட வேண்டுமடா" என்று மகிழ்ச்சியோடு, தம்பியின் வேண்டுகோளை நிறைவேற்றிவிட்டு, சீலனைப் பார்த்த சுமனாவின் முகத்தில், நன்றி நிறைந்திருந்தபோதும், அவளது கண்களில் குழப்பமும் காணப்பட்டது.

இதே தம்பியை மட்டம்தட்ட, முதலில், அவன் பேசிய விதம் என்ன? இப்போது வருந்தி, வருந்தி, அவனை வற்புறுத்தி, அதிகமாக உணவருந்த வைப்பதென்ன? குணத்தளவில், இரண்டு எதிர்த் துருவங்களும், இவனிடம், ஒன்றுசேர்ந்து இருக்கின்றனவே?

அத்தோடு அவள்மீது, அதிக வெறுப்பு, அவனுக்கு. அப்படியிருக்க, அவளுடைய தம்பியின் நன்மை நாடி, இவ்வளவு நல்லுபதேசம் நடத்துவானேன்?

எப்படியோ? கண்ணனை, உண்ணவைத்து, அவனுக்கு நல்லது செய்தான் அதற்கு நன்றி உரைப்பது கடமை.

இவ்வாறு எண்ணித்தான், சுமனா, சீலனுக்கு நன்றி தெரிவித்தது.

ஆனால், அவனோ, "உன் நன்றிக்காக, நான் எதையும் செய்யவில்லை" என்றான். ஒரு சின்னப்பையன், சரியாக உண்ணாமல், ஒட்டி, உலர்ந்து, நரங்கிப் போய்க்கொண்டு இருக்கிறானே, பாவம், என்று சொன்னேன். அத்தோடு, அவன் நல்ல பையனாகத்தானே தெரிகிறான்?" என்றவன், அத்தோடு நிறுத்தியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். ஆனால், "சில

பழமரங்களில், ஒரு கிளையில் நல்ல, இனிப்பான பழங்களும் இன்னொரு கிளையில் புளிப்பும் நாருமாய் மகா மோசமான பழங்களும், பழுப்பதில்லையா? அதுபோல, உன் தம்பி என்பதால், அவனும் மோசமானவனாகத்தான் இருக்க வேண்டும் என்பது இல்லையே!" என்று சீலன் சேர்த்துச் சொல்லவும், சுமனா, முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விட்டாள்.

'சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்ளுவது இல்லை' என்று பழமொழியே இருப்பது அவளுக்குத் தெரியும்தானே? அதை மறந்து, சீலனிடம், நல்லதென்று ஒன்றைக் கண்டுபிடித்து, அதற்கு நன்றிவேறு சொல்லப்போனது அவளது மடத்தனம்தானே?

இருக்கட்டும். இவனைச் சும்மா விடுவதில்லை!

அன்றைய மதிய உணவுக்கான மெனுவைச் சமையல் காரனிடம் கொடுத்துவிட்டு, பார்வதி அம்மாளை, சுமனா, ஹால் டிவிக்கு அழைத்து வந்தாள்.

'ஹரிதாஸ்' அந்தப் பழைய படத்தின் 'டைட்டி'லைப் பார்த்ததுமே ,சுந்தர் எழுந்துவிட்டான்.

"ஹைய்யோ! இந்த சுமனா, பாட்டிக்காகப் பழைய கற்காலத்துப் புராதனப்படம் தேடி எடுத்து வந்து விட்டாளப்பா. அம்மாடி, ஆளை விடு. நானும் அண்ணனும், ஏதாவது நல்ல சினிமாவுக்குப் போய் வருகிறோம். என்ன சீலாண்ணா, போவோமா?" என்று வினவினான்.

"ம்...இந்தப்படம்..." என்று, சீலன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே, "சினிமாவா? சுந்தர், நீங்கள் சரியான



ஆள்தான். போங்கள் கண்ணன், இங்கே எதற்கு வந்திருக்கிறான்? உங்களுக்குக் கூடச் சேர்ந்து, படிக்கத்தானே? பாவம், அவன் வேறு புத்தகமும் கையுமாகக் கண்ணைக் கண்ணை உருட்டிக்கொண்டு, அங்கே நின்றுகொண்டிருக் கிறானே, பார்க்கவில்லையா? போங்கள். அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டு படியுங்கள்" என்று சுமனா, சுந்தரை, விரட்டினாள்.

மிகவும் கீழ்ப்படிதலுள்ள மாணவனைப்போல, ஓர் அசட்டு நகையுடன், சுந்தர், பயன்படுத்தும் அறையை நோக்கிச் செல்லவும், சீலனின் உள்ளம் குமுறியது.

இவ்வளவு பெரிய வீட்டில், இவன் உட்கார்ந்து படிக்க, இந்த அறை தவிர, வேறு இடமே இல்லையாக்கும்? கண்ணனும், கூடப் போகிறான்தான்! ஆனாலும், சுமனாவின் அறை இவனுக்கு, இவ்வளவு பழக்கமானதாக இருக்கலாமா? இந்தப் பாட்டிக்கு, இது ஏன் தெரியவில்லை?

அல்லது, பாட்டியே இதை ஊக்குவிக்கிறாரோ?

பார்வதி பிறர் சொல்லிக் கேட்கிறவர் அல்ல.

ஆயினும், படத்தை ஓடவிட்டுவிட்டு, சுமனா உள்ளே சென்றதும், மெல்ல, "பாட்டி, சுந்தரும் அந்தப்பையனும், அந்தப்பெண் அறையில் இருந்துதான் படிக்க வேண்டுமா? அவளுக்கு'எதற்கு அனாவசியமாய்த் தொந்திரவு? அத்தோடு..." என்று தொடங்கினான்.

ஆனால், "இதோபார், பேசாமல் இருந்து படத்தைப் பார்ப்பதானால் பார். அல்லது, நீயும், அவனைப் போல வேறுவேலை இருந்தால் அதைப் போய்ப் பார்" என்றார் பார்வதி சற்று கண்டிப்பான குரலில்.

இந்த வயதானவர்களுடன் இதுதான், பெரிய பிரச்சினை. 'கொக்குக்கு ஒன்றே மதி' என்பது போல, அவர்களின் விஷயத்தை மட்டுமே தான் நினைப்பது. மற்றவர்கள் எப்படிப் போனாலும், அதைப்பற்றி அக்கறையே கிடையாது...என்று எண்ணமிடும்போதே, சீலனுக்கு மனம் உறுத்தியது.

பாட்டி பார்வதி அப்படிப்பட்டவர் அல்லவே.

அவர் பிறரைப்பற்றிய அக்கறை அற்றவராக இருந்திருந்தால், நளினிக்கு இந்த வீட்டில் இடம் இருந்திராது. இங்கே பணிபுரியும் ஒருத்தியின் தம்பிக்கு, ராஜஉபசாரம் நடக்காது.

அவ்வளவு ஏன்? சீலனுடைய தந்தை, பார்வதிக்கு ஒரேமகன். மகன் வீட்டில் இருந்து, மகன், மருமகளை அதிகாரம் செய்துகொண்டு, இருக்கலாம். ஆனால், தன்னால் வீட்டில் வீண் பிரச்சினை ஆகிவிடக்கூடாது என்றுதானே இப்படித் தனியே வாழ்கிறார்!

இவரது, இந்தத் தனிமையைத்தான், சுமனா பயன்படுத்திக் கொண்டிருக்கிறாள். முதுமையினால் தளர்ந்துவிட்டவரிடம், கொஞ்சிக் குழைந்து, குழையடித்து, அவரைத் தன் வசப்படுத்தியிருக்கிறாள்.

இதோ, இந்த 'ஹரிதாஸ் கேசட்' கொணர்ந்து, ஓட விட்டிருக்கிறாளே, இதுபோல, 'உங்களுக்காகச் செய்தேன், அம்மா' என்று அவ்வப்போது ஏதாவது செய்து, பாட்டியை வளைத்திருப்பாள்!

என்னதான், பொதுவேலை அது இது என்று பொழுது போக்கினாலும், உள்ளன்போடு பழகும் உறவினருக்கு அது ஈடாகுமா? அதை வைத்துத்தான் சுமனா, வெற்றி பெற்றிருக்கிறாள்.



வேலைவேலை என்று, மாதக்கணக்கில், பாட்டியைப் பார்க்க வராமல் இருந்ததை எண்ணி, அவன் மனமே சீலனைச் சுட்டது.

அதனால் எவ்வளவு பெரிய பாதகம் நேர்ந்துவிட்டது.

பாட்டி தப்பாக நினைக்கமாட்டார் என்கிற தைரியம்தான். ஆனால், தப்பாக நினையாதது வேறு, தனிமைத்துன்பம் வேறு அல்லவா? பாவம்!

இனி இந்தத் தவறு செய்யக்கூடாது என்று, தனக்குள் உறுதி எடுத்துக் கொண்டு, சீலன், மீண்டும் முயன்றான்.

"அதில்லை, பாட்டி, ஹாலை ஒட்டி இருக்கிறது, அந்த அறை. இந்த டீவி சத்தம் படிப்பதற்குத் தொந்திரவாக இராதா? அதனால்தான் சொன்னேன்" என்றான்.

டீவி திரையிலிருந்து, ஒருகணம், பார்வையைத் திருப்பி, மகன் வழிப்பேரனை நோக்கினார் பார்வதி. "மனதை ஒருநிலைப்படுத்தி விட்டால், அப்புறம், கவனம் எப்படிக் கலையும்? இவ்வளவு சொல்லுகிறாயே, நீ படிக்கிற காலத்தில் என்ன செய்வாய், நினைவிருக்கிறதா? ஏதேதோ பாட்டுகளில் வீடே அதிருமே. ஏதாவது பாட்டை அலற வைத்துக் கொண்டுதானே நீ படிக்கவே உட்காருவாய்? இப்போது மட்டும் என்ன? அவன் பாடத்தை அவன் படிக்கிறான், கஷ்டமாய் இருந்தால், என்ன செய்ய வேண்டுமோ, அவனே செய்துவிட்டுப் போகிறான், விடு" என்றார், சர்வசாதாரணமாக, அப்போதும் விடாமல், "சுந்தர், அந்த அறைக்குள், போவதும் வருவதுமாக இருந்தால், பார்க்கிறவர்கள், தப்பாக நினைக்க மாட்டார்களா, பாட்டி" என்று சீலன் கேட்டான்.

"அப்படித் தப்பாக நினைக்கிற மட்டிகள் இங்கே யாரும் கிடையாது. அத்தோடு, சுமனா என்ன செய்தாலும்,

காரணத்தோடுதான் செய்வாள். இப்போதும் அவள்தானே, இவர்கள் இருவரையும், அங்கேபோய்ப் படிக்கச் சொன்னாள்? எல்லாம் சரியாகத்தான் இருக்கும். கவலைப்படாமல் உன் வேலையைப் பார். சீலா. கவனி. இனி நான் படம்பார்ப்பதைக் கெடுத்தாயானால், எனக்குக் கோபம் வரும். பேசாமல் படத்தைப் பார்" என்று, சற்று கண்டிப்பான குரலில் கூறிவிட்டுப் பார்வதி திரையில் பார்வையைப் பதித்தார்.

காரணம் இருக்கிறது. அது. சுந்தரை மயக்கி, மணந்துகொள்ளும் திட்டம். என்று பார்வதியிடம் சொல்லி விடலாம் என்று. சீலன், ஒரு கணம் யோசித்தான். ஆனால், அவள்மேல் இருக்கும். அதிகப்படிப் பிரியத்தினால், ரொம்ப நல்லது என்று, அத்தையின் ஆட்டத்துக்குப் பயந்து, ரகசியமாகத் திருமணத்தையே முடித்து வைத்து விடுவாரோ என்று தோன்றவும், வாயை மூடிக்கொண்டு, பேசாமல், இருந்துவிட்டான்.

இதை, அவனாகவேதான் சமாளிக்க வேண்டும், சமாளித்தாக வேண்டும்.

'ஹரிதாஸ்' படம் முடியுமுன், சுமனா, மூன்றுதரம் வந்து, பார்வதியின் வசதிகளைக் கவனித்து விட்டுப் போனாள். இருமுறை குடிப்பதற்குச் சூடாகவும், அடுத்துக் குளிர்ச்சி யாகவும் என்று, ஏதோ ஒரு பானம் வந்தது. கொறிப்பதற்கும், மிருதுவான அவல் மாதிரி பார்வதிக்கும், காரசாரமாய் மொறுமொறுப்பாக, சீலனுக்கும், இரண்டு தட்டுகளை, இளங்கோ கொணர்ந்து வைத்துவிட்டுப் போனான்.

குறை சொல்ல முடியாதுதான். ஆனால், அந்தப் பணப்பிரச்சினை?

சுமனா, சுந்தரை மயக்கியதும், அவனை விட்டு



விலகுவதற்காகப் பெரும் பணம் கேட்டதும், மறுக்க முடியாத உண்மைகள் அல்லவா?

அப்படி மட்டும் இல்லையானால்—

தன்னையறியாமல் பெருமூச்சு விட்டான் சீலன்.

"இதைத்தான், படம் போடுவது என்பது திருந்திவிட்டாலும், கடவுள், ஹரிதாஸை எப்படி சோதிக்கிறார், பார்த்தாயா?" என்றார் பார்வதி, படத்திலேயே கவனமாக.

திருந்தினாலே போதுமே என்றது சீலனின் மனம்.

சட்டென நிமிர்ந்து அமர்ந்தான். அவன். சுமனா திருந்துவது பற்றி, அவன் ஏன் கவலைப்பட வேண்டும்?

கொடுக்கிற பணத்தை வாங்கிக்கொண்டு, அவள், சுந்தரை விட்டு விலகினால், அது போதாதா? அதற்கு மேல் அவள் திருந்தினாலும், திருந்தாவிட்டாலும், எக்கேடு கெ... கெடுவானேன்? எங்கேயோ, எப்படியோ நன்றாக வாழ்ந்துவிட்டுப் போகட்டுமே.

## 7

படம் முடிகிறபோது உணவு நேரம் ஆகியிருந்தது. உணவும் தயாராகி இருந்தது.

ஓரளவு பரிமாறுவதைக் கவனித்துவிட்டுத்தான், சுமனா சாப்பிட உட்காருவது. கடைசியாக, மீன் துண்டுகளைத் தட்டுதோறும் வைத்தவள், "சுந்தர், இன்று, உங்களுக்குப் பிடித்தமான மீன் வறுவல் வஞ்சி...ரம்" என்றாள், கண்கள் பளபளக்க.

பார்வதி முறுவலிக்க, கிளுகிளு என்று சிரிப்புச் சத்தம் சாப்பாட்டு மேஜையைச் சுற்றிலும், இங்கும் அங்குமாக வெடித்துப் பரவியது.

நளினி முகத்திலும் கூட மென்னகை மலர்ந்திருந்தது.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, "என்ன விஷயம்? என்ன சுந்தர், என்னிடம் சொன்னால் நானும் சேர்ந்து சிரிப்பேன் அல்லவா?" என்று சீலன் விசாரித்தான்.

"சிரிக்காவிட்டால்?" என்ற சுமனாவின் கேள்விக்குரிய பதில் சுந்தரிடமிருந்து வந்தது. "எல்லாம், அண்ணன் சிரிப்பான், சுமனா. எங்களுக்கெல்லாம் சிரிக்கச் சிரிக்க, எத்தனை கதைகள் சொல்லுவான் தெரியுமா? தானே மாட்டிக்கொண்ட கதை கூடச் சொல்லியிருக்கிறானே. அதனால் கட்டாயம், சிரிக்கவே செய்வான்" என்று சுமனாவுக்கு விளக்கம் கொடுத்துவிட்டு, சுந்தர், சீலனிடம் திரும்பினான். "பெரிதாக ஒன்றும் இல்லை, அண்ணா. இன்றைக்கு நாம் எல்லோரும் சேர்ந்து, உன்னைச் சாப்பிடப் போகிறோம்" என்றான் ஒரு மர்மச்சிரிப்புடன்.

"புரியவில்லையே!" என்றான் சீலன் மிடுக்காக.

முறுவலித்து, "நம் பாட்டி ஊர்ப்பக்கம், வஞ்சிர மீனைச் சீலாமீன் என்பார்களாம். நான், சீலாண்ணன் என்று, உன்னைப்பற்றி, நான் சொல்லும்போதெல்லாம், சுமனா, சீலாமீன் என்று சொல்லிக் கிண்டல் செய்வாள். வஞ்சிரம் வைக்கும் போதெல்லாம், உங்கள் அண்ணனை விழுங்கிவிட்டேன், என்பாள். அதுதான், இன்று..." என்று சுந்தர், மீண்டும் நகைத்தான்.

விழுங்குகிறாளாமா?

உள்ளே புகைந்தபோதும், வெளியே நகைத்து, "பரவாயில்லையே, வெறும் பெயரில்கூட, ஒரு வேடிக்கையைக் கண்டுபிடித்திருக்கிறாளே! பிரமாதம்தான். ஆனால், சுமனா, மீனை விழுங்கும் மனிதர் மாதிரி, மனிதரை விழுங்கும் மீனும் உண்டு தெரியுமோ, உனக்கு?" என்று, கேலி போலவே, சீலன் மிரட்டினான்.



"சுறா! சுறாமீன்!" என்றான் சுந்தர், கண்களை உருட்டி "என்ன, நளினி?" என்று அவளிடம் அபிப்பிராயம் கேட்டான்.

"ஆமாம், ஆமாம்" என்று அந்தப் பெண் தலையை உருட்டினாள்.

ஆனால், சுமனா, தலையைச் சிலுப்பினாள். "எங்கள் வீட்டில், எங்கள் அம்மா, சுறாமீனை, 'சூப்' வைத்து விடுவார்கள் தெரியுமா?" என்றாள் அலட்சியமாக. "ரொம்...ப்ப ருசியாக இருக்கும் தெரியுமா?"

தோளைக் குலுக்கிவிட்டு, கண்ணனிடம் பேசத்தொடங்கினான், சீலன். அப்போதுதான், அவனுக்குச் சுமனாவை மடக்கக்கூடிய, அந்த ஆயுதம் கிடைத்தது. வெளிப்பார்வைக்குச் சாதாரணமாக இருப்பது போலக் காணப்பட்டாலும், அந்த ஆயுதத்தை, எப்படிப் பயன்படுத்துவது என்று யோசித்தபடியே, இருந்தான் அவன். ஆயுதத்தின் முழுபலம் என்ன என்ற யோசனை யோடு, பயன்படுத்துவதா, கூடாதா, என்ற சிறு தயக்கமும் அவனுக்கு இருந்தது.

அந்தத் தயக்கத்தை விரட்டி, ஒரு வேகத்துடன், சீலன், அதைப் பயன்படுத்துமாறு செய்தது, சுமனா நடந்து கொண்ட விதம்.

முன்னர் செய்திருந்த தீர்மானத்தோடு, கையில், ஓர் ஆயுதமும் கிடைத்துவிட்டதால், சுமனாவின் முடிவை அறிய, சீலன், அதிக ஆர்வம் காட்டவில்லை.

பாட்டி, சுந்தரோடு கிண்டலடிப்பதும், கண்ணனோடு, அவனது படிப்பு விஷயமாகப் பேசுவதுமாக நேரத்தைக் கழித்தான்.

வழக்கமாக, ஞாயிறு காலையிலேயே தன் வீடு சென்றுவிடும் பழக்கமுள்ள கண்ணன், சீலனுடன் படிப்பு பற்றிப் பேசும் சுவாரசியத்தில் அப்படிச் செல்லுவதையே மறந்துபோனான்.

"வீட்டில் அம்மா தேடிக்கொண்டு இருப்பார்கள், கிளம்பு" என்று சுமனா விரட்டியபிறகுதான் ஒருவாறு, அந்த ஞாபகம் வந்து, வீட்டுக்குப் புறப்பட்டான்.

கிளம்புகையில், "இந்த ஹரிதாஸ் கேச'ட்டை, 'வீடியோ பார்ல'ரில் திருப்பிக் கொடுத்துவிடு., நான் கேட்ட மற்ற 'கேசட்'கள் வந்திருந்தால் கேட்டு, எனக்கு ஃபோன் பண்ணச் சொல்லு" என்று, அவனிடம், கூறி அனுப்பினாள்.

"அய்யய்யோ" என்றான், அதைக் கேட்டுக் கொண்டிருந்த சுந்தர், 'திரும்பவும் 'கேசட்'டா? இப்போது என்ன? என்னமோ, 'திருநீலகண்டர்', 'பவளக்கொடி' என்றெல்லாம் பாட்டி சொல்லிக் கொண்டிருந்தார்களே, அதெல்லாமா? கடவுளே, நான், இந்த வீட்டைவிட்டு ஓடிவிடப் போகிறேன். என்ன, நளினி, நீயும், என்னோடு வருகிறாயா? இந்த 'கேசட்' வைக்கிறபோது, நாம் இருவரும், அழகர்கோயில் வரை, சென்று வரலாம்?" என்று கேட்க, நளினியும், முகமலர்ச்சியோடு தலையாட்டினாள்.

நளினியைக் கூட வரும்படி, சுந்தர் அழைக்கிறானே, பிடி தளர்கிறதோ என்று, சுமனா கவலைப்படுகிறாளா, என்று சீலன் கவனிக்க, அவள், அதற்கு வேறு பதில் வைத்திருந்தாள்.

"தாராளமாகப் போங்களேன். ஆனால், நளினிதான் பாவம், அங்கே சுனைக்கு ஏறு, இறங்கு என்று, அவளைப் போரடித்து விடுவீர்கள். இங்கே, என்னோடு இருந்து, ஜாலியாக, 'பேக் ஸ்ட்ரீட் பாய்ஸ்', 'மரீயா', 'ஸ்டெப்ஸ்' எல்லாம் பார்த்துக்கொண்டு



இருப்பதை விட்டுவிட்டு, உங்களோடு சேர்ந்து சங்கடப்படப் போகிறாள்" என்று சிரித்தாள்.

"என்னது, என்னது? என்ன 'கேசட்'டெல்லாம் சொன்னாய்?"

சுமனா, பேசாமல் முறுவலிக்கவும், "சொல்லேன்" என்று சுந்தர் கெஞ்சுவது பொறுக்காமல், "உங்களுக்குப் பிடித்த தெல்லாம்தான் அத்தான். அதிலும் 'மரீயா' ரொம்பப் பிடிக்குமே. வீட்டிலேயே இருந்து விடலாமா" என்று கேட்டாள், அந்தப்பெண் நளினி. "பாவம், தனியாகப் பார்க்க, சுமனாவுக்கும், போரடிக்கும் இல்லையா?" என்று, சுமனாவுக்காகப் பரிந்தாள்.

தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது, சீலனுக்கு.

சுந்தரோடு, தனியாக சுற்ற ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது, அதை விட்டுவிட்டு, வீட்டில் இருந்து, கூட்டத்தோடு, 'கேசட்' பார்க்கிறாளாம். அப்படி என்ன, அவன் சந்தோஷம் அவளுக்கு முக்கியம்? அவளதையும் விட?

சுமனாவுக்காக வேறு பரிகிறது, இந்த மக்கு. தன் விரோதி என்பது கூடவா தெரியாது?

அப்படி என்ன, ஆண் பெண் எல்லோரையும் இந்த சுமனாவால், மயக்கிவிட முடிகிறது?

கடவுளே, ஓரவஞ்சனை செய்கிற மாதிரி, சுமனாவுக்கு இப்படி ஓர் அழகான முகத்தைக் கொடுத்து வைத்திருக்கிறாரே... அதேமாதிரி மூளை. இரண்டையும் நன்றாகவே பயன்படுத்திக் கொள்கிறாள்.

ஆனால், அவள் என்ன தான் அழகியாக இருந்தாலும், என்னதான் கெட்டிக்காரியாக இருந்தாலும் சீலனை மட்டும்

ஒருநாளும் ஏமாற்ற முடியாது. அவனை அவள் வெல்லவும் முடியாது. என்ன அழுத்தக்காரியாக இருந்தால், அவன் எதற்காக வந்திருக்கிறான் என்பது தெரிந்திருந்தும், அதுபற்றி ஒன்றுமே சொல்லாமல், இப்படி சர்வசாதாரணமாகச் சுற்றிக் கொண்டிருப்பாள்?

கூடவே, சுந்தர் மீது தன் ஆதிக்கம் எவ்வளவு என்பதையும் அவ்வப்போது காட்டிக்கொண்டு!

இருக்கட்டும். இவள் என்னதான் முயன்றாலும், இவளைக் காயப்படுத்தக்கூடிய ஆயுதம் அவனிடம் இருக்கிறது.

கொஞ்சம் பாவம் என்று பார்க்கிறான். அவ்வளவே. ஆனால், அவளாக வழிக்கு வராவிட்டால் மண்டையில், ஒருதட்டு தட்ட வேண்டியதுதான்.

சுமனா, மற்றவர்களோடு, முக்கியமாக சுந்தருடன் பழகிய விதம் கண்டு உள்ளூரக் குமுறிக்கொண்டு இருந்த சீலன், அவளது ஒரு சீண்டலில், மனம் கொதித்து, அவனது ஆயுதத்தைப் பயன்படுத்தி விட்டான்...

தன் காரைத் திரும்பக் கொண்டு போவதற்காக, சீலன், ஞாயிறன்று மதியமே, சென்னைக்குக் கிளம்புவதாக இருந்தது.

தயாராகிக் கொண்டிருந்தவனிடம், சுமனா வந்து நின்றாள். "நீங்கள் அடுத்த வாரம் வரும்போது, சென்னையிலிருந்து ஒரு பழைய 'கேசட்' வாங்கி வருகிறீர்களா? எம்.கே.டியின் 'சிந்தாமணி'. பார்க்க வேண்டும் என்று உங்கள் பாட்டி மிகவும் ஆசைப்படுகிறார்கள். இங்கே எனக்குக் கிடைக்கவில்லை" என்று ஒரு வேண்டுகோள் விடுத்தாள்.

அவளது புன்னகையும், சகஜபாவமும், ஏனோ, அவனுள், காரணமற்ற ஓர் ஆத்திரத்தைக் கிளப்பியது. என்னையும் என்ன,



சுந்தர் என்று நினைத்தாளா, விருப்பம் போல உத்தரவிட, என்று உள்ளூரச் சினந்து, "உனக்குக் கூட ஒன்று கிடைக்கவில்லை என்றால், ஆச்சரியம் தான்" என்றான் ஏளனமாக.

"கிடைக்காததால்தானே சொல்லுகிறேன். கொஞ்சம் தேடிப் பார்த்து வாங்கி வருகிறீர்களா?" என்று அவள், முறுவல் மாறாமலே மீண்டும் கேட்டாள்.

'அழுத்தத்தைப்பார்' என்று அப்போதும் மனதில் ஆத்திரப்பட்டவன், "அடுத்த வாரம் நான் வருவது நிச்சயம் இல்லை. ஏனென்றால், நான் ஒன்றும் சும்மா உட்கார்ந்து, ஊரை ஏமாற்றிச் சாப்பிடுகிறவன் இல்லை" என்றான், முரட்டுத்தனமாக.

செவ்விதழ்கள் சற்றே வளைய, "இல்லை, வருவீர்கள். நிச்சயமாக வருவீர்கள்" என்றாள் சுமனா, ஏளனமான குரலில்.

"அதென்னம்மா, என்னைவிடவும், உனக்கு, அவ்வளவு நிச்சயம்?" என்று கேட்டபோது, அவன் குரலில், எகத்தாளம் இருந்தது.

"நிச்சயம்தான். ஏனென்றால், நான், இன்னமும், சுந்தர், விஷயமாக உங்களுக்கு என் பதிலைச் சொல்லவில்லையே. அதை, அறிந்துகொள்ளக் கட்டாயமாய் வருவீர்கள். அத்தோடு, இங்கே நான் இன்னும் என்னென்ன விதமாய்த் தண்டனைகள் தருவதென்று திட்டங்கள் தீட்ட வேண்டும்...அடேயப்பா! எவ்...வளவு வேலைகள் இருக்கின்றன? நீங்கள் தான் கடமை தவறாத கர்ம வீரராயிற்றே! எப்படி வராமல் இருப்பீர்கள்? கட்டாயம் வரத்தான் செய்வீர்கள். அப்படி வரும்போது, இதையும் வாங்கி வாருங்கள்" என்று திருப்பிக் கொடுத்தவள், அவனது பதிலுக்குக் காத்திராமல், திரும்பிச் சென்று விட்டாள்.

என்ன திமிர்! எவ்வளவு அகம்பாவம்! இதற்குத் திருப்பிக் கொடுக்காவிட்டால், அவன் என்ன ஆண்பிள்ளை?

தண்டனை தருவது பற்றித் திட்டங்கள் தீட்ட வேண்டுமா?

அதற்கு அவசியமே இல்லை. பெண்ணே! உனக்கு உரிய தண்டனை என்வசம் தயாராக இருக்கிறது. அந்தத் தண்டனையை, எவ்வளவு முடியுமோ, அவ்வளவு விரைவாக, உனக்குத் தரவும், போகிறேன்! அந்தத் தண்டனையின் தாக்குதலில், நீ, உன் திமிரெல்லாம் அடங்கி, தலைக்குப்புறக் கீழே விழுந்து, கதறி அழப்போகிறாய், பார்!

அதென்ன கடமை தவறாத கர்மவீரனா? அதில் ஒரு கிண்டலா? நான் கடமைவீரன் தான், வேலைக்கு நழுவுகிறவனும் அல்லதான். உனக்கும் தண்டனை கொடுப்பதும், என் கடமைதான். அதில், நான் தவறப் போவதும் இல்லைதான். என் கடமையை நான் செய்து முடித்த பிறகு, உன் வாழ்நாள் முழுமைக்கும், என்னைக் கிண்டல் செய்கிற தைரியம், உனக்கு வருகிறதா, பார்க்கலாம்.

கால்களும், கைகளும், பழக்கத்தினால், காரைச், சரியாக ஓட்ட, சென்னைக்குத் திரும்பிவரும் வழியெல்லாம், சீலனின் உள்ளம், சீறிக் கொண்டே இருந்தது.

இருந்திருந்து, அவனைப்போய், சுமனா, எப்படிக் கிண்டல் செய்யலாம்?

அவ்வப்போது, அவளையும், நியாயப்படுத்த முயன்றவன், அது முடியாது என்று கண்டபிறகும், அவள் தம்பி ஒரு சின்னப்பையனின் வாழ்வைக் கெடுத்துவிடக் கூடாதே என்று, அவளுக்குரிய தண்டனையைத் தரத் தயங்கிக் கொண்டிருந்தவனைப்போய், ஏளனமாக, எகத்தாளமாக, இவள் பேசுவதா?

பேசினாளல்லவா? படட்டும். இவளுடைய தம்பியாகப் பிறந்தானல்லவா? அந்தப் பாவத்துக்காக அந்தப் பையனும் பட்டுத் தொலைக்கட்டும். இனி, இந்த முடிவில், மாற்றம் இல்லை.



வழக்கம்போலவே, சீலன், சென்னை வரும் நேரம் கேட்டறிந்து, காமேசுவரி, டெலிஃபோனில் அவனை, விரட்டிப் பிடித்தாள்.

"இன்னும் ஒருவாரம், பத்துநாளில், சுந்தர், சுமனாவுக்குத் தலை முழுகி விடுவான், கவலையை விடுங்கள்" என்றான், அவன், சுருக்கமாக.

"அப்பாடி" என்று ஆறுதலாகப் பெருமூச்சு விட்டாள், அவள். நன்றாக ஆசுவாசப்படுத்திக் கொண்டு, தன் அர்ச்சனையைத் தொடங்கினாள். "பாவி, ராட்சசி..இந்தக் கிராதகியினால், கிட்டத்தட்ட ஒருமாதமாய், எனக்குத் தூக்கமே போச்சே! அந்த நாயின் வாலை ஒட்ட நறுக்க வேண்டுமடா. ஓட ஓட விரட்டி, ஓட இடமில்லாமல், அந்தப் பிசாசு, கழுத்தில், தூக்கு மாட்டிக் கொண்டு, தொங்க வேண்....."

"போதும் அத்தை" என்றான், சீலன் இறுகிய குரலில். "அதுதான், சுந்தர், மீண்டு வந்துவிடுவான், என்றேனே. அதற்குமேல் இதெல்லாம், எதற்கு?" என்றான் சிறு வெறுப்புடன்.

"அதில்லையடா, அந்தச் சனியினால், இவ்வளவு நாள் எனக்கு எவ்வளவு மனக்கஷ்டம்? அவளை, ஆசைதீரத் திட்டித் தீர்த்தால்தான் என் ஆத்திரம் அடங்கும். அந்த நாயால், எனக்கு எவ்வளவு பண நஷ்டம்? அவளை நாலுவார்த்தை வையாவிட்டால், என் மனம் ஆறுமா, சொல்லு."

"அப்படியானால் திட்டி முடித்துவிட்டு என்னைக் கூப்பிடுங்கள். இப்போது நான் வைத்து விடுகிறேன்."

மருமகனின் குரலில், காமேசுவரி, கப்பென்று அடங்கிப் போனாள். எக்களிப்பெல்லாம் மறைந்து விட்ட குரலில், "ஏன் சீலா, அவளுக்கு, ரொம்ப நிறையப் பணம் தருவதாகச் சொல்லிவிட்டாயா? பத்துக்கு மேலும், அதிகமா? என்ன, சீலா?"

என்று கேட்டபோது, அவள் குரலில், கண்ணீர் கலந்திருந்தது.

"அதெல்..." என்று தொடங்கிய சீலன், சற்று யோசித்தான். "பணத் தேவைக்காகத்தானே, சுமனா, இப்படியெல்லாம், செய்தாள்? சுந்தரை விடுவித்தபிறகு, அந்தத் தேவையைக் கொஞ்சம் பூர்த்தி செய்தால் என்ன? அத்தோடு, அந்தச் சின்னபையன், கண்ணனின் எதிர்காலத்தையும், சற்று யோசித்தாக வேண்டியது இருக்கிறது.

மேலும், சுந்தருக்கும், ஒரு தண்டனை தேவைதானே? வலையில் விழத்தயாராக, அவன் போய்ப் பல்லை இளிக்கா விட்டால், சுமனாவுக்கு இந்த எண்ணம் ஏற்பட்டிருக்குமா?

இத்தனையோடு சேர்த்து, அத்தையின் அதிகப்படி ஆசைக்கும், ஓர், அபராதம்!

"எ...என்னடா, சீலா? ஏன் பேச்சையே காணோம்? ரொம்பரொம்ப அதிகமா? அய்யோ, நான் என்ன செய்வேன்? இப்படிப் பணத்தை விருதாவாக அள்ளி வீசவா, நான் தவமிருந்து இவனைப் பெற்றேன்?" என்று, காமேசுவரி புலம்பத் தொடங்கினாள்.

"ஷ்ஷ் என்ன அத்தை, இது? நீங்கள் நினைக்கிற மாதிரியெல்லாம், ஒன்றும் இல்லை. அவளிடம், நான், இன்னும், பணவிஷயம் பேசி முடிக்கவில்லை..."

"அய்யய்யோ" என்று பதறினாள், காமேசுவரி. "அவள் பாட்டில் ஐம்பது, அறுபது என்று கேட்டால்..."

"அத்தை, நான் பேசுவதை, அமைதியாகக் கேட்பதானால், நான், தொடர்ந்து பேசுகிறேன். இப்படி, நீங்கள், குறுக்கேகுறுக்கே பேசுவதானால், ரிசீவரை வைத்துவிடுவேன்" என்று, அத்தையம்மாளை மிரட்டி, அடக்கிவிட்டு, சீலன் தொடர்ந்தான்.



"பணவிஷயம், இன்னும், நான், அவளிடம் பேசவில்லை அத்தை. ஆனால், நீங்கள் கொடுப்பதாகச் சொன்னதை விடவும், குறைவாகவே முடித்துவிடலாம் என்று தோன்றுகிறது. அதனால், அனாவசியமாகக் கவலைப்படாமல், நிம்மதியாக இருங்கள். இப்போது, எனக்கு நிறைய வேலை இருக்கிறது. அதனால், ஃபோனை வையுங்கள். மதுரை வேலை முடிந்தபிறகு, நானே பேசுகிறேன்" என்று பேச்சை முடித்தான்.

"ஆகா, குறைவாகவா? அப்படியானால், ஒன்று, இரண்டிலேயே, முடிக்கப் பாரேன்? அல்லது, ஒன்றுமே, கொடுக்காமலேயே சமாளித்துவிட்டால், எவ்வளவு நன்றாயிருக்கும்? எதற்கு நம் பணத்தை அனாவசியமாய்க் கண்ட கழு..."

மேலேமேலே காமேசுவரி, ஆசையும், அவசரமுமாகப் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கப் பொறுக்காமல், சீலன் ரிசீவரை, அதன் தாங்கியில் வைத்தான்.

உறவு என்பதற்காக, எப்படிப்பட்டவர்களை எல்லாம் பொறுத்துப் போக வேண்டியிருக்கிறது?

கழுதையாமே என்று, காரண காரியமற்றுக் காமேசுவரி மேல், கோபம் வந்தது.

கூடவே, கழுதை போலத்தானே நடந்து கொள்கிறாள், என்று வேதனையாகவும் இருந்தது.

என்னிடமே என்ன பேச்சு பேசினாள் என்று எண்ணி எண்ணிக் கோபத்தை விடாமல், வளர்த்துக் கொண்டான்.

சிலது, தானாகத் திருந்தும், சிலதை, அடித்துத்தான் திருத்த நேரும். இது, அடித்துத் திருத்த வேண்டிய ரகம். எனவே, அடித்துத்தான் ஆக வேண்டும்.

பாட்டி பார்வதியின் நினைவு வரவும், அவன் மனதில், ஒரு சிறு தயக்கம் ஏற்பட்டது. ரொம்பவும், அன்பு வைத்திருக்கிறாரே என்று கொஞ்சம் கலங்கினான். ஆனால், இந்தப் பேரனும், காரணமற்று, எதையும் செய்கிறவன் அல்ல என்பதும், அவருக்குத் தெரியும்தானே?

அத்தோடு இதற்கும், பாட்டிக்கும், நல்லவேளையாக, எந்தத் தொடர்பும் கிடையாது.

ஆழ ஒரு மூச்சு எடுத்துக்கொண்டு, டெலிஃபோனை எடுத்து, எண்களைத் தட்டினான். சீலன். "ஹல்லோ, சார், நான்தான், சத்யசீலன் பேசுகிறேன். ஒரு சின்ன உதவி தேவைப்படுகிறது. மதுரையில்..." என்று தொடங்கினான்.

"கொஞ்சம் தருமசங்கடம்தான். ஆனால், நீங்கள், அவசியப்பட்டால், சம்பந்தப்பட்டவர்களிடம் என் பெயரையே சொல்லிவிடலாம். ஓ, தேவையில்லையா? மிகவும் நன்றி, சார்" என்று முடித்தவன், லேசாகப் புன்னகை செய்தான்.

'அவசியப்பட்டால், சொல்லு' என்றால், என்ன அர்த்தம்? 'சொல்லாதே' என்பதுதானே? அது தெரியாமலா, நண்பர், தொழில் நடத்துகிறார்? விஷயத்தை வெளியே விடமாட்டார்.

அத்தை காமேசுவரியிடம் சொல்லி, சுந்தரை, அந்த வாரக் கடைசிக்கு, வீட்டுக்கு வரச்செய்தான்.

அவன், அங்கே இருந்தால், சில விஷயங்களைப் பேசுவது கடினம்.

பிறகு, ஒன்றும் நடவாதது போல, சனிக்கிழமை காலையில் பாட்டி வீட்டை அடைந்தான்.

எதிர்ப்பட்ட சுமனாவிடம், தோள்பையிலிருந்து, 'சிந்தாமணி கேசட்'டை எடுத்துக் கொடுத்தான்.



"நன்றி" என்றாள் அவள், உணர்ச்சியற்ற குரலில்.

இயல்பான மலர்ச்சி, அவள் முகத்தில், நிச்சயமாக இல்லை. கண்களில், கலங்கிய சிவப்பு தெரிந்து விடாமல் இருப்பதற்காகவோ, என்னவோ, லேசான பவுடர் பூச்சு காணப்பட்டது.

பார்க்கும்போது, எதிர்பார்த்த எக்களிப்புக்குப் பதிலாக, சீலனுக்குமே, சிறிது, கஷ்டமாகத்தான், இருந்தது.

ஆனால், இது, அறுவைசிகிச்சை, வலிக்கத்தான் செய்யும். இனியாவது, நல்லபுத்தி வரட்டும்.

வருமா? ஒருவேளை, சுந்தரையே, அட்டையாகப் பிடித்து உறிய, முடிவு செய்துவிட்டால் என்ன செய்வது, என்றொரு கவலையும் சீலனுக்குத் தோன்றி மறைந்தது.

ஒன்று, சுந்தர் கையில், பணமாக, அவ்வளவு கிடையாது. அவன் வீட்டிலிருந்து, இப்போதைக்குப் பெரிய தொகையாக, ஒன்றும் எடுக்க முடியாது. எனவே, அவனை உறிஞ்சிப் பயனில்லை.

பாட்டி பார்வதி, ஏற்கனவே, அதிகச் சம்பளம் கொடுப்பவர். முன்பணமும், வாங்கியிருப்பதாக அன்று கண்ணனே சொல்லியிருக்கிறான். அதனால், அங்கேயும் கேட்க முடியாது.

எப்படியும், சீலனிடம்தான், வந்து நின்றாக வேண்டும். அவனது நிபந்தனையையும், ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும்.

சீலன், தெளிவாகத்தான் இருந்தான். ஆயினும், எப்போதும், மலர்ந்த முகத்துடன், வளைய வரும் சுமனாவின் வாடிய தோற்றம், அவனை, உறுத்தத்தான் செய்தது.

எப்போது வந்து, காலில் விழுவாள் என்று, அவன் காத்திருக்க, அந்தமாதிரி எந்த அறிகுறியும் காட்டாமல், சற்று இறுகிய முகம் தவிர, வேறு எந்தவிதமான மாறுபாடும் இல்லாத தோற்றத்தோடு, சுமனா வளைய வந்தாள்.

## 8

**அ**ன்று மதியத்துக்குமேல், கண்ணன், அங்கே வந்தபோதுதான், நிலைமை மாறியது.

கையில், பெரிய 'ஜம்போ' பையைத் தூக்கமுடியாமல் தூக்கிக் கொண்டு, வந்தவனின் முகத்தைப் பார்க்க, 'கேட்' திறந்த சத்தம் கேட்டு, மாடி ஜன்னல் வழியே, எட்டிப்பார்த்த சீலனுக்கே, மிகவும் கஷ்டமாக இருந்தது.

வாழ்வைப் பற்றிய நம்பிக்கையை அடியோடு, இழந்துவிட்ட வெற்று முகம்!

ரத்த சம்பந்தம் இல்லாத அவனுக்கே, இவ்வளவு கஷ்டமாக இருக்கும்போது, கூடப்பிறந்தவளுக்கு எப்படி இருக்கும்?

தாங்கமாட்டாமல், தன்னிடம் வந்து, சுமனா, கெஞ்சப் போவதை எதிர்பார்த்து, சீலன் அமர்ந்திருக்க, அவனுடைய அறைக்கதவைத் தட்டி விட்டு, அனுமதிக்குக் காத்திராமலே, உள்ளே வந்தது, கண்ணன்!

கண்ணனின் முகத்திலுள்ள, குற்றம் சாட்டும் பார்வையை, நேருக்கு நேர் சந்திப்பது, சில ஆண்டுகளாக, ஒரு நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பேற்று நடத்திவரும் சீலனுக்குக் கூடச் சற்று சிரமமாகத்தான் இருந்தது. இவனது மனசாட்சி இன்னமும் உயிரோடுதானே இருந்தது?

கண்ணனின் குற்றம் சாட்டும் பார்வை சீலனுக்கு இன்னொன்றையும், சொன்னது. தொழில்துறை நண்பர் அவனைக் காட்டிக் கொடுத்துவிட்டார்!



சமாளிப்பது பற்றி, சீலன் வேகமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே, கண்ணன் கேட்டான், "ஏன் சார், இப்படிச் செய்தீர்கள்?" என்று.

இவனுடைய தமக்கையைப் பற்றி, இவனிடம் எந்த அளவுக்குச் சொல்லுவது?

சீலன் யோசிக்கும்போதே, கண்ணன், மீண்டும், பேசத் தொடங்கிவிட்டான். "உங்களை, நான் நம்பினேன், சார். பார்வதி அம்மா போல, அவர்கள் குடும்பத்து மனிதர்கள் எல்லோருமே நல்லவர்கள் என்று அக்கா சொல்லுவாள். அது, உண்மை என்று நம்பி, உங்களிடம், எல்லாம் சொன்னேன், சார். ஆனால் அடுத்தவர் துன்பத்தைப் பார்த்து மகிழும் வக்கிர புத்திர உள்ளவர் என்று, நான், கனவிலும் கருதவில்லையே! கடவுளே, சொல்லுங்கள், சார், ஏன் இப்படிச் செய்தீர்கள்? செய்வதையும், செய்துவிட்டு வெளியே, சொல்லவேண்டாம் என்று வேறு சொன்னீர்களாமே..."

"அப்படி, நான் சொல்லியிருந்தால், உனக்கு எப்படித் தெரிய முடியும்?" என்று, கேட்டுப் பேச்சைத் திசைதிருப்ப முயன்றான், சீலன்.

அலட்சியமாய்த் தலையைச் சிலுப்பி, "ஏன் முடியாது? சொல்லாவிட்டால், அங்கேயே, தற்கொலை செய்துகொள்வேன் என்று, மிரட்டினேன், சொன்னார். ஆனால், இப்போது, அதுவா, முக்கியம்? நீங்கள், ஏ...ன், என் உபகாரச் சம்பளத்தை நிறுத்தினீர்கள்? அதற்குப் பதில் சொல்லுங்கள் சார்.முதலில் அதைச் சொல்லுங்கள்! என்னால் உங்களுக்கு எந்தக் கெடுதலாவது, நேர்ந்ததா? வாயைத் திறந்து சொல்லுங்களேன் சார், உங்களுக்கு நான் செய்த தீமைதான் என்ன? எனக்கு, இந்த அநியாயம் பண்ணுவதற்கு, நான் செய்த தப்புதான் என்ன சார்" என்று குமுறித் தீர்த்தான், கண்ணன்.

ஓரளவேனும். சொல்லாமல் தீராது என்று கண்டு. "தப்பு செய்தது. நீயல்ல" என்றான் சீலன். அமர்ந்த குரலில்.

வெறித்து நோக்கி "வேறு யார்? வேறு யார் செய்த தப்புக்கு எனக்கு இந்தக் கொடுமையான தண்டனை" என்று கேட்டான் அவன்.

"உன் அக்கா" என்றான் அவன் சுருக்கமாக.

"யார்? யார் என்று சொன்னீர்கள்? என் அக்காவா? சுமனாவையா சொன்னீர்கள்? என்ன கதை இது?" நம்பமுடியாமல் திகைத்தான் கண்ணன்.

"ஆமாம். உன் அக்கா சுமனாவேதான். உலக மக்களுக்காக, ஏசு நாதர், சிலுவை சுமந்தது போல, உன் அக்காவின் பிழைக்காக, நீயும். துன்புறும்படி ஆயிற்று. சாரி" என்றான். சீலன்.

"பெரிய 'சாரி'. அதைத் தூக்கித் தூர எறியுங்கள்" என்று ஆத்திரத்தோடு அதட்டினான். கண்ணன். "அக்காவாவது. தப்பு செய்வதாவது? சரியான உளறல். அப்படி அவள் என்ன. சார். தப்பு செய்தாள்? ஒரு தப்பு. ஒரே ஒரு தப்பு. சொல்லுங்களேன். பார்ப்போம்" என்று சவால்விட்டான். சுமனுடைய தம்பி.

முதல் சனிக்கிழமை. இரவு. சீலனுக்கு நினைவுவந்தது. இப்படித் துடிக்கிறானே. இந்தப் பையனிடம் அதை. எப்படிச் சொல்லுவது?

அசிங்கத்தை மீறிச் சொன்னாலும். நம்பமாட்டானே. அடிக்க வர மாட்டான் என்பது கூட நிச்சயம் இல்லை. திருப்பி அடித்தால். தாங்கமாட்டான் என்பதோடு. பாட்டி வீட்டில் வைத்து. வீண் ரசாபாசம்!



"நீ சின்னப்பையன். கண்ணா. இந்தப் பெரியவர்கள் சமாசாரம் எல்லாம். உனக்குத் தெரியாமல். இருப்பதே நல்லது" என்றான் அவன்.

ஏளனமாகச் சிரித்தான். அவன். "தெரியாமல் இருப்பது நல்லதா? யாருக்கு. எனக்கல்ல. சார். உங்களுக்கு தெரியவைப்பதற்கு ஒன்றுமே இல்லாதபோது. உங்களால் வேறு என்ன சொல்ல முடியும்? உங்களால். ஒன்றுமே சொல்ல முடியாது என்று. எனக்கு. நன்றாகத் தெரியும். சார். போன வாரமே. நான் கவனித்தேன். ஏனோ உங்களுக்கு. அவளைப் பிடிக்கவில்லை. இந்த உலகத்தில் எல்லோருக்கும் சுமனாவைப் பிடிக்கும். ஆனால் உங்களுக்குத்தான் அவளைக் கண்டாலே ஆகவில்லை. அக்காவிடம்கூட நான் இதுபற்றிச் சொன்னேன். ஆனால். அவள்தான். அப்படி ஒன்றும் கிடையாது என்று. அடித்துச் சொல்லி விட்டாள். அவளுக்குத் தெரியவில்லை. பாவம்! ஆனால். ஏன் சார். அப்படி? அவளிடம் என்ன கண்டு அவளை வெறுத்தீர்கள்? அவளைப் பற்றி. என்ன தெரியும் உங்களுக்கு? ஒருவரிடம். விருப்போ. வெறுப்போ கொள்ளு முன். அவர்களைப் பற்றி. அறிந்து கொள்ள வேண்டாமா? என் அக்கா எப்படிப்பட்டவள் தெரியுமா?" என்று கேட்டுவிட்டு. கண்ணன் தன் தமக்கை பற்றி. சீலனிடம் சொன்னான்.

சீலனின் முன் ஒரு புது உலகமே விரிந்தது. அங்கே. புதுமைப் பெண்ணாக. சுமனா தலைநிமிர்ந்து நின்றாள்.

சுமனா. கண்ணனின் கடந்தகாலம். ஏற்கனவே ஒருநாள். மிகவும் ரத்தினச்சுருக்கமாக. சுமனா சொன்னதிலிருந்து. சீலன் ஊகித்து அறிந்தது தான். அறியாதது. தன்னலமற்று. சுமனா எடுத்த முடிவுகள்! கணமும் அயராது அவன் உழைத்த உழைப்பு!

நீக்குப் போக்கே இல்லாமல், நேர்மைக்கு, அவள் கொடுத்த முக்கியத்துவம்!

மனமுடைந்து போன பெற்றோரைத் தளரவிடாமல் தேற்றியது, வீட்டுக்கும், மருத்துவமனைக்கும், தந்தையின் அலுவலகத்துக்கும், கடைசியாக, வக்கீலிடமுமாக அலைந்தது, எல்லாம் குறைந்தது, பல நல்ல பெண்கள் செய்யக்கூடியதாகவே இருக்கலாம்.

ஆனால், சுமனா, அடுத்துத் தியாகம் செய்தது, அவளது எதிர்கால வளத்தை. அதாவது, அவளது எதிர்காலத்தில் பல்வேறு வளங்களை ஈட்டித் தரக்கூடியது என்று, குடும்பம் முழுவதும் சேர்ந்து தீர்மானித்து, அவள் தொடங்கியிருந்த, அவளது படிப்பை. கண்ணன் படித்ததும், அதுவே தான்.

அக்கா, தம்பி இருவருமே, ஒரே 'கோர்சி'ல்தான், சேர்ந்திருந்தார்கள். கூடவே, நிதிபற்றிய, சட்டப்படிப்பு வேறு. சுமனா, முதுநிலைப் பட்டப்படிப்பை முடித்துவிட்டு சேர்ந்திருந்தாள். கண்ணன், பி.காம். பட்டதாரி ஆனதுமே, தந்தை, அதில்சேரச் சொல்லிவிட்டார்.

தகப்பனார், முடிந்த அளவு குணமாகி, வீடு வந்தபோது, இருவரில், ஒருவர்கூடப் படிப்பைத் தொடர முடியாத நிலைமைதான். குடும்பத்தை நடத்தவே, இன்னும் கொஞ்சம் பணம் தேவைப்பட்டது.

அப்பாவுக்கு, வந்த பணத்தில், வைத்தியச் செலவு போக, மீந்ததைக் கட்டாயமாக, 'டெப்பாசிட்' செய்திருந்தாள், அக்கா. வீட்டுச் செலவுக்குக் கொஞ்சமேனும் நிச்சயமான, வருமானம், இருக்கவேண்டும் என்பதற்காக.



"இருவருமே, கிடைக்கிற வேலையில் சேர்ந்து, இயன்றவரை, சம்பாதிக்கலாம் என்று நான் சொன்னேன். கடைசிவரை, இதே, இழுபறி நிலையிலேயே, வாழ்ந்து முடிப்பதா என்பது, அக்காவுக்கு.

"என்னைப் படிக்கச் சொன்னாள். அதற்குப் பணம் வேண்டுமே. படிப்புக்கு, உபகாரச் சம்பளம் கிடைத்தது. ஆனால் மற்ற செலவுக்கு? படிப்பு சம்பந்தமாகவே, வேறு செலவுகள், அப்பாவுக்குத் தொடரும் வைத்தியம், வீட்டுவாடகை, சாப்பாட்டுக்கு...

"நம்பிக்கையற்றுக் குழம்பிக் கொண்டிருந்தபோதுதான், உங்கள் பாட்டி வீட்டு வேலை பற்றி அவளுக்குத் தெரிய வந்திருக்கிறது."

வேலைபற்றித் தெரிந்ததில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. ஆனால், அதற்கான பயிற்சி எதுவும் இல்லாதவளுக்குப் பாட்டி, வேலை கொடுத்ததுதான் சீலனுக்கு, வியப்பாயிருந்தது. ஏனென்றால், இரக்கம் உடையவரே என்றபோதும், பார்வதி, பணத்தில், கணக்காய்த்தான் இருப்பார். கொடுக்கிற காசுக்கு உரிய மதிப்பும், அவருக்குக் கிடைத்தே ஆக வேண்டும்!

அதுபற்றியும் கண்ணன் விளக்கினான்.

நேர போய், பார்வதி அம்மாளையே சந்தித்திருக்கிறாள். தன் குடும்பத்தின் தேவை, அதற்காக, அவள் எந்த அளவுக்கு உழைக்கத் தயார், என்பதை எல்லாம், விளக்கிச் சொல்லி, வேலை கேட்டிருக்கிறாள்.

முதல் ஒரு மாதம், பயிற்சிக்காலம் மாதிரிதான், என்று சொல்லித்தான் பார்வதி வேலை கொடுத்திருக்கிறார். ஆனால், பத்துநாட்களிலேயே, வேலையை உறுதி செய்துவிட்டார்..

சற்றுநேரம் பேசாமல் தரையைப் பார்த்து அமர்ந்திருந்து விட்டு விழி உயர்த்தி, சீலனைப் பார்த்த கண்ணனின் கண்களில், மரணவலி தெரிந்தது. "சார், டாக்டர்கள், நர்சுகள் முதலியவர்களின் வேலையையோ, தொழிலையோ, நான் குறைவாக, ஒருநாளும், நினைத்ததில்லை. ஆனால், சில, ஒரு மாதிரி விஷயங்களைச் சகித்துக்கொள்ள, அவர்கள் பயின்றவர்கள். ஆனால், என் அக்கா, அப்படியா? வண்ணத்துப்பூச்சி மாதிரி ஓர் அழகான... அப்போதுதான் கல்லூரிப் படைப்பை முடித்தவள்! அவள் உதவி என்று, ஓரிரு நாட்கள், செய்வது வேறு. உங்கள் பாட்டிக்குப் பல் துலக்கி, குளிப்பாட்டி 'பெட்பான்' தூக்கி...இதெல்லாம், சுமனா செய்வது, அவர்கள் கொடுக்கும், மிகவும், அதிகமான சம்பளத்துக்காகத்தானே? என் படிப்பு தடைப்படக் கூடாது என்பதற்காக, அக்கா, இந்த வேலை செய்கிறாள் என்று நினைக்கும்போது முதலிலெல்லாம் என் மனம் எப்படித் துடிக்கும் தெரியுமா?

"பாட்டி பிரியமாய் இருப்பதால், இப்போது பரவாயில்லாமல் இருக்கிறதே தவிர, மற்றபடி, மனதுக்கு வேதனைதானே?

"நான், விழுந்துவிழுந்து படிக்கிறேனே, ஏன் என்று நினைத்தீர்கள், சீலன் சார்? சுமனாவை, இதிலிருந்து மீட்டு, 'ஓகோ' என்று வைத்துக் கொள்ளத்தானே?

"உங்களுக்குத் தெரியுமா, அக்காவுக்கும், இதே உபகாரச் சம்பளம் கிடைத்திருந்தது. ஆனால், ஒருவர்தான்; அதுவும்,



நான்தான் படிக்க வேண்டும் என்று, அவள், அதை விட்டுவிட்டாள். இந்த ஒன்றரை ஆண்டு காலமாக, அக்கா, தனக்கென்று, ஒரு துணிகூட வாங்கியது இல்லை, தெரியுமா?

"ஒவ்வொரு சனிக்கிழமையும், மதியம் வந்து, மறுநாள் போகிறேனே, ஏன் தெரி..."

அனாவசியக் குறுக்கீடுகளின்றி, கண்ணனைப் பேசவிட்டுவிட்டுத் தான் பேசாமலே இருந்து, விஷயங்களைக் கிரகித்துக் கொண்டிருந்த, சீலன், முதல் தடவையாகக் கேள்வி கேட்டான் "அதென்ன, சனிக்கிழமை மதியம் வந்து, மறுநாள் போவது?" என்று உள்ளம் தடதடப்பதைக் காட்டிக் கொள்ளாமல், விசாரித்தான்.

"தெரியாத மாதிரிக் கேட்கிறீர்களே? ஒவ்வொரு சனியன்றும், மதியம் நான் வந்து, இங்கே இருந்துகொண்டு, சுமனாவை, எங்கள் வீட்டுக்கு, அனுப்புவேன், அவள், அந்த அரைநாளில், எங்கள் வீட்டுக்கு வேண்டிய எல்லாவற்றையும், பார்த்து வைத்துவிட்டு, அம்மாவிடம் ஆறுதலாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, ஞாயிறு, அதிகாலையிலேயே திரும்பி வந்துவிடுவாள்...பாட்டிக்குக் காலை வேலை பார்க்க வேண்டும் இல்லையா?"

ஆழ்ந்த தூக்கத்திலிருந்து, திடுமென விழித்தாற்போல, சீலன் தடுமாறினான். அடிப்படையே இல்லாமல், சீட்டுக்கட்டு மாளிகை போல மேலேமேலே அடுக்காய்க் கட்டிக்கொண்டே போய்விட்டானே! கடைசியில் அன்று அந்த நேரத்தில் சுந்தர் அந்த அறைக்குள் சென்றபோது சுமனா, அந்த வீட்டிலேயே இல்லையாமே.

"ஒவ்வொரு சனிக்கிழமையுமா?" என்றான் தடுமாற்றத்தை மறைக்கப் பெருமுயற்சி செய்து.

"ஆமாம்" என்றான், மற்றவன். "போன வாரமும், இன்றும் மட்டும், அப்படி, இல்லை. நீங்கள் கொஞ்சம் தப்புத் தேடுகிற ரகம். இங்கேயே இருந்து கவனிக்க வேண்டும் என்று, வியாழக்கிழமையே, வீடு போய்த் திரும்பி விட்டாள்" என்று சீலன் கேட்ட விவரம் கூறிவிட்டுக் கண்ணன் தன் விஷயத்துக்குத் திரும்பினான்.

"நானும், இங்கே தண்டச்சோறு சாப்பிடுவது, இல்லை சார். உங்கள் அத்தைமகன், சுந்தர், அவர், எவ்வளவு புத்திசாலி என்று உங்களுக்கே தெரியும். என்னோடு, ஒரே 'கோர்ஸ்' படிக்கிறார். அவர், கிடைக்கிற நேரம், அவருக்குப் பாடம், கற்றுக்கொடுக்கிறேன். மீதி நேரத்தில், அக்கா அறையில் இருக்கும் அந்தப் பழைய 'கம்ப்யூட்ட'ரில், அந்தந்த வாரத்தில் படித்த பாடத்தை 'லோடு' பண்ணி வைக்கிறேன். சும்மா இருக்கிற வேளைகளில், சுந்தர் சார் கற்றுக்கொள்ளுவதற்காகத்தான். அதைச் சுமனாவும் படிக்க வேண்டும், என்பது என் ஆசை. என்றைக்காவது, இந்த நிலை மாறி, அவள் தேர்வுக்குப் போனால், இது பயன்படக்கூடுமே. ஆனால்... இப்போதைக்கு, அக்கா படித்து, படித்துதான் உங்கள் சுந்தருக்குச் சொல்லிக் கொடுக்கிறாளாம். அதெல்லாம், உங்கள் சம்பளத்தில் சேர்த்தியா, சார்? என் அக்கா, அதிகப்படியாக, வேலை செய்வதுதானே?"

அதிகப்படி வேலையா? அல்லது, இந்த இழிநிலை மாற, ஒரு புளியங்கொம்பு, தேடும் முயற்சியா, என்று, மீண்டும் முருங்கமரம் ஏறியது, சீலனின் மன வேதாளம்.



ஆயினும், சுமனா ஒழுக்கத்தவறு செய்யவில்லை என்பதே, அவனுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

சுமனாவுக்குச் சாதகமாக, இன்னொன்றும் இருந்தது. சுந்தர், தன் காதலைத் தெரிவிக்கவே, தன்னுடைய தாயார், மாமன் மகனிடம்தான் உதவி கேட்டுக் கொண்டிருந்தான்.

இத்தனையிலும், ஒன்று ஒரு முக்கியமான விஷயம், இன்னமும் உதைத்தது.

அன்று, முதல்நாள், திருப்பரங்குன்றத்திலிருந்து திரும்பி வரும் போது அவள் பேசிய பண விவகாரம்! நாலு லட்சம் போதாது என்று, அவளே சொன்னாளே. மேலும் அத்தையின் சொத்தைக் கணக்கிடப் போவதாகச் சொன்னதும் அவளேதானே? இதற்கு வேறு என்ன விளக்கம் இருக்கமுடியும்?

அவளிடமே கேட்க வேண்டியதுதான். இதற்குமேல் கண்ணாமூச்சி விளையாட்டு கூடாது.

சீலன் சிந்தித்துக் கொண்டிருக்கையில் கண்ணன் மீண்டும் பேசினான். "எவ்வளவு துன்பம், சார் என் அக்காவுக்கு? இத்தனைக்கு நடுவிலும், அவள் முகம், ஒருநாள், வாடி இருந்திருக்குமா? ஒருநிமிஷம்? ஒரு வினாடி? அப்பாவுக்கு ஆறுதல் கூறி, அம்மாவைத் தேற்றி, எனக்குத் தென்பூட்டி, எங்களுக்கெல்லாம் நம்பிக்கையில் ஊற்றாக இருந்தவளை, இருப்பவளைக் கலங்க வைத்துவிட்டீர்களே, சார்? அவளையே, அழவைத்துவிட்டீர்களே!" என்று, கோபத்தை மீறிய துக்கத்தில் அரற்றிய போது, கண்ணனின் கண்களிலும் நீர் துளிர்த்தது.

அழுதாளா? சுமனா அழுதாளா?

கணத்தில் முடிவெடுத்து, "அந்த உபகாரச் சம்பள ரத்து, ஏதோ ஒரே குழப்பத்தில், நடந்துவிட்டது என்று நினைக்கிறேன். அதைத் திருத்த நான், சென்னைக்குப் போனதும், ஏற்பாடு...முடிந்த முயற்சி செய்கிறேன்...முயற்சி வெற்றியானதும், நானே தெரிவிக்கிறேன்" என்றான் சீலன்.

## 9

ஒருவாறு, மீண்டுவிட்டப் போகிறோம் என்று எண்ணிய போது, விழுந்த அடி, மிகவும் பலமாகப் பட்டுவிட்டதோ, என்னவோ, நம்பிக்கையின்றியே, கண்ணன் எழுந்து சென்றான்.

'ரத்து' செய்தவனின், தயக்கத்துடன் கூடிய 'முயற்சி'யை அவன் நம்பவில்லை என்பது அவனது நடையிலேயே, நன்றாகத் தெரிந்தது.

அதனாலேயே, சுமனாவுக்கு வீணான நம்பிக்கையை ஊட்ட மனம் இல்லாததாலேயே, கண்ணன், வீட்டினுள் சென்று, அவளை, மீண்டும் சந்திக்காமல், கண்ணன், வீட்டிலிருந்து வெளியேறுவதை சீலன் கவனித்தான்.

ஆனால், கண்ணன் வீட்டினுள் வரும்போது, அப்படி நேராக சீலனிடம் வரவில்லை. உள்ளே சென்று, தமக்கையிடம் பேசி, சீலன் வந்திருப்பதைத் தெரிந்துகொண்டு, அவனைக் காண வந்தான்.

சுமனாவிடம் பேசியபோது, உதவிப்பணத்தை நிறுத்தியது, சீலனே என்பதை, அவளிடம், தெரிவித்தும் இருப்பான்.

அழுதாள் என்றானே!

சீலன் சட்டென எழுந்து சுமனாவைத் தேடிச் சென்றான்.



பார்வதியின் வேலை முடிந்துவிட்டதோ, அல்லது அவர் ஒய்வெடுத்துக் கொண்டு இருந்தாரோ, சுமனா, தனியே, அவள் அறையில் தான் இருந்தாள்.

'கம்ப்யூட்ட'ரின், முன், உட்கார்ந்திருந்தபோதும், அவளது பார்வையோ, கவனமோ அதில் இல்லை என்பது, நன்றாகவே தெரிந்தது.

'கம்ப்யூட்டர்' திரையில் 'பவர் சேவர்' ஏதோ, ஓடிக்கொண்டு இருக்க, வெற்றுப் பார்வையாகக் கண்ணில் நீர்த்திரையுடன், அதை வெறித்தபடி, அவள் அமர்ந்திருந்த தோற்றம், சீலன் மனதில் ஆழப்பதிந்தது.

அவளை அள்ளி எடுத்து, அணைத்து, அவளுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும் என்று எழுந்த எண்ணத்தின் வேகத்தில், சீலன் அதிர்ந்துபோய் நின்றான்.

அணைத்து ஆறுதல் அளிப்பதா?

என்ன பைத்தியக்காரத்தனம்?

இவள் யாரோ ஒருத்தி. பாட்டி வீட்டில் பணிபுரிகிறவள். அதை விடவும், சுந்தரின் மனம் கவர்ந்த காதலி!

ஆனால், காதலி என்று எப்படிச் சொல்ல முடியும்? அவன் ஆசைப்பட்டான், உண்மைதான். ஆனால், அவளும் ஆசைப்பட்டால் தானே, 'காதலி' என்று சொல்ல முடியும்?

என்னவோ, இது விஷயம் தெரிந்துகொள்வதுதான், இந்த வினாடியில், உலகத்திலேயே மகா முக்கியமான காரியம் போலத் தோன்றிவிட, தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "சுமனா" என்று அழைத்தான்.

தூக்கிவாரிப் போட்டாற் போலச் சட்டென எழுந்து நின்றாள், அவள் கைகள், வேகமாக விழிநீரைத் துடைத்தெறிந்தன. ஆத்திரத்துடன் நிமிர்ந்து, "எனக்கும் உங்களுக்கும்தானே, தகராறு? முதுகில் குத்துகிற கோழை மாதிரி, கண்ணன் வாழ்வை நாசம் பண்ணிவிட்டீர்களே" என்று குமுறினாள்.

கிட்டிப்பிடியில்சுமனாவை நிறுத்தி வைத்துப் பணிய வைக்க நினைத்ததெல்லாம், மடத்தனமாய்த் தோன்றி விட, "இப்படி என்று தெரியாது, சுமனா" என்றான், அவன், தணிந்த குரலில்.

"இப்படி என்று தெரியாதா? வேறு எப்படி என்று தெரியும், உங்களுக்கு?" என்று சீறினாள் சுமனா. "உங்களுக்கு என்னதான் தெரியும்? சும்மா யாராவது, என்னவாவது, சொல்லுவார்கள். அதைக் கேட்டுக் கொண்டு வந்து, இப்படி இப்படி என்று, எழுதி ஒட்டி வைத்துவிடுவது. அதை மாற்றுவதே கிடையாது. என்ன, ஏது, என்று என்றைக்காவது, யோசித்தீர்களா? யாரிடமாவது கேட்டீர்களா?" என்று, சரமாரியாகப் பொரிந்து கொட்டினாள்.

அவள் ஒரேயடியாகத் தாக்கவும், "ஏன், உன்னிடம் கேட்கவில்லையா? நாலு லட்சம் போதாது, உன் அத்தையின் சொத்துக் கணக்கு எடுக்கப் போவதாக நீ, சொல்லவில்லையா?" என்று, பதிலுக்குக் கேட்டான், சீலன்.

"ஆமாம், கேட்டார்கள். தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருக்கும் பெண்ணிடம் வந்து, "அம்மா, தாயே, என் அத்தைமகனை விட்டுவிடு' என்று, கிறுக்குத்தனமாக, ஒருவர் கேட்டால், வாயை மூடிக்கொண்டு, சும்மாவா, இருப்பார்கள்?



அல்லது, 'அப்படி ஒன்றுமே கிடையாது சார்' என்று, வேலை மெனக்கெட்டு, விளக்கம்தான், சொல்லிக் கொண்டு இருப்பார்களா?" என்று ஏளனமாகக் கேட்டாள், சுமனா.

பளீரென்று முகம் மலர, "அப்படி என்றால், அப்படி ஒன்றும் கிடையவே கிடையாது, அப்படித்தானே?" என்று உவகையுடன் சீலன் வினவினான்.

"என்னை ஏன் கேட்கிறீர்கள்? நானோ அதிகத்துக்கு ஆசைப்படுகிறவள். அப்புறம், என்னவோ, ஒரு கொம்பு சொன்னீர்களே, அதென்ன, ம்ம், புளியங்கொம்பு, அது தேடுகிறவள். என்னிடம் போய், இதையெல்லாம், கேட்பார்களா? கேட்டால்தான், நான் என்ன, உண்மையையா, சொல்லிவிடப் போகிறேன்? ஏன், உங்கள் அத்தை மகன், திருவாளர் சுந்தர் அவர், சென்னையில்தானே இருக்கிறாராம், நேரே போய், அவரிடமே, விவரத்தைக் கேட்பது ஒருவேளை, என் சகவாசத்தால், சுந்தரும், பொய் சொல்லத் தொடங்கியிருந்தால்... அய்யோபாவம், நீங்கள் என்னதான் செய்யப் போகிறீர்களோ, எனக்குத் தெரியவில்லை சாமி."

கோபமும், குத்தலுமாகவே, சுமனா பேசப் பேச, சீலனுக்குக் குதூகலமாகவே இருந்தது.

அநியாயமாய்க் குற்றம் சாட்டினால், ஆத்திரம் உண்டாவது இயற்கைதானே?

அப்போதைக்கு, சுமனாவின் கோபம், அடங்குவதாக இல்லை என்று காணவும், சீலனே, ஒதுங்கிப் போனான்.

எவ்வளவு நாள் இந்தக் கோபம் நிலைக்கும்? சென்னைக்குப் போய், கண்ணனின் உபகாரச் சம்பளம் மீண்டும்

கிடைக்க ஏற்பாடு செய்துவிட்டால், இந்தச் சீற்றமெல்லாம், பஞ்சாய்ப் பறந்துவிடாதா?

ஒரேஒரு சிறு சிக்கல், சுந்தர், ஏதாவது சொல்லக்கூடும். அத்தையிடம் சொல்லி, அவனுக்கு ஒரு திருமணத்தை முடித்துவிட்டால், எல்லாம் சரியாகிவிடும்.

பல்வேறு இனிய திட்டங்களோடு, மறுநாள், காலையிலேயே சீலன், சென்னைக்குக் கிளம்பி விட்டான். அவனுக்கு சுந்தர், மதுரைக்குக் கிளம்புமுன் அவனைப் பிடிக்க வேண்டியிருந்தது.

ஏதோ யோசனையாக இருந்த பார்வதியும், அவனைத் தங்கிப் போகச் சொல்லவில்லை.

சென்னை வந்து சேர்ந்த சீலன், வந்ததுமே சுந்தரை வரச்சொல்லி, அவனோடு, பேசினான்.

சுந்தர் கேட்ட முதல் கேள்வி, "நளினி வந்து சேர்ந்து விட்டாளா?" என்பது.

பிறகுதான், பாட்டி வீட்டில் இருந்த நேரம் முழுவதும், நளினி, கண்ணிலேயே படவில்லை என்பது நினைவுவர, "அவள் எங்கே போனாள், சுந்தர்? அவளுக்குத்தான் யாருமே கிடையாதே" என்று, சீலன் விசாரித்தான்.

"அதுதான், அண்ணா, எனக்கும் கவலையாக இருக்கிறது" என்றான் இளையவன். "இத்தனை நாள் நளினி இருக்கிறாளா, இல்லையா, என்ற கவலையே யாருக்கும் கிடையாது. கவலையை விடு அண்ணா. இவள் இருக்கிறாள் என்ற எண்ணமே கூடாக் கிடையாது. இன்றைக்கு, பெரியப்பா, சித்தப்பா, அத்தை, மாமா என்று வந்து நிற்கிறார்கள். இந்தப் பாட்டியும், நளினியை, அவர்களோடு அனுப்பி வைக்கிறார்கள். எனக்குக் கொஞ்சமும்



பிடிக்கவே இல்லை, அண்ணா. அவர்கள், என்ன மாதிரிப் பட்டவர்களோ, என்னமோ? சொத்துக்காக, நளினியை, என்னமாவது, பண்ணிவிட்டால், நாம் என்னண்ணா, செய்வது? இங்கே, காஞ்சீபுரம் பக்கம்தான் என்று, முகவரி கொடுத்திருந்தார்கள். இடையில், அவளையும் போய்ப் பார்க்கலாம் என்றுதான் அம்மா கூப்பிட்டதும், நான் வந்ததே. அங்கே போய்ப் பார்த்தால் அவள், ஆளையே காணோம். எங்கோ, கோயிலுக்குப் போயிருக்கிறாளாம். எப்போது வருவாள் என்று, வீட்டில் இருந்த கிழடுகளுக்குத் தெரியாதாம். என்னவோ, எனக்கு ஒன்றும் சரியாகவே படவில்லை" என்று ஒரு மூச்சு புலம்பிக் கவலைப்பட்டான், அவன்.

எங்கேயோ, வெளிச்சம் தெரிந்தாற்போல இருந்தது சீலனுக்கு.

"ஆமாமடா. நாள் தவறாமல் பத்திரிகையில் என்னென்னவோ படிக்கிறோமே அப்படி அவர்கள் நளினியைக் கொண்டுபோய், எங்காவது விற்றுவிட்டால்..." என்று வாக்கியத்தை, சீலன் முடிக்குமுன், "அய்யய்யோ!" என்று, சுந்தர் பதறி, எழுந்துவிட்டான்.

"இப்போது, என்னண்ணா, செய்வது? நாம், விசாரித்துப் போய்ச் சேருவதற்குள், அங்கே, நளினிக்கு என்ன ஆகிவிடுமோ? இப்போதே என்ன ஆகிவிட்டதோ? இந்தப் பாட்டியிடம் நான் சொன்னேன், சொல்லச்சொல்ல கசாப்புக் கடைக்காரனோடு ஆட்டை அனுப்புவது போல, அவளை அனுப்பிவைத்தார்கள். வயதாகி விட்டாலே இப்படித் தான். ஒருவன் சொல்லுகிறானே, கேட்போம் என்பதே கிடையாது. யோசியாமல் கண்டவன் கூப்பிட்டான் என்று..."

"ஏய்ஏய் நிறுத்துடா, மடையா. ஒரு கிண்டலுக்குச் சொன்னால், அதைக்கண்டுபிடிக்கத் தெரியாமல் பாட்டியிடம் பாய்கிறாயே" என்று அத்தைமகனை அடக்கினான் சீலன். பாட்டியைப் பற்றி இன்னுமா உனக்குத் தெரியவில்லை? நம்மைவிட, அவர்களுக்கு அறிவுக்கூர்மை, மிகவும் அதிகம். வந்தவர்களைப் பற்றி, நன்றாக விசாரித்துத் தெரிந்து கொள்ளாமல், பாட்டி, நளினியை, அவர்களோடு, அனுப்பியிருக்கவே மாட்டார்கள், சுந்தர், பாட்டி, ஒன்றும், லேசுப்பட்டவர்கள் இல்லை என்று அவர்களுக்கும் தெரியாமல், இராது. அதனால் நளினியைப் பற்றிக் கவலைப்படுவதை விடு" என்று தம்பிக்குப் புத்தி சொன்னான்.

நளினிக்குப் பயப்படும்படியாக ஒன்றும் இராது என்று, அரைமனதாய், அவனை நம்பவைத்தபின் "சுமனாவைப் பற்றி, நீ, எதுவுமே கேட்க வில்லையேடா?" என்று தொடங்கினான்.

ஆச்சரியமாய் நோக்கி, "சுமனாவுக்கு என்ன, அண்ணா?" என்று கேட்டான் அடுத்தவன்.

உள்ளே துள்ளியதை வெளியே காட்டாமல் மறைத்து, "என்ன சுந்தர், இப்படிக் கேட்கிறாய்? அவளிடம், ஏதேதோ கேட்கச் சொன்னாயே, நினைவில்லையா?" என்று வினவினான், சீலன்.

சுந்தர், மெய்யாகவே, மறந்துதான் போனான் போலும். "ஓ, அதுவா, அண்ணா? இந்த நளினி பிரச்சினையில், அந்த விஷயம் நான் மறந்தே போனேன்" என்று, உண்மையை உரைத்து, மாமன் மகனை ஒருகணம் குளிர வைத்துவிட்டு, "சுமனாவிடம் கேட்டாயா, அவள், என்னண்ணா சொன்னாள்? அவள், என்மேல், கோபப்பட்டு விடவில்லையே?", என்று கவலைப்பட்டு, மற்றவனைக் குழப்பவும் செய்தான்.



"அது..." என்று சற்றுத் தயங்கிவிட்டு, "அவளிடம், நான், நேரடியாகக் கேட்கவில்லை, சுந்தர். ஆனால், அவளுக்கு அப்படியான அபிப்பிராயம் எதுவும், இருக்கிற மாதிரியே தெரியவில்லையம்மா" என்று, இதமான குரலில் இயம்பினான் சீலன்.

சோகமாக, "உச்சு"க் கொட்டினான், இளையவன். "இது, நான், எதிர்பார்த்ததுதான். அவளை மாதிரி அழகு, குணம் அறிவு, எல்லாமே உடைய ஒரு பெண், இருந்திருந்து, எனக்கு, எப்படிக் கிடைப்பாள், சொல்லு? ஓர் அதிருஷ்டம் அடிக்காதா என்று பார்த்தேன்? இல்லை என்று ஆகிவிட்டது", என்று வருந்தினான். "ஆனாலும், தேவதை மாதிரி, எப்பேர்ப்பட்ட பெண் இல்லையாண்ணா?"

உள்ளூர, முழுமனதோடு, அதை ஒத்துக்கொண்டபோதும், சீலன், அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. "யார்யாருக்கு எங்கெங்கே முடிச்சுப் போட்டு வைத்திருக்கிறதோ, அதுதானே, நடக்கும்?" என்று வேதாந்தம் பேசி, சுந்தரைத் தேற்றிவிட்டுக் கிளம்பினான்.

அடுத்து, கண்ணனின் படிப்புக்கான உதவித்தொகையைக் கையாளும் நிறுவனத்துடைய தலைவரைத் தேடினான்.

ஆனால் சீலனின் அவசரம் தெரியாமல், அவர் எங்கோ, வெளியூர் சென்றிருந்தார்.

இரண்டு நாட்கள் கழித்து, அவர் திரும்பி வந்தபின், சற்று அசடு வழிந்தபடி, சீலன், தன் கோரிக்கையை, அவர்முன், வைத்தான்.

"என்ன சார், நேற்றுக் கொடுத்து, இன்றுமறுத்து, மீண்டும், நாளை தருகிறேன், என்றால், ஊரில், என்னைப்பற்றி, என்ன சார்

சொல்லுவார்கள்? ஒரு நிலையில்லாத கிறுக்கன் என்று, எனக்குப் பட்டம் கட்டி விட மாட்டார்களா?" என்று அவர், அவனை வாரியபோது, சகித்துக் கொண்டு, பல்லைக் காட்டியதோடு, அவருக்குத் தொழில் வகையில், சில சலுகைகளையும் கொடுத்துச் சம்மதிக்க வைத்தான்.

இன்றைய மனநிலையில், சுமனாவுடைய தம்பிக்குத் தேவையான பணத்தை, அவனே கொடுக்கத் தயார்தான். ஆனால், கண்ணனின் படிப்பு, ஒரு பயிற்சியுடன் கூடியது. பயிற்சி பெறும் மாணவர்களில், சிறந்தவர்களுக்கு, உபகாரச்சம்பளம் கொடுத்து, வளர்ந்து வந்த அந்த நிறுவனம், சீலனுடைய, அந்த நண்பருடையது. பிறரின் உதவிகளை, நிறுவனம் ஏற்றுக்கொள்வதில்லை.

ஒருவாறு, கண்ணனுக்கு, அவன் பெற்றுக்கொண்டிருந்த உதவித் தொகையைத் தொடர்ந்து, கொடுக்க, நண்பர் ஒத்துக்கொண்டதும், அந்த நல்லசேதியை, சுமனாவிடம், சொல்ல விரும்பி, சீலன், மதுரைக்கு டெலி ஃபோன் செய்தபோதுதான், அவனுக்கு நினைவு தெரிந்தநாளிலிருந்து, அவன், அனுபவித்தறியாத மாபெரும் அதிர்ச்சி, அவனைத் தாக்கி நிலை குலையச் செய்தது.

'உங்கள் பெயரென்ன, சீலனா, சூரனா?' நான் என்னவோ, சாதாரணச் சீலாமீன் என்று நினைத்தால், நீங்கள், பயங்கரமான, மகர மீனாக இருக்கிறீர்களே?'

கண்ணன் விஷயமான நல்ல சேதியைக் கேட்டதும், மகிழ்ச்சி தாங்காமல், சுமனா, இப்படி எல்லாம் கேலி பேசுவாள் என்று, ஆசையோடு சீலன், டெலிஃபோன் செய்தால், ஃபோனை அவள் எடுக்கவே, இல்லை.



பேசியது, இளங்கோ, எடுபிடிப்பையன்.

"சுமனாவைக் கூப்பிடு" என்ற எரிச்சலான கட்டளைக்கு "அவங்க வெளியே போயிருக்கிறார்களே" என்றான், அவன்.

அத்தோடு, அவன் நிறுத்தியிருந்தால், எவ்வளவோ, நன்றாக இருந்திருக்கும். ஒரு பெரிய முக்கியமான சேதியை, முதலாளியம்மா பேரனான வருங்கால எஜமானிடம், சொல்லக்கூடிய வாய்ப்பை, விட்டுவிட மனமின்றி, "அவங்க, கலியாணத்துக்கு எல்லோருக்கும், புதுத்துணி வாங்கப் போயிருக்காங்கய்யா" என்று சேர்த்துச் சொன்னான்.

உள்ளூர, ஏதோ உறுத்த, "கல்யாணமா? யாருக்கடா? எப்போது" என்று, சீலன் விசாரித்தான்.

தன் முக்கியத்துவத்தை, இளங்கோ, விடுவானா? விலாவாரியாக, விளக்கத் தொடங்கினான். "அய்யா, கலியாணம் நாளைக்குங்க. திடீர்னு, ரெண்டு நாளைக்குள்ளாரக் கலியாணமின்னு வச்சிட்டாங்களா? துணி மணி, தைக்க நேரமே இல்லய்யா. அதான், அல்லாருக்கும், ரெடிமேடுலேயே, எடுக்காங்கய்யா. மத்தது அல்லாம் கெடச்சிடும். அம்மாங்களுக்குப் பட்டுச்சட்டை, கிடைக்கறதுதாங்க ரொம்ப கஸ்டமாங்க. எங்களு..."

"யாருக்கடா, கல்யாணம்? அதை முதலில் சொல்லித்தொலை" என்று, சீலன், கர்ஜித்ததில் இளங்கோ, கை, கால் நடுங்கிப் போனான்.

"அ...அதுய்யா, கலியாணம், ந...நம்ம சு.சு.சுந்தரய்யாவுக்குத் தான்யா"

"சுந்தருக்கும், வேறு யாருக்குமடா? முட்டாள்!"

பையன் மேலும், நடுநடுங்கிப் போனான். "அ—அ—அது சுந்தரை யாவுக்கும் அ...அந்த அந்தம்மாவுக்கும்தாங்கய்யா" என்று, ஒருவாறு உளறிக்கொட்டி முடித்தான்.

"எந்த அம்மாடா? சொல்வதை, ஒழுங்காகச் சொல்லித் தொலையேண்டா, கழுதை!"

பொதுவாக, இதுபோன்ற கழுதை, நாய் என்கிற மாதிரி வார்த்தைகளைப் பயன்படுத்தி, வேலையாட்களைத் திட்டுவது, பார்வதிக்குப் பிடிக்காது. அவருக்குப் பிடிக்காததை, அவரது வீட்டில் யாரும் செய்வதும் கிடையாது. அவர், அந்த இடத்தில் இருக்கிறார், இல்லை, என்கிற பேதமின்றி, எல்லாருமே, இந்த எழுதாத சட்டத்தை, ஒழுங்காகக் கடைப்பிடித்து வந்ததால், அந்த வீட்டுப் பணியாட்களுக்கு இந்த வார்த்தைகளே, கிட்டத்தட்ட மறந்தே போய்விட்டிருந்தன, எனலாம்.. சொல்லப்போனால், பார்வதி, மகள் காமேசுவரியை, அடிக்கடி கண்டிப்பதற்கு, இதுவும், ஒரு காரணமே. வேலைக்காரர்களைக் கூப்பிடுவது என்றாலே, அவளுக்கு நாயே, பேயே, என்றுதான் வாயில் வரும் 'என் வயிற்றில் எப்படி வந்து பிறந்தாயோ? என்பார், பெற்றவர்.

சீலன், இதுபோன்ற விஷயங்களில், ரொம்பவும் பாட்டி மாதிரி.

அப்படிப்பட்டவன், இப்போது கழுதை, அதுஇது எனவும், எடுபிடிப் பையன், மிகவும், மிரண்டு போனான் போலும். "அய்யய்யோ, எனக்கு ஒண்ணும் தெரியாதுங்கோ. யாருன்னே தெரியாதுங்கோ. வச்சிடறேங்கோ" என்று, அடிக்கொரு 'ங்கோ' போட்டவன், மேலே, சீலன் எதுவும் சொல்லுமுன், 'ரிசீவரை' வைத்துவிட்டான்.



கையிலிருந்து டெலிஃபோன் கருவியை, உறுத்து, முறைபபது தவிர, சீலனால், அப்போதைக்கு வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

ஆனால், மூளை மரத்த அந்தச் செயலற்ற நிலை, ஒரு சில வினாடிகள் மட்டும்தான் நீடித்தது.

அந்த ஒரு சில வினாடிகளின் பின், அவனது மூளை இருமடங்கு வேகத்துடன், வேலைசெய்யத் தொடங்கிவிட்டது.

முதலில் அவன் மனம், ஓர் உண்மையை ஒப்புக்கொண்டது.

சுந்தர், சுமனா இருவரும் சேர்ந்து இவனை இந்த சீலனை, ஏமாற்றி விட்டார்களே!

சுந்தருக்கு, இந்தத் தைரியம் இந்தக் குயுக்தி வந்திராது! அவனைப் பின்னிருந்து ஆட்டி வைப்பவள், சுமனாவே, குள்ளநரித்தனமும் அவளதே. குறுக்குவழியில் சுந்தரை, அழைத்துச் செல்பவளும் அவளே தான்! பாவி! என்னமாய் நாடகம் ஆடிவிட்டாள்!

மகா உத்தமி மாதிரி, நடித்தாளே அவள், சினம் கொண்டதும், சீறியதும்!

எல்லாமே நடிப்பு என்றால், இப்போதுகூட, சீலனால், நம்ப முடியவில்லை.

நம்பித்தான் ஆகவேண்டும்! யாராலும் ஏமாற்ற முடியாது என்று பெயர் வாங்கிய அவனையே, ஏமாற்றி விட்டாள், என்றால் அவளது நடிப்புத் திறமையைப் பாராட்டவும் வேண்டும்தான்.

அவள் மட்டுமா நடித்தாள்?

சுந்தரையும்தான் என்னமாய் நடிக்க வைத்துவிட்டாள்!

சுமனாவின் இழப்புக்குத் தயாராகி விட்டது போலவும், நளினியிடம் ஆர்வம், உண்டாகி விட்டது போலவும், அவனும்தான், எவ்வளவு பிரமாதமாக நடித்தான்? எல்லாம், அந்த சுமனா கொடுத்த பயிற்சி.

ஆனால், இதெல்லாம், நடந்து முடிந்த கதை! இதை நினைத்துக் கொதிப்பதால், வீண் வருத்தம் தவிர, ஒரு பயனும் கிடையாது. அதைவிட, நடந்ததை அடியோடு ஒதுக்கிவிட்டு, நடக்கப் போவதை - நடக்க வேண்டியதைப் பற்றி யோசிப்பது, நல்லது.

நல்லது என்று இனிமேல், பெரிதாக ஒன்றும் நடப்பதற்கு இல்லை. ஆனால், கெடுதல், நடக்காமல் தடுக்கலாம் அல்லது... ஒருவேளை... சே... மூடமனம் என்பது இதுதான் போலும்... ஆனாலும்.....

தன் மீதே கோபம் கொண்டவனாக, சீலன், எழுந்து, சற்றுநேரம் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான்.

பிறகு, ஓரளவு சமனப்பட்டவனாக, உட்கார்ந்து, மேற்கொண்டு, என்ன செய்வது என்று யோசித்தான்.

இந்தத் திருமணத்தை எப்படியும் - எப்படியாவது தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

அதற்கு இப்போது, உடனே, அவன் கிளம்பியாக வேண்டும்.

அத்தை காமேசுவரியையும் கூட்டிக்கொண்டு போகலாமா என்று யோசித்துவிட்டு, சீலன், அந்த எண்ணத்தைக்



கைவிட்டான். கத்தி ரகளை செய்வாள், வாய்க்கு வந்தபடித் திட்டுவாள். மற்றபடி, அவளால், ஒரு பிரயோஜனமும் இராது. அத்தோடு, விதிவசமாய், அவனால் தடுக்க இயலாமல், அங்கே திருமணம் நடந்துவிட்டிருந்தால், இவள் இடும் சாபங்களே, மணமக்களைத் தீய்த்துவிடும். அது எதற்கு, அனாவசியமாய்?!

முடிந்தவரை தடுக்கவேண்டும். மீறி நடந்துவிட்டால், 'எங்கிருந்தாலும் வாழ்க' என்று, ஒதுங்கிக் கொள்ள வேண்டியதுதான்.

எண்ணம் இப்படி ஓடியபோதும், எப்படியும் சுந்தர் - சுமனா திருமணத்தை நிறுத்தியே ஆகவேண்டும் என்பதிலும், அவன் வெகு உறுதியாகவே இருந்தான்.

எப்படி?

படிப்படியாக, என்னென்ன செய்ய வேண்டும் என்பதை சீலன் திட்டமிட்டான்.

முதலில், இங்கிருந்து கிளம்பி, மதுரைக்குச் செல்ல வேண்டும்.

மதுரை செல்வது அப்படி ஒன்றும் பெரிய காரியம் அல்ல. இப்போது மணி ஏழு தான். உடனே, கிளம்பினால், இரவு இரண்டு மணிக்கெல்லாம், அங்கே போய்ச் சேர்ந்துவிடலாம். ஆனால், தலைமைப் பொறுப்பில் இருந்துகொண்டு, அப்படி, எல்லாவற்றையும் உதறிவிட்டுப் போய்விடமுடியாது. நாளைய வேலைகளுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் தான் கிளம்ப முடியும்.

முக்கியப் பொறுப்பில் இருப்பவர்களோடு தொடர்பு கொண்டு, மறுநாளைய வேலையை, அவர்களுக்குச் சொல்லிவிட்டு, 'காலண்'டரை எடுத்துப் பார்த்தான்.

ஒன்பதரையிலிருந்து பத்தரைவரை நல்லநேரம் என்று அதில் போட்டிருந்தது.

பரவாயில்லை. தேவையான அவகாசம் இருக்கும் என்று ஓரளவு திருப்தியுடன், கிளம்புகிற வேலையைப் பார்த்தான்.

மதுரையை நோக்கிக் காரை ஓட்டியவாறே மேற்கொண்டு செய்ய வேண்டியதைத் திட்டமிட்டான்.

எந்த ஆயுதத்தை வைத்து, முன்பு, சுமனாவை, அவன் மடக்க எண்ணினானோ, அதே ஆயுதத்தைக் கொண்டுதான், இப்போதும், அவளை, வென்றாக வேண்டும். பிடியை, அவன் விட்டுவிட்டது உண்மை தான். ஆனால், அவளுக்கு, அது, தெரியாதே.

மறுநாள் காலையில், சுமனாவுக்கு, ஒரு ஃபோன்கால்' வந்தது. பேசியவன், சீலன்.

காலையிலேயே எழுந்து, சுமனா, திருமணத்துக்கான வேலைகளில் ஈடுபட்டிருந்தாள். அப்போதுதான், சீலன், அவளை அழைத்துப் பேசினான்.

சென்னையிலிருந்து பேசுவதாகச் சொன்னவன், அழைத்த விஷயம் பற்றிச் சொன்னான்.

"உன் தம்பியின் உபகாரச் சம்பள விஷயம், சுமனா அன்று, நீ சொன்னமாதிரி, நம் இருவர் விவகாரத்தில், கண்ணன் வாழ்வைக் கெடுத்துவிட்டோமோ என்று, உறுத்தலாக இருந்தது. அதனால், மீண்டும் மிஸ்டர் தனசேகரைப் போய்ப் பார்த்தேன். திரும்பவும் 'பல்டி' அடிப்பதா? என்கிறார். என்னால், முடிந்த அளவு சொல்லியிருக்கிறேன். கிட்டத்தட்ட சரி என்றிருக்கிறார்.



இப்போது நீ, அவரைச் சந்தித்துப் பேசினாயானால், உன் குடும்ப நிலைமையைத் தெளிவாக, எடுத்துச் சொன்னாயானால், உதவித்தொகையைத் தொடர்ந்து தந்து விடுவார். என்ன? இன்று காலையிலேயே, போய்ப் பார்க்கிறாயா?" என்று கேட்டான்.

கடிகாரத்தை, எட்டிப்பார்த்துவிட்டு, "இன்றைக்கேயா?" என்று சுமனா தயங்கினாள்.

ஆமாம், கல்யாணப்பெண் இல்லையா? கல்யாணத்தைத் தவிர, வேறு எதையும் நினைக்கவோ செய்யவோ கஷ்டமாகத்தான் இருக்கும் என்று உள்ளூர ஏளனமாய் எண்ணியபடி, "ஆமாம், சுமனா அவர், மதுரையிலிருப்பது, சில மணி நேரம்தான். அப்புறம், எட்டு, எட்டரைக்குத் திருச்சிக்குக் கிளம்பிவிடுவார். அதனால், நீ, இப்போதே, கிளம்பிப் போனால், அவருடன் பேசிவிட்டு, எட்டு மணிக்குள்ளாகத் திரும்பி விடலாம்" என்றான், சீலன்.

மீண்டும் கடிகாரத்தைப் பார்த்துவிட்டுச் "சரி" என்றாள், சுமனா. எட்டுமணிக்குத் திரும்பி வந்துவிட்டால், ஒன்பதரை மணித் திருமணத்துக்குத் தாராளமாகத் தயாராகி விடலாம் என்பதால், சுமனா, கவலையின்றிக் கிளம்பி வருவாள் என்று கணக்கிட்டே சீலன், நேரக் கணக்குச் சொன்னது.

கூடவே, இன்னொன்றும் சொன்னான். "நீ, உன் சைக்கிளில் போ, சுமனா, இன்று, முகூர்த்த நாள், கார், 'ஆட்டோவில் போனால், போக்குவரத்து நெரிசலில், மாட்டிக் கொள்வாய், பிறகு, தாமதமாகி விடக் கூடும் ...வந்து காலை வேளைகளில், தங்கத்தால் அதிக நேரம் பார்த்துக் கொள்ள முடியாது அல்லவா?"

பொதுவாகத் தன் சொந்த விஷயமாக வெளியே செல்லும்போது, சுமனா சைக்கிளைத்தான் பயன்படுத்துவது. ஆனால், கல்யாணப்பெண், சைக்கிள் மிதித்து, வேர்த்து, வந்து நின்றால், பார்க்க நன்றாயிராதே, என்று யோசிப்பாளோ, என அவனுக்கு, ஒரு சந்தேகம் தோன்றியிருந்தது.

இடைப்பட்ட ஒன்றரைமணி நேரத்தில், தேவைப்பட்ட அலங்காரம் செய்துகொள்ள முடியும் என்றாலும் இப்போதே, சுமனா, சொகுசு தேடத் தொடங்கியிருந்தால்?

இந்தச் சந்தேகத்தால்தான், சீலன், போக்குவரத்து நெரிசல் பற்றிப் பேசியது.

அவனுக்கு, அவள், தனியே வரவேண்டும். அவளோடு, ஒரு காரோட்டியும் கூட வருவது அவனது திட்டத்துக்குக் கொஞ்சமும் சரிப்படாது.

அவன் எதிர்பார்த்தது போலவேதான் அவளும் செய்தாள்.

பார்வதி அம்மாளிடம், சுருக்கமாக, விவரத்தைச் சொல்லி, அவள் வரச் சற்றுத் தாமதம் ஆனால்கூட, மற்றவர்கள் மண்டபத்துக்குச் செல்லும்படி ஏற்பாடு செய்துவிட்டு, சுமனா கிளம்பினாள்.

சீலனின் பேச்சை நம்பி, அவன் சொன்ன இடத்துக்குச் சென்றவள், அங்கே, திருவாளர் தனசேகருக்குப் பதிலாக, சீலனைக் காணவும், திகைத்து நின்றாள்.

சென்னையிலிருந்து பேசுவதாகச் சொன்ன சீலன், இங்கே எப்படி வந்தான்? எண்ணியதை, வாய் விட்டுக் கேட்டாள்.

"சொல்லுகிறேன். முதலில், உள்ளே வந்து உட்கார்" என்றவன், அவள் உள்ளே சென்றதும், செய்த காரியம், சுமனாவைத் திகைக்க வைத்தது.



ஏனெனில், வாயில் கதவைச் சாத்தி, சாவியினால் பூட்டி, சாவியை எடுத்துக் கொண்டிருந்தான், அவன்.

பொதுவாக, எதற்குமே சுமனா சட்டென்று நிலைகுலைந்து போகிறவள் அல்ல. குடும்பத்தின் மற்ற மூன்று அங்கத்தினரும், செய்வது அறியாமல் கலங்கித் தவித்த காலத்தில் கூடத் துணிந்து நின்று, செயல் பட்டவள் அவள்.

அத்தோடு, சீலன், அவள் அறியாத அன்னியனும் அல்ல. பெற்ற தாயைப் போல அவள் கருதும் பார்வதி அம்மாளின் பிரியத்துக்குகந்த பேரன். தவறான கருத்துகளின் அடிப்படையில் முதலில் செயல்பட்டவன் என்றாலும், இப்போது இதை உணர்ந்து, திருத்திக் கொண்டிருப்பவன்.

எனவே அவள் கதவைப் பூட்டியதும், சுமனா, ஒன்றும் அரண்டு போய்விடவில்லை.

மாறாக, " ஏன், கதவைப் பூட்டுகிறீர்கள்?" என்று அமைதியாகவே கேட்டாள்.

தைரியம்தான் என்று எண்ணியவாறு, "உன்னை இந்த அறையில் சில மணி நேரம் சிறை வைக்க" என்று, அவனும், அமைதியான குரலிலேயே பதில் சொன்னான்.

"சிறையா? எதற்காக?" என்று, அப்போதும், பதட்டமின்றி தான், அவள் கேட்டாள். விவரம் அறிய விசாரிக்கும் தொனிதான்.

"இந்தத் திருமணத்தை நிறுத்துவதற்காக" என்றான், அவனும் அவளைப் போலவே.

பார்வையில் ஒரு மின் வெட்டுடன், "இந்தத் திருமணத்தை நிறுத்துவதற்காக, என்னைச் சிறை வைக்கிறீர்களா?" என்றாள் சுமனா.

"புரிந்துகொண்டால், சரி."

கண்ணில் குறுகுறுப்புடன், சீலனைப் பார்த்தாள், அவள்.

"என்ன?"

"சீப்பை ஒளித்து வைத்துவிட்டால், திருமணம் நின்றுவிடுமா?" என்று ஒரு பழமொழி சொல்வார்கள்."

"அப்படியென்றால்? உன்னை ஒரு சீப்பு அளவுக்குத்தான் சுந்தர், மதிக்கிறான் என்கிறாயா? அல்லது, எப்படியும், திருமணம் நிற்காது, என்கிறாயா?"

அவனைக் கேலியாக நோக்கி, "நீங்களேதான் சொல்லுங்களேன், இன்றைக்கு திருமணத்தைத் தடுத்துவிட்டால், இனி என்றைக்குமே, அது நடக்காதா?" என்று கேட்டாள், அவள்.

"என்றைக்குமே, நீ, சுந்தரை மணக்காமல் பண்ண என்னால் முடியும்" என்று, இறுகிய குரலில் சீலன் கூறினான்.

"ம்கூம்?" என்று அலட்சியமாய் உதட்டைப் பிதுக்கினாள் அவள். "எப்படியோ?"

சட்டென்று, சுமனாவின் கையைப் பிடித்து, இழுத்து அவளை எழுப்பி நிறுத்தினான், சீலன். "நீ வந்ததிலிருந்து என்னைச் சீண்டிக் கொண்டே இருக்கிறாய்? இந்த இடத்தில், என்னிடம், நீ, தன்னந்தனியாக மாட்டிக்கொண்டு இருக்கிறாய் என்பதை, நினைவில் வைத்துப் பேசு. இங்கே, நான் உன்னை என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும், நினைவிருக்கட்டும்" என்றான், மிரட்டலாக.



தலைசரித்து ஒரு பறவையாய் அவனை நோக்கி, "பயமுறுத்திப் பார்க்கிறீர்களா? அப்படி நீங்கள் என்னை என்ன செய்ய.." என்று, ஏளனமாகப் பேசியவளின் இதழ்களை, மேலே பேச முடியாமல், சீலனின் உதடுகள் மூடின.

திகைத்து நின்றவளை, விலக்கி நிறுத்தி, "என்ன செய்வேன் என்று, இப்போது புரிகிறதா? இனிமேலாவது, புத்தியோடு நடந்துகொள், சுந்தரை விட்டுவிடு" என்றான், சற்றே கரகரத்த குரலில்.

பார்வையை அவன் முகத்திலேயே நிறுத்தி, "அது, என் கையில் இல்லை என்றால்? என்னால் முடியாத, காரியம் என்றால்?" என்று கேட்டாள், சுமனா.

"அப்புறம், நான் அளவு மீற வேண்டியிருக்கும்."

"இப்போது போலவோ?"

"இதைவிட அதிகமாக, வீணாக உடம்பு நொந்து போகாதே, சுமனா. ஒரு வக்கிரம் பிடித்தவன் தவிர, யாராலும் ஒரு கற்பழிப்பை ரசிக்க முடியாது என்று படித்திருக்கிறேன். என்னை, நீ அந்த நிலைக்குத் தள்ளாதே. சொல்லிவிட்டேன்."

சீலனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, திரும்பி நடந்து சோஃபாவுக்குச் சென்று இலகுவாக அமர்ந்துகொண்டாள், சுமனா. பிறகு, "ஒரு புத்தகத்தில் ஒரு கற்பழிப்பைத் தடுக்க முடியவில்லையானால், கூடச் சேர்ந்து அதை ரசிக்கத் தொடங்கிவிடு என்று யாரோ சொன்னதாகப் படித்தேன்" என்று சொல்லி விட்டுக் கண்ணில் சவாலுடன், அவனை நோக்கினாள்.

"சீ-என்ன அசிங்கமாகப் பேசுகிறாய்?" என்றான், சீலன் கோபமாக.

"ஏன்? நீங்கள் பேசினால் அது. அசிங்கம் இல்லையா? நான் சொல்லும்போதுதான், உங்களது மென்மையான, மேன்மையான உணர்வுகள் எல்லாம் நடுங்கிப் போகின்றனவாக்கும்?" என்று அவள், பளிரென்று திருப்பிக் கொடுக்கவும், ஒருகணம் திகைத்து நின்றான்.

பிறகு, அவனும், அவள் அருகே வந்து அமர்ந்தான். அவளது ஒரு கையைத் தன் கையில் எடுத்து "என்னை மன்னித்து விடு. ஆனால், சுந்தரை, நீ, மணப்பதை என்னால் அனுமதிக்க முடியாது. சுமனா" என்று தெளிவாக உரைத்தான்.

"உங்களை யார் அனுமதிக்கச் சொன்னது?" என்று அவள் குறும்பாகக் கேட்கவும், மீண்டும், சீலனின் சுதி ஏறிற்று.

சுமனாவின் கைகளை அழுந்தப் பற்றி, "சுமனா!" என்று அதட்டினான்.

அவள் பேசாமல் முறுவலிக்கவும் தணிந்து, "இங்கே என்ன நடக்கிறது சுமனா?" என்று அமர்ந்த குரலில் விசாரித்தான்.

முகம் மலர, " இப்படிக் கேட்டால்தானே சொல்லலாம்!" என்றாள், அவள்.

"சொல்லுவதுதானே?" என்றான், அவன் அவளையே நோக்கி.

"தாராளமாய் இப்போது மணி என்ன? எட்டரையா? இப்போது, என்னை இன்னும் காணோமே என்று, எல்லோரும் குழம்பிக்கொண்டு இருப்பார்கள்..." என்று சுமனா ராகம் இழுக்கவும், அவள் தோளைப் பற்றி லேசாக உலுக்கி, "ஏய்...!" என்று அதட்டினான்.



அவள் பழையமாதிரியே தொடர்ந்தாள். " ஆனால், அதற்காகக் கல்யாண மண்டபத்துக்குக் கிளம்புவதை நிறுத்தமாட்டார்கள். மணமகன், மணமகளோடு, மற்றவர்கள் எல்லோரும், மண்டபத்துக்குப் போய்விடுவார்கள். அப்புறமும், நான் போய்ச் சேரவில்லை என்றாலும், காத்திராமல், திருமணத்தை நடத்தி விடுவார்கள். ஏனென்றால், கல்யாணப் பெண்ணும், மாப்பிள்ளையும் அங்கே இருக்கும்போது, வெறும் சீப்பை ஒளித்து வைப்பதினால், திருமணத்தை நிறுத்த முடியாது" என்று ராகத்துடனேயே முடித்தாள்.,

சீலனின் முகத்தில், தொடக்கத்தில் இருந்த திகைப்பு மாறிவிட, "மைகாட்! கல்யாணப்பெண், நளினி" என்றான். " இந்த மடையன், அதை என்னிடம் சொல்லித் தொலைப்பதற்கென்ன?"

"எந்த மடையன்?"

"இளங்கோ நேற்று நான் ஃபோன் செய்தபோது, திருமணம் சுந்தருக்கு என்றவன், பெண் யார் என்று சொல்லாமல், ஏதேதோ உளறி மழுப்பிவிட்டான், முட்டாள்"

"அவன் ஒன்றும், முட்டாளோ, மடையனோ இல்லை. நளினி மணமகள் என்று யாரிடமும், சொல்லக்கூடாது என்று நாங்கள்தான், வீட்டில் எல்லாரிடமும் சொல்லி வைத்திருந்தோம். அதை அப்படியே பின்பற்றினானே தவிர, அவன் ஒன்றும் முட்டாளோ, மடையனோ கிடையாது" என்றாள் சுமனா.

"தப்பாகப் புரிந்துகொண்ட நான்தான், அந்த மு..ம..எல்லாம் சொல்லாமல் சொல்கிறாயாக்கும்?" என்று கேட்டபோதும், சீலனின் முகத்தில் கோபம் மறைந்திருந்தது.

மென்னகையோடு, சுமனா, அவனையே பார்த்துக் கொண்டிருக்கவும், அவன் முகத்தில் இருந்த இறுக்கமும் அடியோடு மறைந்து, அவன் முகத்திலும் முறுவல் மலர்ந்தது.

மீண்டும் சுமனாவின் கையைப் பற்றி மிருதுவாக வருடியபடி, "இதெல்லாம் என்ன என்று எனக்கும் சொல்லலாமில்லையா? இப்போதாவது?" என்று கேட்டான். "எதற்கு இந்த அவசரத்திருமணம்? நளினியின் பெயர் ஏன் ரகசியமாக இருக்க வேண்டும்?"

சுமனாவும் எதையும் மறைக்கவில்லை.

நளினியின் சொத்து பற்றி மோப்பம் பிடித்த, அவளுடைய சில உறவினர்கள், ரொம்பவுமே வளமை குறைந்தவர்கள், அவளை, அங்கேயே கட்டிப் போட்டு வைத்தால், அந்தச் சொத்தை அனுபவிக்கலாமே என்று எண்ணினர், பார்வதியும் எதாவ்து தருவார் என்ற நம்பிக்கை வேறு. சும்மா அழைத்துப்போகிற மாதிரிப் போய்த் திருமணத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவள், எப்படியோ, பாட்டியின் சம்மதம், அப்படி இப்படி என்று சமாளித்து, இங்கே வந்துவிட்டாள். அவர்கள், சந்தேகப்பட்டு திரும்பவும் வந்து நிற்குமுன், ஓசைப்படாமல் அவளுக்குக் கல்யாணத்தை முடித்துவிடப் பார்வதி அம்மாள் முடிவுசெய்து, நடத்துகிறார்.

"எல்லாம் சரிதான். ஆனால், உன்மேல் பைத்தியமாய் இருந்த சுந்தர், நளினியை மணக்க எப்படிச் சம்மதித்தான்?"

"நீங்கள் என்னிடம் குற்றம் காண்பதிலேயே இருந்தீர்கள், கொஞ்சம், கண்ணைத் திறந்து பார்த்திருந்தால், நானாக எத்தனை முறை சுந்தரை நளினியோடு அனுப்பினேன் என்று கண்டிருப்பீர்கள்" என்றாள் அவள் குறையோடு.



"தப்புதான் அத்தை தீட்டிய வர்ணம், சுந்தர் காட்டிய ஆர்வம், எல்லாம் வைத்து முதலிலிருந்து உன்னைத் தப்பாகவே எடை போட்டு விட்டேன். ரொம்பவும் சாரிம்மா" என்று பிடியிலிருந்த அவளது கையைத் தூக்கி முத்தமிட்டு, சீலன் மன்னிப்புக் கேட்டான்.

கூடவே, "ஆனால், அதனாலேயே அவன் மனம் மாறிவிட்டானா? ஆச்சரியமாய் இருக்கிறதே" என்று வியந்தான்.

"அதிலேயே என்று இல்லை. ஆனால், அதுதான் தொடக்கம். நளினி வேறு சுந்தர் மேல் உயிரை வைத்திருந்து, அவர் சொன்னதற்கெல்லாம் 'ஆமாம்' போட்டது. என் திட்டத்துக்கு மிகவும் உதவியாக இருந்தது. அப்புறம், அவன் நிலை என்ன, அவள்கதி என்ன ஆகும்? என்றெல்லாம் எடுத்துச் சொன்னேனா ஆள் சரணாகதி அடைந்துவிட்டார்" என்று சிரித்தாள், சுமனா.

கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு, "நளினியிடம், உனக்கு இவ்வளவு அன்பு என்று எனக்குத் தெரியாது சுமனா. உன் பெயருக்கேற்றபடியே, உன் உள்ளமும் இருப்பது அப்போது எனக்குத் தெரியாமலே போயிற்று" என்று சிறு வருத்தத்துடன், சீலன், இயம்பினான்.

ஒருகணம் பேசாதிருந்துவிட்டு பாவம், ரொம்பவும் வருத்தப்பட்டு விடாதீர்கள். எனக்கு அவள்மேல் அப்படி ஒன்றும் பிரியம் எல்லாம் கிடையாது. சும்மா 'உம்' என்று இருக்கிறதே இந்தப்பெண் என்று எரிச்சல் கூட வரும். ஆனால்..." என்று கடைக்கண்ணால், அவனை ஒருதரம் நோக்கிவிட்டு மீண்டும் தொடர்ந்தாள். முதல்முதலாக என்னை என்ன என்ன எல்லாம் சொல்லி, நான் சுந்தருக்கு மனைவியாக

முடியாது என்றீர்கள். நினைவிருக்கிறதா? கிட்டத்தட்ட அதேநிலையில் உள்ள ஒரு பெண்ணை, கொஞ்சம் சொத்து தவிர, நளினி அப்படித்தானே? அதனால், அவளை, சுந்தருக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்கிற பழிவெறியில் தொடங்கியதுதான். ஆனால், பாவம், அவளும், அன்புக்கு ஏங்கிக்கொண்டு இருந்திருக்கிறாள். அப்புறம், மெய்யாகவே, பிடித்துப் போய்விட்டது" என்று, தன் விளக்கத்தை முடித்தாள்.

"நீ, சரியான பயங்கரி என்று இப்போது அல்லவா தெரிகிறது?" என்று, அவள் மூக்கைப் பிடித்து ஆட்டினான் அவன். "பிற்காலத்தில் உன்னிடம், நான் என்ன பாடுபடப் போகிறேனோ, நினைக்கவே பயம்ம்மாக இருக்கிறது" என்று அவன் பயந்தவன் போலப் பாவனை பண்ணவும், கலீரென்று சிரித்தாள், சுமனா.

பச்சரிசிப் பல் காட்டி அவள் சிரிப்பதை, ஆவலாகப் பார்த்திருந்து விட்டு, சீலன் சட்டென எழுந்தான்.

எழுந்து போய்க் கதவைத் திறந்தவன், அங்கேயே நின்றபடி, "இனியும், நாம் இருவரும் மட்டுமாக இங்கே தனியாக இருந்தால், நான் முன்சொன்ன தப்புக்குப் பதிலாக வேறு தப்பு ஏதாவது நடந்தாலும், நடந்து விடும். அதனால் கிளம்புவோமா?" என்று கேட்டு வெளியே கால் எடுத்து வைத்தான், அவன்.

கன்னம் சிவந்தபோதும் கலகலவென்று நகைத்தபடி, அவனைப் பின்தொடர்ந்தாள், அவள்.

✡✡✡✡